
https://tamileelamarchive.com/

ஏப்ரல் 2006

# எரிமலை
# ERIMALAI



https://tamileelamarchive.com/

# எரிமலை வெள்ளி மலர்

புலம்பெயர் மண்ணில் வெளிவந்துகொண்டிருக்கும் எரிமலை சஞ்சிகை தனது இருபத்தைந்தாவது வருடத்தைக் கடக்க இருக்கின்றது. எரிமலை சஞ்சிகையின் சமூக, இலக்கிய, அரசியல், மானுடப் பணியை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து கொண்டிருக்கும் மூத்த, இளைய படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்கள் வரவேற்கப் படுகின்றன. மொழிபெயர்ப்புக்களும், கட்டுரைகளும், கவிதைகளும், குறுநாவல்களும் வரவேற்கப்படுகின்றன.


எரிமலை

## இலக்கியப் போட்டி

- எரிமலை சஞ்சிகை நிர்வாகத்தினர் சமகாலத்திலேயே கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல்களுக்கான போட்டிகளையும் நடாத்தத் தீர்மானித்திருக்கின்றனர்.
- சர்வதேசஅளவில் படைப்பாளிகளை கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றனர்.
- மேலும் ஓவியம், கார்ட்டூன், குறும்படப்பிரதி, நவீன நாடகப்பிரதி, பாடல்கள், புகைப்படங்கள் ஆகியனவும் போட்டிக்காக உலகஅளவில் வரவேற்கப்படுகின்றன.

எரிமலை சஞ்சிகையின் வெள்ளிவிழா மலரில் வெற்றிபெறும் படைப்புக்கள் பிரசுரமாக உள்ளன

படைப்புக்களை அனுப்புவோர் மூலப்பிரதிகளை வைத்துக்கொண்டு ஒளிநகலை மட்டும் அனுப்பி வைப்பது விரும்பத்தக்கது.



மின்னஞ்சல் மூலம் அனுப்புவோர் :

e.mail: info@erimalai.info

தபால் மூலம் அனுப்புவோர்:

ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrenees,
75020 Paris, FRANCE.

போட்டிகளுக்கான முடிவுத் திகதி: 31.07.2006

போட்டிகளுக்கான பரிசில்கள் பின்னர் அறிவிக்கப்படும்

https://tamileelamarchive.com/




உள்ளே---




நேர்காணல் பா. நடேசன்

தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர்




போரும் சமாதானமும் ஒரு பார்வை




நேர்காணல் தமிழ்க்கவி

## கட்டுரைகள்


தா.விவேகானந்தன் 08

நாதன் 12

நிலாந்தன் 43


## நேர்காணல்கள்


பா. நடேசன் 04
தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர்

தமிழ்க்கவி 16


## கருத்துப்பகிர்வு


கலாநிதி முருகர் குணசிங்கம் 48


## உண்மைப்பதிவு


மணலாறு விஜயன் 56


## கவிதைகள்


ந.கிருஷ்ணசிங்கம் 14, 27

அன்புக்கரசன் 28

தி.தவபாலன் 30

வாசுதேவன் 32

சு.வில்வரெத்தினம் 36

மு.பொ 46

சீனத்துக் கவிதைகள் 54

எ.ஜோய் 60


## சிறுகதைகள்


ஆதித்தநிலா 40

எட்னா மறிஸ்கா மேரே அபின்டா 51
மொழியாக்கம் - கௌரி

சித்திரா சுதாகரன் 58

https://tamileelamarchive.com/



தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...

"எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள்; கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசியப்போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல; அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் - அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்."

தமிழீழத் தேசியத் தலைவர்

மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

https://tamileelamarchive.com/




## சிறீலங்கா இராணுவத்தில் முஸ்லிம் படைப்பிரிவு

ஜே.ஆர் ஜெயவர்த்தனா தொடங்கிய திருப்பணியை மகிந்தர் முடித்து வைக்கத் துணிந்து விட்டார். தமிழ் - முஸ்லிம் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்காக 1980 களில் முஸ்லிம் ஊர் காவற் படையினரை ஜெயவர்த்தனா அரசு உருவாக்கியது. இவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதப்பயிற்சியும் ஆயுதங்களும் கிழக்கிலும் திருகோணமலையிலும் வாழும் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. காலம் காலமாக வாழ்ந்த கிராமங்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டனர், எண்ணில் அடங்காதோர் முஸ்லிம் ஆயுததாரிகளால் கொல்லப்பட்டனர். யாழ் தீபகற்பம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதி முஸ்லிம்கள் செப்ரெம்பர் 1990 இல் அகற்றப்படுவதற்கு கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம் காடையர்கள் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகள் நேரடிக் காரணமாக அமைகின்றன. இரு பகுதியும் அண்மைக்காலமாகத் தத்தம் தவறுணர்ந்த நிலையில் நல்லுறவைக் கட்டியெழுப்பத் தொடங்கியுள்ளனர். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிங்களப் பேரினவாதம் ஒரு புதிய நயவஞ்கத் திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இலங்கை இராணுவத்தின் முஸ்லிம் படைப்பிரிவுக்கு ஆட்சேர்ப்பு மார்ச் 29 ஆம் தொடங்கி ஏப்ரல் 05 ஆம் நாள் வரை நீடிக்கும் என்று உத்தியோகபூர்வ அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது. ஒரு வாரம் நீடிக்கும் இந்த ஆட்சேர்ப்பு பல வருடத் தாக்கத்தை தன் பால் கொண்டுள்ளது. ஊர்காவற்படையால் தோன்றிய வன்முறைகளால் பாதிப்புற்ற தமிழர்கள், முஸ்லிம் படைப்பிரிவால் வரப்போகும் கொடூரத்தை எண்ணித் தவிக்கின்றனர். தமிழ் பேசும் இனங்கள் என்ற குடையின் கீழ் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் இப்போது மோதும் நிலைக்கு வந்துள்ளனர். இதற்குச் சிங்களப் பேரினவாதமே அடிப்படைக் காரணம் என்பதை முஸ்லிம் தலைவர்கள் அறிந்தும் அறியாதவர்கள் போல் நடிக்கின்றனர். சிங்களவர்களோடு இணைந்து சிங்கள இராணுவத்தின் சீருடை அணிந்து தமிழர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முஸ்லிம் இளைஞர்கள் தயாராகிவிட்டார்களா? சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் இதைக் கேட்க வேண்டும். இதற்காகக் கொடுக்க வேண்டிய விலை என்ன? விலையைக் கொடுப்பவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா என்றும் கேட்க வேண்டும். விதைத்தவர்கள் அறுவடை செய்வார்கள் என்பது பொய்யா மொழியும் வரலாற்றுப் பாடமுமாகும்.

இந்தியாவை விடுதலைப்புலிகளுக்கு எதிராக மீண்டும் வரவழைக்கும் முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் இப்போது பாகிஸ்தான், சீனா, மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றை வரவழைக்கும் திட்டத்தை சிங்கள அரசு செயற்படுத்துகிறது. பாகிஸ்தானின் நட்பை சிங்கள தேசம் மதித்து நடக்கிறது. புலிகள் யாழ்ப்பாணத்தை நெருங்கியபோது படையும், ஆயுதமும் தந்துதவிய நாடு என்று பாகிஸ்தான் புகழப்படுகின்றது. ஐ.எஸ்.ஐ எனப்படும் பாகிஸ்தான் இராணுவத்தின் புலனாய்வுத்துறை தலைமை அதிகாரியாகப் பதவி வகித்த கேணல் பஷீர் வாலி இப்போது பாகிஸ்தான் தூதுவராக கொழும்பில் பதவி வகிக்கிறார். இவர் பாகிஸ்தானின் லக்ஷா - ஈ - தொய்பா பாணியில் ஒரு முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பை கிழக்கில் அமைத்துள்ளார். முஸ்லிம் இளைஞர்கள் பாகிஸ்தான் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர். ஜிகாத் என்ற துணைப்படை பாகிஸ்தானின் அனுசரணையோடு செயற்படுகின்றது. ஜிகாத்தின் பெருவடிவமாக சிறீலங்கா இராணுவத்தில் முஸ்லிம் படைப்பிரிவு தோற்றம் அடைகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களையும், தமிழர் தேசத்தில் ஜிகாத்தையும் பாகிஸ்தான் உருவாக்கியுள்ளது. நடக்கப்போவது என்ன, பொறுந்திருந்து பார்ப்போம், நெடுகாலம் பொறுத்திருக்க வேண்டியதில்லை.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
ஏப்ரல் 2006
இருபத்தைந்தாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ்

https://tamileelamarchive.com/

# தமிழீழக் காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களுடனான நேர்காணல்





நேர்கண்டவர்: தா.பாலகணேசன்

**தமிழீழக் காவற் துறையின் பயிற்சிக் கல்லூரி பற்றியும் அங்கு நடைமுறைபடுத்தப் படும் கல்வி பற்றியும் அறியலாமா?**

தமிழீழக் காவற்துறை ஆரம்பித்த காலத்திலிருந்தே பயிற்சிக் கல்லூரியும் இயங்கிவருகிறது.
அந்தக் கல்லூரியோடதான் காவல் துறையும் ஆரம்பிக்கப்பட்டது. இடப்பெயர்வுகள் காரணமாக அவ்வப்போது இடம்பெயருகின்ற இடங்களில் கூட தற்காலிகமாக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது நாம் வன்னிப்பெரு நிலப்பரப்பில் நிரந்தரமான காவல் துறைப் பயிற்சிக் கல்லூரியை உருவாக்கியிருக்கின்றோம்.

அங்கே காவற்துறை உறுப்பினர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் அளித்துவருகிறோம். மிகவும் ஆழமான பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வெளிநாட்டவர்களும் வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள்.
அடிப்படை பயிற்சியில் சட்டம், ஒழுங்கு தொடர்பான கல்வி வழங்கப்படுகிறது.
காவற்துறை தொடர்பான விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன,

https://tamileelamarchive.com/

எங்களுடைய போராட்ட வரலாறும் அவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. காவற்துறையில் பணி புரிபவர்களுக்கு அரசியல், வரலாறு பற்றிய அறிவு இருக்க வேண்டும் என்பதற்காக எமது அரசியலும் எமது இன வரலாறும் கற்பிக்கப்படுகிறது.

அப்பொழுது தான் அவர்கள் மக்களின் உண்மையான தொண்டர்களாக இருப்பார்கள். அது பற்றி ஒன்றும் விளங்காதவர்கள் சட்டத்தை மட்டும் தூக்கி வைத்திருப்பார்களாக இருந்தால் அதனால் பாதிக்கப்படுவது மக்கள் தான். அப்படித்தான் எல்லா இடங்களிலும் நடக்கிறது. ஆனால் எங்களுடைய காவல்துறைக்கு தமிழ் மக்களுடைய வரலாறு, போராட்ட வரலாறு போன்றவற்றை கற்பிப்பதோடு சட்டம் ஒழுங்கையும் கற்பிக்கின்றோம். உலகில் எவ்வாறு காவற்துறைக்கான அடிப்படைக் கல்வி புகட்டப்படுகிறதோ அதே போன்றுதான் எங்களுடைய காவல் துறைக்குமான கல்வி அமைந்திருக்கிறது. பயிற்சிகளும் அவ்வாறே அமைந்திருக்கின்றன. அடிப்படையில் சில ஒற்றுமைகளை கொண்டிருந்தாலும் விரிவடைந்து கொண்டு போகும் பொழுது நடைமுறைப்படுத்துகிற பொழுதுமே அந்தந்த காவல் துறையின் வெற்றியும் தோல்வியும் அமைகிறது. எங்களுடைய காவல்துறையிலிருப்பவர்கள் நிறைய அடக்குமுறைகளைச் சந்தித்தவர்கள். சிறீலங்கா அரசினுடைய அட்டூழியங்களைச் சந்தித்தவர்கள். பல துன்பங்களைக் கண்டவர்கள். அந்த சமூகத்திலிருந்துதான் இவர்கள் காவல்துறைக்கு வந்தவர்கள். ஆகவே அவர்கள் மனிதாபிமானம் தொடர்பாகவும், உரிமைகள் தொடர்பாகவும், மனித உணர்வுகள் தொடர்பாகவும் இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியவர்கள். அதனால்தான் எங்களுடைய காவல் துறையை வெற்றிகரமாக நடத்தக் கூடியதாக இருக்கிறது.

தமிழீழக் காவல் துறையினர் எவ்வாறான சமூகப் பணிகளில் ஈடுபட்டுவருகிறார்கள்

சட்டம் ஒழுங்கைப் பேணுவதுடன் சமூக விடுதலைக்கான செயற்பாடுகளிலும் இயங்கிவருகிறார்கள். கிராமம் கிராமமாகச் சென்று பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை அறிந்து அவர்களுக்குரிய வழி காட்டுதல்களை நிறையவே செய்து வருகிறார்கள். அதே போல மிக அண்மையில் சிறுவர்களுக்கான பிரிவொன்றினையும் உருவாக்கியுள்ளோம். அவர்களும் சிறுவர்கள் மத்தியில் சென்று சிறுவர் மேம்பாடு தொடர்பாக பணிபுரியும் அமைப்புக்களுடன் இணைந்து வேலைசெய்கிறார்கள். மக்களோடு மக்களாக நின்று அவர்கள் உழைத்துவருகிறார்கள்.

மக்களோடு இணைந்து செயற்படாதுவிடின் மக்களின் எஜமானர்களாக மாறி விடும் நிலையை இல்லாது ஒழிப்பதற்காகவுமே இவ்வாறான செயற்பாடுகளில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஆகவே மக்கள் பொது வேலைகளில் ஈடுபடும் பொழுது காவல்துறையினரும் அதில் ஈடுபடுகின்றனர்.

வீதிப்போக்குவரத்துப் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுகிறார்கள். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு வீதி ஒழுங்கு வசதிகளைச் செய்துகொடுப்பார்கள். குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்கான வகுப்புக்கள் எல்லா இடமும் நடத்தப்படும். கிராம முன்னேற்றச்சங்கங்கள், மக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடல்களை நிகழ்த்தி வருகிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களைச் சேகரிப்பார்கள். அவர்களுக்கு காவல்

குற்றவாளிகளும் எங்களுடைய மக்கள். அவர்களை நாங்கள் எங்களுடைய சகோதரர்களாகவே பார்க்கின்றோம். குடும்ப உறவுகள் போலவே தான் அவர்களையும் நடத்தி வருகின்றோம். அங்கு போய் வந்தவர்களை சந்தித்து நீங்கள் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள். நீ, நான் என்றுகூட அவர்களுடன் கதைப்பதில்லை. அண்ணே, ஐய்யா, தம்பி என்று உறவு முறைப் பெயர்களாலேயே அழைப்பார்கள் வித்தியாசமான உறவு. அது எங்களுடைய வாழ்க்கை முறையோடு வந்தவிடயம்.

துறையினுடைய கருத்துக்களை எடுத்துரைத்து குற்றச் செயல்களை தடுப்பதற்கான வழி முறைகளையும் வீதி விபத்துக்களிலிருந்து எப்படிப் பாதுகாப்பதென்பது குறித்தும் எடுத்துரைத்து வருகின்றனர்.

குற்றவாளிகள் சிறையில் எவ்வாறு பராமரிக்கப்படுகிறார்கள்?

குற்றவாளிகளும் எங்களுடைய மக்கள். அவர்களை நாங்கள் எங்களுடைய சகோதரர்களாகவே பார்க்கின்றோம். குடும்ப உறவுகள் போலவே தான் அவர்களையும் நடத்தி வருகின்றோம். அங்கு போய் வந்தவர்களை சந்தித்து நீங்கள் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள். நீ, நான் என்றுகூட அவர்களுடன் கதைப்பதில்லை. அண்ணே, ஐய்யா, தம்பி என்று உறவு முறைப் பெயர்களாலேயே அழைப்பார்கள் வித்தியாசமான உறவு. அது எங்களுடைய வாழ்க்கை முறையோடு வந்தவிடயம்.

எங்கட சமூகத்துக்குள்ள திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் என்பது அறவேயில்லை. தற்செயலாக ஏற்படுகிற சண்டைகள் சச்சரவுகள் தான் வரும் மற்றும் படி சின்னச் சின்ன களவுகளும் வரும். சைக்கிள் களவுகள் கூட இப்ப குறைஞ்சு போச்சு. பொருளாதாரத் தடையும் எடுத்த பிறகு சைக்கிளும் வரத்தொடங்கிற்று.

அனேகமான குடும்பஸ்தர்கள் ஏதாவது தவறுதல், குற்றங்கள் தொடர்பாக அங்கே வந்தால் நாங்கள் அவர்களுடைய குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்போம். சிலபேர் வேலை தளங்களில் தொடர்ச்சியாக நிற்பார்கள். சனி, ஞாயிறு வந்து செல்வார்கள். சிலரை வீடு சென்று வருவதற்குக்கூட நீதியாளருடைய அனுமதியுடன் அனுமதிக்கிறனாங்கள். நிறையப்பேருக்கு மக்களால் நடத்தப்படும் நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுத்திருக்கின்றோம். ஏனென்றால் அந்தக் குடும்பங்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சிலபேருக்கு தோட்டங்கள் இருக்கின்றன. கிழமையில இரண்டோ மூன்று நாட்கள் நீர் இறைத்து பராமரித்து வருவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். இளம் குடும்பத்தவராக இருந்தால் வெள்ளிக்கிழமை போய் திங்கள்கிழமை காலையில் திரும்பிவருவதற்கான வசதிகளைச் செய்துகொடுத்திருக்கிறோம் இது தலைவருடைய கண்டிப்பான

https://tamileelamarchive.com/











## தமிழீழக் காவல்துறைப் படையணியின் புதிய அணிக்கான பயிற்சி தொடங்கியது

தமிழீழக் காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் கல்லூரிக் கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமையில் 18.03.2006 அன்று காலை 7 மணிக்கு இப்பயிற்சி நிகழ்வு தொடங்கியது. நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி காவல்துறைக் கண்காணிப்பாளர் தனஞ் செயன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் தமிழீழக் காவல்துறைக் கொடியினை காவல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகனும் ஏற்றினர்.

உத்தரவு. பிணையாளரோட யாராவது பொறுப்பு நின்று அழைத்துக்கொண்டு போவார்கள். இதனால் நல்ல பெயரும் வரும் கெட்ட பெயரும் வரும். அவரோட எதிர்த்தரப்பாக இருந்தவர்கள் நினைப்பார்கள் 'என்ன வீட்டுக்கு விட்டு எடுக்கிறார்கள்' என. ஆனால் அவர்களோ தங்களுடைய பிரச்சனைக்குள் மட்டுமே நின்று பார்ப்பார்கள், ஒட்டு மொத்தமாக சமூகம், குடும்பம் என்ற பொது நோக்கில் பார்க்கமாட்டார்கள்.

சிறைச்சாலையில் சிறைக்கைதிகளுக்கு கல்வி புகட்டப்பட்டு வருகிறதா?

● சமூகத்திலிருக்கும் பெரியார்கள் இடைக்கிடையே வந்து வகுப்புக்கள் எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் சில விடயங்களை அவர்களுடன் கதைத்துப் பேசுவார்கள். மற்றும் படி அவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக நாங்கள் நிறைய சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்களை வரவழைத்துக் கொடுப்போம். வானொலி கேட்பதற்கான சகல வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் எல்லா விதமான செய்திகளையும் கேட்பார்கள், எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்பார்கள். கூட சிறையில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குவதால் எல்லாவற்றையும் விட அந்த விடயம் எங்களுக்கு பல இடங்களில் நன்மை பயத்திருக்கிறது. சிலபேர் அங்கிருந்து படித்து வெளியில் சென்று தொடர்ந்தும் வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபட்டு வருவதை பார்த்திருக்கிறோம். ஏனென்றால் புத்தகங்கள் வாங்க வரும் பொழுதும் எங்களை சந்தித்துச் செல்வார்கள். 'புது புத்தகம் வந்திருக்கு நீங்கள் வாங்கேல்லையோ' என்று கேட்டு விட்டுப் போவார்கள். அவ்வளவு தூரத்திற்கு அவர்கள் வளர்ந்து விட்டார்கள். சிலபேர் எழுத்தாளர்களாக உருவாகியிருக்கினம். புனைபெயர்களில் எழுதுகிறார்கள். நாங்கள் எழுதுவதற்கும் நிறைய உதவி செய்கிறனாங்கள். விருப்பமானாக்கள் ஏதாவது எழுதுவதுண்டா எழுதுங்கோ என்று. சிலபேர் கவிதைகள் கூட எழுதுவார்கள். புலிகளின் குரலுக்கு நிறைய கருத்துக்களை எழுதி அனுப்புவார்கள். சிறையில் இருப்பவரின் குடும்பத்திற்கு மாதா மாதம் கொடுப்பனவு கொடுக்கப்படும். அவர்களுடைய குடும்ப உறவினர்கள் வந்து அதைப் பெற்றுச்செல்வார்கள். பிள்ளை குட்டிக்காறர் குடும்பம் பாதிக்கக் கூடாது என்பதற்காக இந்த நடமுறையை பேணிவருகிறோம். அவர்களுக்கு சிறையில் நிச்சயமாக வேலை இருக்கும்.

சிறை என்று தொடங்கும் பொழுதே தலைவர் சொல்லிப்போட்டார் 'மற்ற ஜெயில் மாதிரி இருக்கக் கூடாது, நாங்கள் அவர்களை நல்வழிப்படுத்துவதாக இருக்கவேண்டும் வந்தவன் நிறைய குற்றச்செயல்களை படித்துக்கொண்டு போகக்கூடாது. படிக்கிறதற்குரிய வழி வகைகளை செய்து கொடுங்கோ' என்று.

இப்ப நாங்கள் ஒரு வாசிக சாலை ஒன்றை உருவாக்குவதற்கான ஒழுங்கொன்றையும் செய்து வருகிறோம். நிறைய நூல்களை எடுத்து போடப்போறம். ஏற்கனவே குட்டி வாசிகசாலை இருக்கு, அதை இன்னும் பெரிதாக்கப் போறோம். ■

https://tamileelamarchive.com/



தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன் பயிற்சியினைத் தொடங்கி வைத்தார்.

பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன

காவல்துறை ஆய்வாளர் இமாக்கிறெட், மன்னார் மாவட்ட தமிழீழ காவல்துறைக் கண்காணிப்பாளர் கண்ணாளன், முல்லை மாவட்ட கண்காணிப்பாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சிறப்புரை நிகழ்தினார்.

400-க்கும் அதிகமான புதிய காவல்துறை உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



# "மனித தத்துவம் உடைய காவல்துறையாக சிறீலங்காவின் காவல்துறை இல்லை"

**பா.நடேசன்**
தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர்

தமிழீழக் காவல்துறைப் படையணியின் புதிய அணிக்கான பயிற்சி தொடக்க நிகழ்வில் அவர் பேசியதாவது;

மனிதர்களை மனிதர்களாக மதிக்கின்ற மனித தத்துவம் உடைய காவல்துறையாக சிறீலங்காவின் காவல்துறை இல்லை. ஆகையால்தான் இன்று ஊழல், லஞ்சம் ஆகியவற்றில் படுமோசமாக, மனித உரிமைகளை மீறுகின்ற காவல்துறையாக சிறீலங்கா காவல்துறை உள்ளது என்று அமெரிக்க இராஜங்க செயலகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சிங்களப் பேரினவாத அரசினுடைய படுமோசமான கொள்கைகளை சிறீலங்காவின் காவல்துறை நடைமுறைப்படுத்தியதால்தான் எமது விடுதலைப் போராட்டம் தொடங்கியது.

சிறீலங்கா அரசின் பிற்போக்குத்தனமான கொள்கைகளைத் திணித்தமையினால்தான் ஊழல், கையூட்டுக்கள் அந்தக் காவல்துறை ஊறி வளர்ந்துள்ளது. சிங்கள மக்களையும் இன்று அது சித்திரவதை செய்கிறது. எமது விடுதலைப் போராட்டம் நியாயமான போராட்டம். மக்களின் மனித உரிமைக்கான போராட்டம். உண்மையான அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான எமது போராட்டத்தை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

அண்மையில் நடந்த ஜெனீவா பேச்சுவார்த்தையின் பிரதிபலிப்பும் கூட எமது போராட்டத்தை அங்கீகரிக்கும் அளவுக்கு கொண்டுபோகும். ஏனெனில் சர்வதேச சமூகத்திற்கு முன்னால் சிறீலங்கா அரசினுடைய பிரதிநிதிகள் ஒன்றைக் கதைத்துவிட்டு இங்கு வந்து அதற்கு எதிர்மாறான கருத்துக்கள், அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

சிங்களத்தின் உண்மை முகத்தை சர்வதேச சமூகமும் உணரத் தொடங்கிவிட்டது. எமது தேசியத் தலைவர் காலத்தில் அவரின் விடுதலைத் தத்துவத்தின் கீழ் அவரின் கோட்பாட்டின் அடிப்படையில் எமக்கான விடுதலை கிடைக்கும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்றார் பா.நடேசன். ■

https://tamileelamarchive.com/


## "சமாதான முகமுடி அணிந்த சிங்களக் கூத்தாடிகள்"

■ தா.விவேகானந்தன்

# போரும் சமாதானமும்

### ஒரு பார்வை

புகழ் பூத்த ரஷ்ய எழுத்தாளர் லியோ தால்ஸ்தாய் எழுதிய பிரசித்திபெற்ற போரும் சமாதானமும் என்ற நூல் போரின் கொடுமையையும் அன்பின் வலிமையையும் கூறுகின்றதென்றால் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மதியுரைஞர் திரு அன்ரன் பாலசிங்கம் அவர்களின் போரும் சமாதானமும் என்ற நூல் 50 ஆண்டுகளாக ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் முகமாக சிறீலங்கா இனவாத அரசுகள் போருக்கும் சமாதானத்துக்கும் இடையே மாறி மாறி நடத்துகின்ற அரசியல் சித்து விளையாட்டை விலாவாரியாக விளக்கி நிற்கிறது. தேசியத்தலைவர் அவர்கள் சென்ற வருட மாவீரர் தின உரையில் குறிப்பிட்டது போல், போரும் அற்ற சமாதானமும் அற்ற சூன்ய நிலையின் வலியை நூலின் பக்கங்களில் விரியும் சமாதான நாடகங்களை வாசிக்கையில் உணர முடிகிறது. திம்புவில் தொடங்கி ஜெனிவா வரை நீண்ட சமாதானப் பேச்சுக்களின் இன்றியமையாத பங்காளி என்ற சாதகமான சூழல், நிகழ்வுகளை ஆற்றொழுக்கான கோர்வையுடன் அலுப்புத் தராமல் விபரிப்பதைச் சாத்தியமாக்கியிருக்கிறது.



https://tamileelamarchive.com/



> தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் முதிர்ச்சி மிக்க அரசியல் சாணக்கியனாக, தமிழீழ களநிலை அறிந்தவராக, தேசிய தலைவரின் உணர்வுகளை மொழிபெயர்ப்பவராக, மூன்று தசாப்தங்களாக விரிந்த ஆயுதமேந்திய விடுதலைப்போரின் வாழுகின்ற சாட்சியாக, திம்பு முதல் ஜெனிவா வரை சமாதான பேச்சுக் களில் கிண்டலும் கேலியும் கண்டிப்பும் உருக்கமும் தேவைகளுக்கு ஏற்ப தேர்ந்து பிரயோகித்து சிங்கள அரச தரப்புப் பிரதிநிதிகளை தனது மதிநுட்பத்தால் திணறடிப்பவராகவிருக்கின்ற திரு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தன் அனுபவங்களை வரலாற்றுடன் பிணைத்துத் தந்திருக்கும் இந்த நூல் தமிழர் தரப்பில் அரசியல் இராஜதந்திர அணுகு முறைகள் தொடர்பாக வெளிவரும் முன்னோடியான நூல்.

தமிழ் தேசிய எழுச்சியும் ஆயுதப்போராட்டமும், இலங்கையில் இந்தியத் தலையீடு, பிரேமதாச விடுதலைப்புலிகள் பேச்சு, யாழ்ப் பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்கள், புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும் என்ற ஐம்பெரும் அத்தியாயங்களையும் பண்டா செல்வா ஒப்பந்தம், இணைப்பு - சி என அறியப்பட்ட அதிகார பரவலாக்கல் தொடர்பான பிரேரணை களின் ஆங்கில வடிவம், இந்திய - இலங்கை உடன்படிக்கை, பிரேமதாச - ராஜீவ் காந்திக்கு இடையிலான கடிதப் பரிமாற்றங்கள், சிறீலங்கா - விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம், வடக்கு கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நிறுவுவதற்கான உடன்படிக்கை தொடர்பாக விடுதலைப்புலிகளின் யோசனைகள் என்ற 6 பின்னிணைப்புக்களையும் கொண்டு 790 பக்கங்களில் விரிந்திருக்கும் ஒரு வரலாற்று ஆவணமாக போரும் சமாதானமும் விளங்குகிறது. தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் முதிர்ச்சி மிக்க அரசியல் சாணக்கியனாக, தமிழீழ களநிலை அறிந்தவராக, தேசியத் தலைவரின் உணர்வுகளை மொழிபெயர்ப்பவராக, மூன்று தசாப்தங்களாக விரிந்த ஆயுதமேந்திய விடுதலைப்போரின் வாழு கின்ற சாட்சியாக, திம்பு முதல் ஜெனிவா வரை சமாதான பேச்சுக் களில் கிண்டலும் கேலியும் கண்டிப்பும் உருக்கமும் தேவைகளுக்கு ஏற்ப தேர்ந்து பிரயோகித்து சிங்கள அரச தரப்புப் பிரதிநிதிகளை தனது மதிநுட்பத்தால் திணறடிப்பவராகவிருக்கின்ற திரு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தன் அனுபவங்களை வரலாற்றுடன் பிணைத் துத் தந்திருக்கும் இந்த நூல் தமிழர் தரப்பில் அரசியல் இராஜதந்திர அணுகு முறைகள் தொடர்பாக வெளிவரும் முன்னோடியான நூல்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று முழங்கிய ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் சமாதானத்துக்கான போர் என்று முழங்கிய சந்திரிக்காவும் சமாதானத்தின்பால் நின்று சமா தானத்துக்காக என்று கூறிய ரணில் விக்கிரமசிங்கவும், மாறி மாறி சமாதானத்தை வைத்து ஆடுகின்ற ரெஸ்ட் பந்தயம் வருடக் கணக் கில் தொடர்கின்றது. திம்பு பேச்சுவார்த்தைகளின் போது இறுதித் தீர்வு குறித்து பேச வலியுறுத்தி நின்ற தமிழர் தரப்பு இன்று ஜெனி வாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு சரத்தையாவது ஒழுங்காக அமுற்படுத்தக்கோரி நிற்கிறது. பரந்த இந்நூல் பரப்பின் மூன்று தசாப்தங்களின் தொடர்ச்சியான வரலாற்று நீரோட்டத்தில் பயணிக் கும் வாசகர்களால் திம்புவில் இருந்து ஜெனிவா வருவதற்குள் சமா தானம் எட்ட முடியாத ஆழத்திற்கு இறங்கி விட்டதை அவதானிக்க முடியும். ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப்போரின் ஆரம்ப காலமான 80 களில் பேச்சுக்களில் சிறீலங்கா அரசு தூக்கிப்பிடித்த ஒற்றையாட்சி அரசியல் யாப்பு, தமிழர் சுயநிர்ணய உரிமை மறுப்பு போன்ற பதாகைகள், இரு தசாப்தங்களின் பின்பு பல கொடுமை யான போர்களும் பொருளாதார அடக்கு முறைகளும் இனப் படுகொலைகளும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பின்பு பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவியும், பல் லாயிரக்கணக்கான பொதுமக்கள், உயிர்ப் பலி கொடுத்து அளப்பரிய தியாகங்களைப் புரிந்து 70 வீதமான நிலப்பரப்பை தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் வேளையிலே மிக பலமான போரி யல் வெற்றிகளின் அடித்தளத்தலே கட்டப்பட்ட உறுதியான வலுச் சமநிலை பெற்றிருக்கின்ற இவ்வேளையிலே இன்றும் அதே ஒற் றையாட்சி அரசியல் யாப்பு, சுயநிர்ணய உரிமை மறுப்பு போன்ற பதாகைகள் சிங்களத் தரப்பால் மீண்டும் உயர்த்தப்படுகின்ற முரண் நகையைக் காண முடிகிறது. திம்புப் பேச்சுக்கள் பற்றி இந்திய தூது வர் டிக்சித் குறிப்பிடுகையில் 'இலங்கை அரச சார்பிலே கலந்து கொண்ட அரசியல் அமைப்புச்சட்ட நிபுணரான ஜெயவர்த்தனாவின் பேச்சுக்கான அணுகுமுறையானது உயிரோட்டமற்றது. இயந்தி ரமாக சட்ட நியமங்களுக்குள் மட்டும் இயங்கியது. தமிழர் தரப்புக் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் போதெல்லாம் அவை சிறீலங் காவின் யாப்பையும் ஒற்றையாட்சி முறைமையையும் மீறுவதாக அமைந்திருப்பதாக தொடர்ச்சியாக அவர் வலியுறுத்தினார். இத னால் திம்பு பேச்சுவார்த்தைகள் செவிடர்களின் கருத்தாடல் ஆகி யது.' (பக்கம் 150) என்கிறார். வாசகர்களான நமக்கும் முப்பது வரு டங்களாக முன்பு பேசியதையே மீளவும் மீளவும் பேசும் சமாதான பேச்சுவார்த்தைகளின் தவிர்க்கமுடியாத விவரிப்பு நூலின் அரை வாசிக்கு மேற்பட்ட பகுதிகளை திரும்பத்திரும்ப வாசிப்பது போன்ற

https://tamileelamarchive.com/

உணர்வினை ஏற்படுத்துகிறது. அண்மையில் நடந்து முடிந்த ஜெனிவா பேச்சுக்களின் போதும் இதே எதிரொலிகளைக் கேட்டிருக்கிறோம். சட்ட நுணுக்கங்களிலும் சொற்தேர்வுகளிலும் காட்டுகின்ற ஆர்வம் தமிழர் தரப்பின் அடிப்படைப் பிரச்சனைகளை இதயபூர்வமாக மனிதத்துடன் அணுகுவதில் காட்டாத வரை திம்புப் பேச்சுக்கள் மட்டுமல்ல அனைத்துப் பேச்சுக்களும் செவிடர்களுக்கிடையிலான கருத்தாடல்களாகவே முடியும் என்பதை நூல் தெளிவாகக் காட்டுகிறது.

தமிழர் தரப்பின் தார்மீக நியாயங்களைப் புரிந்து கொண்டு ஆழமான புரிந்துணர்தலுடன் செயற்படும் எந்த ஒரு சக்தியும் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் புலி முத்திரை குத்தப்படும் நிகழ்வும், திம்புவுக்கும் ஜெனிவாவுக்கும் இடையிலான ஒப்புநோக்கலில் காலத்தாலோ, கருத்தாடல்களாலோ மாற்றமுறாத குணாதிசயமாக இருந்து வருகிறது. 1984ல் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான சிறப்புத்தூதுவராக திரு பார்த்தசாரதியை இந்திராகாந்தி நியமித்தார். தமிழர் தரப்பின் உண்மை நிலை உணர்ந்து அதிகார பரவலாக்கல் வழங்கும் இணைப்பு 'சி' எனும் திட்டத்தை அவர் முன்வைத்த போது சிங்கள பௌத்த பேரினவாதிகள் கூச்சலிட்டனர். பார்த்தசாரதியை வெளியேற்றுமாறு கோசமிட்டனர். கட்சியோடு கட்சி மோதவிட்டு புத்த பிக்குகளைத் தூண்டி விட்டு அதிகாரப் பரவலாக்கற் திட்டம் முடக்கப்பட்டது. இன்று எரிக்சொல்கெய்ம், நோர்வே போன்ற சக்திகளுக்கு இனவாதிகள் காட்டும் தீவிரமான எதிர்ப்பை இந்த பின்னணியிலே பார்க்க முடியும். சிங்கள இனவாதிகள் வெளியுலக வரலாற்றை படிக்கிறார்களோ இல்லையோ தமிழர் உரிமைக் கோரிக்கைகள் பேச்சுமேசைக்கு வரும் போதெல்லாம் அவற்றைத் தம் முன்னோடிகள் வெற்றிகரமாக முடக்கிய வரலாற்றை எழுத்துக்கூட்டி படித்திருக்கிறார்கள் என்பது தெளிவு. அதிகார பரவலாக்கற் திட்டம், அரசியல் யாப்பின் 6வது சட்ட திருத்தம், சிறான் உப குழுக்கள், பொதுக் கட்டமைப்பு என முடக்கப்பட்டே வந்திருக்கின்ற தமிழர் தரப்பின் முன்வைப்புக்களின் எண்ணிக்கை, நூலை மூடுகையில் ஒரு கசப்புணர்வை விட்டுச் செல்கிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிக்கான பணிகளிலும் அவ்வளர்ச்சியில் இடர்பாடுகள் ஏற்படும் போது அத்தகைய இடர்களை நீக்குகின்ற பணிகளிலும் நூலாசிரியர் ஆற்றிய பங்கு தன் முனைப்பின்றி நூலில் வெளிப்படுகிறது. 80களின் ஆரம்ப பகுதியில் சந்திரகாசன் போன்ற இந்திய அரசின் அடிவருடிகளை வெட்டியோடி, விடுதலைப்புலிகளின் இலட்சியத்தில் இருந்து இம்மியளவும் பிசகாத வகையில் இந்திய இராணுவ பயிற்சியினை பெறுவதற்கான தொடர்புகளைப் பெற்றமை, 80களின் இறுதிப் பகுதியில் இந்திய இராணுவத்தினை எதிர்ப்பதற்கான ஆயுத தளபாட வசதிகளை பிரேமதாசாவிடம் இருந்து பெற்றமை, திம்பு பேச்சுக்களின் போது புலிகளை தமிழ் தேசிய விடுதலை முன்னணியுடன் இணைத்துத் தமிழர் தரப்பை ஒரே குரலில் பேச வைத்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம். நூலாசிரியர் சிறுநீரக பாதிப்பு, நீரிழிவு என உடல் உபாதைகளுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தைக் காலங்களில் போக்கும் வரவும் நிறைந்த இராஜ தந்திரப்பணிகளில் அயராது ஈடுபட்டமையைக் காண முடிகிறது.

இந்த நூலினை தொகுத்துப் பார்க்கையில் அரசியற் சொல்லாடல்கள் நிறைந்த ஒரு வரலாற்று ஆவணமாகத் தென்படுகின்ற போதும் நெஞ்சத்தை நெகிழ வைக்கின்ற சம்பவங்கள் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலே தமிழீழ கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா படையால் கைது செய்யப்பட்ட குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு போராளிகளது விடுதலை குறித்து இரண்டு நாட்டு இராணுவங்களும் கையை விரித்து விட்டவேளையில் தலைவரின் உத்தரவுப்படி அவரிடமிருந்து சைனைட் குப்பிகளை சுமந்து சென்று பன்னிரு போராளிகளிடமும் கையளித்த நிகழ்வை 'விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராட்ட இலட்சியத்திற்காக நான் ஆற்றிய செயற்பாடுகளில் இதுவே எனது ஆன்மாவை உலுப்பிய மிகவும் வேதனையான பணியாகும்'. (பக்கம் 219) என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

2002ல் ரணில் அரசுடன் நிகழ்ந்த பேச்சுக்களின் பங்குபெறுவதற்காக மாலைதீவின் ஊடாக வன்னிக்கு சிறிய கடல் விமானம் ஒன்றில் தான் மேற்கொண்ட பிரயாணத்தைப் பற்றி குறிப்பிடும் போது 'மூன்று வருடங்களுக்கு முன்பு மிக கடுமையாக நோய் வாய்ப்பட்டு வன்னியை விட்டு புறப்பட்ட அந்த நாள் அப்போது என் நினைவில் வந்தது. எப்போதாவது வன்னிக்கு திரும்புவேன் என்று அதுவும் உயிருடன் திரும்புவேன் என்று அப்போது நான் கற்பனை செய்து கூடப்பார்க்கவில்லை' (பக்கம் 612) என்று குறிப்பிடுகிறார்.

தமிழரின் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது தேசியத் தலைவர் சர்வதேச பிராந்திய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்த போதெல்லாம் ஒட்டுமொத்த தமிழினத்தின் தலைவிதியை மட்டுமே சிந்திப்பவராய் செயற்பட்டமையையும் அவரது நேர்முக எதிரிகளால் கூட பின் நாட்களில் புகழ்ந்துரைக்கப்பட்டதையும் நூலில் காண முடிகிறது. இந்திய அரசின் இராஜ தந்திரிகளுடனான தலைவரின் நேருக்கு நேர் விவாதங்களில் முகத்திலறையும் கேள்விகளையும் சுளீர் என்ற பதில்களையும் தருணம் அறிந்து அவர்களுடன் மென்போக்கைக் கடைப்பிடிக்கும் நேர்த்தியையும் அவதானிக்கிறோம். 1986ல் கிழக்கு மாகாணத்தை முக்கூறாக பிரிக்கும் எல்லை வரையறையுடன் கூடிய ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இடைக்கால தீர்வுத் திட்டத்துடன் ஒத்துழைக்குமாறும் அதன்மூலம் விரைவில் பெங்களூரில் நடக்கும் சார்க் உச்சி மாநாட்டில் ராஜீவ் காந்தி நிறைவேற்றிய சாதனையாக அவரது புகழை உயர்த்த உதவுமாறும் இந்திய தூதுவர் ஏ.பி வெங்கடேஸ்வரன் தலைவரை வேண்டினார். அதனால் கோபமுற்ற தலைவர் 'ராஜீவ் காந்தியை திருப்திப்படுத்தி அவரது புகழை ஓங்கச் செய்வதற்காக எமது மக்களின் அரசியல் இலட்சியத்தை கைவிடச் சொல்கிறீர்களா?' எனப் பதிலளித்ததைக் காண்கிறோம். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தலைவர் மறுத்த போது கோபங் கொண்ட திரு.டிக்ஷிற் அவர்கள் 'மிஸ்டர். பிரபாகரன், இத்துடன் நான்காவது தடவையாக இந்தியாவை நீங்கள் ஏமாற்றியுள்ளீர்கள்' என்றார். 'அப்படியானால் நான்கு தடவைகள் எனது மக்களை இந்தியாவிடமிருந்து நான் காப்பாற்றியிருக்கிறேன். அதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்' (பக்கம் 185) என்றார் தலைவர். 'கொழும்பிற் பணிபுரிந்த நான்காண்டுக் காலத்தில் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் அனைவரையும் சந்தித்தேன். இயல்பாகவே இவர்கள் அனைவரையும்விட மேன்மையானவராகவும் வித்தியாசமானவராகவும் பிரபாகரன் இருந்தார். இவர்மீது நான் குறைகண்டு தப்பபிப்பிராயம் கொண்டிருந்தபோதும் இவரது ஆழமான இலட்சியப்பற்றையும் அரசியல் ராணுவத் திறனாற்றல்களையும் நான் ஏற்றுக் கொள்ளவேண்டும். நிறைந்த அரசியற் சாணக்கியமும் போரியல் மதிநுட்பமும் படைத்தவர் என்பதை பல ஆண்டுகால நிகழ்வுகள் நிரூபிக்கின்றன' (பக்கம்244) என்று அதே டிக்ஸிற் தலைவர்மீது புகழாரம் சூட்டுகின்றார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திருப்பு முனைகளாக அமைந்த பல சந்தர்ப்பங்களில் அதை வழிநடத்திய எமது தலைவரின் தொலைநோக்குப் பார்வையால் எடுக்கப்பட்ட பல முடிவுகள் பல தரப்பினராலும் பலவாறு விமர்சிக்கப்பட்டன. இன்று அவற்றை வரலாறாகப் பார்க்கின்ற போது அவை மிகச் சரியானவை என்பதில் சந்தேகமேயில்லை. இந்தியா தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய காலத்திலே தமிழீழ, தமிழ்நாட்டு அரசியற் தலைவர்கள் பலர் இந்தியா இலங்கை மீது படையெடுப்பு நிகழ்த்தப் போவதாக கருதுகையில் தலைவர் அத்தகைய கற்பனாவாதத்தைக் கொண்டு

https://tamileelamarchive.com/

"

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தலைவர் மறுத்தபோது கோபங்கொண்ட திரு.டிக்ஷிற் அவர்கள் "மிஸ்டர். பிரபாகரன், இத்துடன் நான்காவது தடவையாக இந்தியாவை நீங்கள் ஏமாற்றியுள்ளீர்கள்" என்றார். "அப்படியானால் நான்கு தடவைகள் எனது மக்களை இந்தியாவிடமிருந்து நான் காப்பாற்றியிருக்கிறேன். அதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்" என்றார் தலைவர்.

"

ருக்கவில்லை. 'மட்டுப்பத்தப்பட்ட அரசியற் குறிக்கோளை அடைவ தற்கு தமிழ்ப் போராளிகளைக் கூலிப்படையாகப் பாவிப்பதே இந்திய ராணுவப் பயிற்சியின் நோக்கம் என்றும் எதற்கும் விட்டுக் கொடுக் காத கடும்போக்கை ஜே. ஆர் ஆட்சிபீடம் கடைப்பிடிக்கும் என்பதால் இந்தியத் தந்திரோபாயம் இறுதியிற் தோல்வியைச் சந்திக்கும் என்று பிரபாகரன் உணர்ந்திருந்தார்' (பக்கம்106) என தலைவரின் தொலை நோக்கான அரசியற் பார்வையை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

இந்தியா என்கிற பிராந்திய சர்வவல்லமையின் அருகாமை குறித்தும் அதனுடனான நட்பின் தேவை குறித்தும் தலைவர் ஆழமான புரிதலைக் கொண்டிருந்ததுடன் தவிர்க்கமுடியாத கார ணங்களால் இந்தியாவுடன் மோதல் ஏற்படவிருந்த சூழலில் அத னைத் தவிர்ப்பதற்கான இறுதிநேர முயற்சிகளை மேற்கொண்டார் எனவும் நூலில் வரலாற்றுப் பதிவுகளாக்கப்படுகின்றன. சின்னஞ் சிறிய கெரில்லா இயக்கம் பென்னம்பெரிய வல்லரசை எத்தகைய ஒரு சூழலில் எதிர்கொள்ளநேர்ந்தது என்பதை எதிர்கால வரலாற்று வாசகனுக்கு துலாம்பரமாக எடுத்துரைத்திருக்கிறது. இந்தியாவைப் பகைக்காது இணங்கிப் போகவேண்டுமென்பதற்காக ஒருங்கி ணைந்த தமிழர் தரப்பாகத் திம்புப்பேச்சுக்களில் கலந்துகொள்ள எடுத்த முடிவும் சரி, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை அனு சரித்துப் போகவேண்டிய தேவை ஏற்பட்டபோது ஆற்றிய புகழ் பெற்ற சுதுமலைப் பிரகடனத்தில் நாம் இந்தியாவை நேசிக்கிறோம். இந்திய மக்களை நேசிக்கிறோம். இந்திய வீரனுக்கு எதிராக துப்பாக்கிகளை நீட்ட நாம் தயாராக இல்லை என ஆற்றிய உரையுஞ் சரி, தவிர்க்க முடியாத சூழல்களால் இந்தியராணுவத்துடனான மோதல்கள் வெடித்தபோது அதனைத் தடுக்கின்ற இறுதிநேர முயற்சியாகத் தலைவர் பிரதமர் ராஜீவிற்குத் தன் கைப்பட எழுதிய மோதல் தவிர்ப் புக் கோரும் கடிதங்களும் சரி இந்தியாவுடனான உறவு குறித்த புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றன. ஒவ்வொரு முறையும் அப்பாவிப் பொதுமக்கள் இந்தியப் படைகளால் கொல்லப்படுவதை நிறுத்தவும் நல்லெண்ணத்தை உருவாக்கவும் மோதலைத் தவிர்க்கக் கோரித் தலைவர் எழுதிய கடிதங்கள் புலிகள் பலவீனமுற்றுள்ளார்கள் என்ற பார்வையையே இந்திய கொள்கை வகுப்பாளர்களிடம் தோற்றுவித்ததென இந்திய ராணுவ ஜெனரல் திபேந்தர்சிங் அவர்களின் கூற்றைப் பார்க்கிறோம். 'கவலைக்குரிய விடயம் என்னவென்றால் விடுதலைப்புலிகளிடமிருந்து இப்படியான கோரிக்கைகள் அவர்களது கதை முடிந்ததென்று தான் டில்லியிற் கருதப்பட்டது. அதனாற் பேசுவதை விடுத்து ராணுவஅழுத்தத்தை மேலும் முடுக்கிவிடவேண்டுமென்பது தான் நிலைப்பாடாக இருந் தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஒரு தடவை டில்லிக்கு அனுப்பிவைத்த அவசரச் செய்தியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தின் வீழ்ச்சி நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இவ் விடயம் குறித்து இந்தியராணுவத் தலைமைச் செயலகத்திற்கு நான் அனுப்பிவைத்த செய்தியில் புலிகள் அப்படியானதொரு கட்டத்திற்கு வரவில்லை என்பது தான் யதார்த்தநிலை எனத் தெரிவித்திருந்தேன்.' (பக்கம் 236) இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த அனுபவமற்ற தலைமைகளும் அந்தத் தலைமைகளுக்கு வெளியுறவுக் கொள்கைகளை வகுத்துக் கொடுக்கும் முதிர்ச்சியற்ற ராஜதந்திரிகளின் புலிகள் தொடர்பான எதிர்மறையான அணுகு முறையும் தான் நடந்து முடிந்த கசப்பான அனுபவங்களுக்கு வழி கோலின என்பதை நூல் எடுத்துக் காட்டுகிறது.

ஏறக்குறைய நூலின் மூன்றில் இரண்டு பகுதி சமாதானப் பேச்சுக்களை ஆவணப்படுத்திய போதும், விடுதலைப்புலிகளின் போர் வலுச்சமநிலையைத் தூக்கிநிறுத்திய சமர்களின் விவரணங் கள் குறிப்பிடத்தக்க பதிவுகளாகியுள்ளன. வன்னிமீட்புப் போரில் மிக நீண்டதும் மரணத்தின் நெடுஞ்சாலை என அழைக்கப்பட்டதுமான ஜெயசிக்குறு சமர், சிங்களப்பத்திரிகையாளர் ஒருவரால் பற்றியெரி யத் தவறிய தீச்சுவாலை என வர்ணிக்கப்பட்ட தீச்சுவாலை படை நடவடிக்கை ஆகியவற்றை வெற்றிகரமாக முறியடித்தது பற்றி, முல்லைத்தீவுச் சமர், ஓயாத அலைகள் என்ற நான்கு கட்ட வலிந்து தாக்கல் நடவடிக்கைகள் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பை விடு வித்தது பற்றி, சிறீலங்கா இனவெறி அரசைச் சமாதானம் பேச வருமாறு கேட்கவைத்த கட்டுநாயக்க வான்படைத்தள அழிப்பு போன்ற சமர்களில் விடுதலைப்புலிப் போராளிகளின் அயராத உழைப்பும் தியாகமும் எமது தலைவரின் போரியற் தந்திரோபாயங் களும் மதிநுட்பமும் வெளிநிற்கின்றன. 'வன்னி மாநிலத்தின் பெரும் நிலப்பரப்பை ஜெயசிக்குறு பூதம் விழுங்கியிருந்தபோதும் விடு தலைப்புலிகளின் தலைமை அலட்டிக் கொள்ளவேயில்லை. ஆக்கிர மிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் மீட்டெடுக்க முடியும் என்பதிற் தலைவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.' (பக்கம் 544) அந்த நம் பிக்கை பொய்யாகவில்லை. 'எதிரி பொருதுமுனை திறக்கும் இடங் களிலெல்லாம் எதிர்ப்பைக் காட்டாது பின்வாங்க, அவர்கள் பேரா சையாலும் எதிர்ப்பேதும் இன்றி முன்னேறிய உற்சாகத்தாலும் அகலக்கால் பரப்ப வைத்து அவர்களது பாதுகாப்பு வேலியின் பரு மனை மெலிதாக்க பாயவேண்டிய தருணத்தில் உக்கிரமாக பாய்ந்து தாக்கி' என தலைவரின் அதி அற்புதமான போரியல் நுட்பங்களின் விபரிப்பு வாசிப்பை வேகமெடுக்க வைக்கிறது.

1986ன் தொடக்கத்தில் சந்திரிகா அம்மையார் நூலாசிரியரை சந்தித்த போது இனப்பிரச்சனை குறித்த நீண்ட விவாதத்திற்கு பின்னர் சொன்னாராம் 'என்றோ ஒரு நாள் நான் இலங்கை அரசிய லில் ஈடுபட்டே தீருவேன். நான், ஆட்சியமைத்தால் தமிழர் மீது சுமத்தப்பட்ட ஒடுக்கு முறைகளை அகற்றி சமாதானத்துக்கும் இன ஒற்றுமைக்கும் வழிவகுப்பேன்' என்று. (பக்கம் 348) சந்திரிகாவைப் போல அவருக்கு முன்னரும் பின்னரும் வந்த சிங்கள அரசியல் தலைமைகளும் இதே வேதத்தைத்தான் ஓதியிருக்கின்றன. தமிழர் உரிமைகள் தொடர்பான போராட்டத்திற்கு சமாதானமும் போரும், போரும் சமாதானமும் என மாறி மாறி ஏய்த்து வருகின்ற அரசியலை பதிலாக வைத்திருக்கின்றன. சிங்கள தேசத்தின் இந்த ஏமாற்று அரசியலை தனது அனுபவங்களுக்கூடாக விபரித்து நிற்கும் போரும் சமாதானமும் என்ற நூலை திரு அன்ரன் பாலசிங்கத்தை தவிர வேறு யாரும் எழுதியிருப்பின் இந்தளவுக்கு வலிமையும் உண்மைத் தன்மையும் வாய்த்திருக்குமா என்ற கேள்வி எழுகிறது. தமிழ்த் தேசத்தின் எதிர்கால அரசியல் வரலாறு எந்தத் திசையில் செல்லும் என்பதை சிங்களதேசத்தின் இனவாதசக்திகளே இறுதியாகத் தீர் மானிக்கும் என்ற நூலின் முடிவுரையை கல்லில் பொறித்துவைத்துக் காத்திருங்கள். போரா சமாதானமா இரண்டு தெரிவுகளும் அவர்கள் கையில், அதனூடாக எந்த முடிவு எட்டப்படினும் அது நமக்குச் சாதக மாகும்படி சிங்கள இனவாதிகளே வழிசெய்துதருவார்கள் என்ற வரலாறு படைக்கும் உண்மையைக் கூறிச் சென்றிருக்கிறது 'போரும் சமாதானமும்'. ■

https://tamileelamarchive.com/



# பெரிய வரைபடத்தில் நாங்கள்

**மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் (Human rights watch) நடாத்தும் பரப்புரைப் போர் பல முனைகள் கொண்ட அனைத்துலக வெளியுறவுத் தொடர்பாடலின் ஒருமுனையின் வெளிப்பாடு.**

■ நாதன்

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human rights watch) எனும் நிறுவனம் புலிகளைக் குறிவைத்து அண்மைக்காலமாக நடத்தி வந்த பரப்புரைப் போர் கடந்த 15.03.2006 வெளியிடப்பட்ட அதன் 'இறுதிப்போரிற்கான நிதி சேகரிப்பு' எனும் ஆவணத்தின் மூலம் முழு அளவில் உருவம் கொண்டுள்ளது. போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் புலிகளைக் குறிவைத்து சில சூட்சுமம் நிரம்பிய பரப்புரைகளை மேற்கொண்டு வந்த இந்த நிறுவனம் இன்று புலிகளுக்கு எதிராகத் தாங்கள் வரித்துக் கொண்ட மனிதஉரிமைகள் கரிசனைகளுக்கும் அப்பாற் சென்று அரசியல் உட்கிடக்கைகள் கொண்ட பரப்புரை நிறுவனமாக செயற்படத் தொடங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் அண்மைக்கால அறிக்கைகள், ஆண்டறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் 'சிறுவர் படைவீரர்' பற்றி ஓயாது பேசியது. இலங்கைத்தீவில் இடம்பெறும் படுகொலைகள் அனைத்தையும் புலிகளால் செய்யப்படும் அரசியல் படுகொலைகளாக விபரித்தது. ஐரோப்பிய யூனியன் புலிகளுக்கு பயணத்தடை அறிவிப்பை வெளியிட்ட போது இந்த நிறுவனத்தின் பிரதான புலி எதிர்ப்புப் பரப்புரையாளரான ஜோ பேக்கர் எனும் பெண்மணி வரவேற்று அறிக்கை விடுத்தார். இவையனைத்துமே மனித உரிமையாளர்களின் புருவங்களை விரியவைத்தது. அனைத்துலக மனித உரிமைகள் உடன்பாடுகள் மற்றும் சாசனங்களுக்கு அமைய நீதியான போக்கினைக் கடைப்பிடிப்பதாக பாவனை பண்ணும் இந்த அமெரிக்க நிறுவனம் புலிகளைப் பின்தொடர்வதன் பின்னணி நோக்கு என்ன என்கின்ற கேள்வி அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. எனினும், இலங்கைத்தீவின் இனச்சிக்கலை வெறும் தமிழ் சிங்கள தேசிய இனமுரண்பாடாக மட்டும் பார்க்காது விரிந்த வரைபடத்தில் சர்வதேச வியூக நோக்கில் வைத்துப் பார்க்கும் ஆய்வாளர்களுக்கு Human rights watch நிறுவனத்தின் சூட்சுமம் புரிதலுக்குக் கடினமானதாக இருக்கவில்லை.

> "நீங்கள் எங்களுக்கு என்ன செய்தீர்கள் என்பதை நான் அறிவேன் - நீங்கள் இல்லாதுவிட்டால் எங்கள் புரட்சி இடம் பெற்றிருக்க முடியாது"
>
> -சோவியத் சார்பு செக்கோசிலாவாக்கியா உடைக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்து (Human rights watch) தலைமையகத்திற்குச் சென்ற செக். சனாதிபதி வெளியிட்ட செய்தி-

+ + + + +

கடந்த 15.03.06 அன்று லண்டனில் உள்ள அனைத்துலக வியூகக் கற்கைக்கான நிறுவனத்தில் (IISS) சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் உரையாற்றும் போது "நான் நம்புகின்றேன் இன்று Human rights watch ஒரு முக்கிய அறிக்கையை வெளியிடவுள்ளது. அது புலிகளின் நீதியற்ற கொலைகார நடவடிக்கைகளை வெளிப்படுத்தும். மேற்குலக அரசுகள் இந்த அறிக்கையை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும்" என்றார். அன்று அமெரிக்காவில் மங்களசமர வீரவையும், அவருடன் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்ட ஆனந்த சங்கரி வகையறாக்களுக்கும் மகிழ்வு தந்த ஆவணம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

https://tamileelamarchive.com/

'இறுதிப் போரிற்கான நிதி சேகரிப்பு: புலத்தமிழர் மத்தியில் புலிகளின் பணமறிப்பும், அச்சுறுத்தலும்' எனும் ஆவணம் கனடா, பிரித்தானியா போன்ற தமிழ் சமூகம் குவிந்து வாழும் நாடுகளினை பிரதானப்படுத்தி குறி வைத்துத் தயாரிக்கப்பட்டது. 2004ம் ஆண்டு புலிகளுக்கு எதிராக இதேபாணியில் 'பீதியில் வாழுதல்' எனும் அறிக்கையினை வெளியிட்டு சிறீலங்காவின் பரப்புரைக்கு வலுச் சேர்த்த ஜோ பேக்கர் இந்த அறிக்கையையும் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையானது 'புலத்தமிழ் சமூகத்தில் பீதி', 'புலிகள் இந்து ஆலயங்களை கட்டுப்படுத்தல்', 'இறுதிப் போரிற்கு 2005 மற்றும் 2006ம் ஆண்டு காலப்பகுதிகளில் நிதிதிரட்டல்' போன்ற விடயங்களை அத்தியாயப்படுத்தி எழுதப்பட்டது. ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய கண்டங்களில் வாழும் தமிழ் சமூகத்தினைப் புலிகள் அச்சுறுத்தி பணப் பறிப்பினை செய்வதாகவும் இந்த ஆய்வு சொல்கின்றது. இந்த ஆய்வுக்கு அண்மைக் காலமாகக் கடுமையான புலி எதிர்ப்பு பரப்புரையினை சிறீலங்காவின் ஆதரவுடன் நடத்தி வரும் இனங்காணப்பட்ட நபர்கள் சாட்சியங்களை வழங்கியுள்ளனர். இந்த தேச விரோத சக்திகளின் சாட்சியங்களை தரமான சாட்சியங்கள் என விபரிக்கும் Human rights watch புலத் தமிழ்ச் சமூகம் காவற்துறையினரால் கண்காணிக்கப்படல் வேண்டும் எனும் இனத்துவேசம் நிரம்பிய வேண்டுதலையும் விடுத்துள்ளது. இந்த அறிக்கையின் மைய நோக்கம் இந்த ஆவணத்தின் வேண்டுகோள்கள் தெளிவாகவே தெரிவிக்கப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்,

- புலிகளுக்கு நிதி சேகரிப்பதைத் தடுக்க வேண்டும்

- புலிகளுக்கு நிதிசேகரிப்பது போர்க்குற்றம் எனத் தமிழ் மக்களை அச்சுறுத்தல் வேண்டும்.

- தமிழ் சமூகத்திற்கு உரிமைகள் பற்றிக் கல்வி போதிக்க வேண்டும்

இந்த ஆவணமானது அடிப்படையில் வலுவற்றது என்பதை இரு தளங்களில் புலத் தமிழ் சமூகம் தன் உடனடி அறிக்கைகள், மறுப்பு கடிதங்கள் ஊடக முன்வைத்துள்ளது.

1. தமிழ்ச் சமூகம் விடுதலைப் போரிற்கு நிதி மற்றும் ஆதரவு வழங்குவது தார்மீக நியாயங்களைக் கொண்டதும், நெடிய வரலாற்று தொடர்ச்சி கொண்ட விடயமாகும். சுனாமியால் தமிழர் கரைகள் அள்ளுண்ட போது புலத்தின் உதவி எவ்வாறு மக்களைக் காப்பாற்றியது என்பது இதற்கான நல்ல உதாரணமாகும். தமது நிதி வழங்கல் செயற்பாடுகளை சமாதானத்திற்கும், கௌரவத்திற்குமான நிதி வழங்கும் நடவடிக்கையென்றே புலத்தமிழ் சமூகம் கருதுகின்றது. இது தார்மீக நியாயங்களைக் கொண்ட, தன்னியல்பான நடவடிக்கையாகும்.

2. Human rights watch அறிக்கை விஞ்ஞானபூர்வமற்றது. 800,000 புலத்தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் தேர்தெடுக்கப்பட்ட சில தேசவிரோதிகளின் வஞ்சகமான கருத்தினை முழு தமிழ் சமூகத்தினையும் களங்கப்படுத்தப் பாவிக்கப்படுகின்றது. புலத் தமிழ் சமூகத்தின் மத்தியில் அவ்வாறான நிதி சேகரிப்பு இடம்பெறுகின்றது என்றால் சம்பந்தப்பட்ட உள்நாட்டுக் காவல்துறையினரே இதனை விசாரிக்கும், கட்டுப்படுத்தும் பொறுப்புள்ளவர்கள். மனித உரிமைகள் அமைப்புக்கள் விசாரிக்கும் அளவில் மேற்குலகின் காவற்துறையினர் பலவீனமானவர்களாகவும் இல்லை. மேலும், தமிழ் சமூகம் அச்சுறுத்தப்படக் கூடிய சமூகமுமல்ல.

எனினும், கனடா, டென்மார்க் போன்ற நாடுகளில் தீவிரமாகவும், பிற நாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் இந்தவகைப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறீலங்கா அரசு மற்றும் சிங்கள இனவாதப் பரப்புரையாளர்கள் இந்தப் பரப்புரைகளின் மறைவில் தமிழர்களினை அழிக்கும் யுத்தத்திற்கான தயாரிப்பினைத் துரிதப்படுத்தி வருகின்றனர். இங்கு புலத்தமிழ் சமூகத்தின் முன் எழும் கேள்வி ஏன் Human rights watch இத்தகைய களங்கப்படுத்தும் மோசடிப்பரப்புரையில் ஈடுபடுகின்றது என்பதே.

+ + + + +

இந்த Human rights watch (மனித உரிமைகள் கண்காணிப்பகம்) அடிப்படையில் ஒரு உண்மையான மனித உரிமைகள் அமைப்பல்ல எனவும் அது 'ஒருபகுதி' அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை நோக்கர்களின் தேவைகளுக்காக இயங்கும் நிறுவனம் எனவும் கிழக்குலக ஆய்வாளர்களால் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. குறிப்பாக, பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளைக் கொண்ட உயர்மட்ட அமெரிக்க கொள்கை நோக்கர்களின் நிறுவனமாக இது உள்ளது எனக் கருதப்படுகின்றது. 1920களில் சோவியத் அரசின் கொள்கை பரப்புரைக்காகச் செயற்பட்ட Agitprop எனும் நிறுவன அமைப்பை ஒத்தது இது என ஒரு ஆய்வாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். Paul Treanor எனும் ஆய்வாளர், கிளின்டன் சனாதிபதியாக இருந்தபோது அமெரிக்காவிற்கு ஒவ்வாத பிற நாடுகளில் தலையிடும் போக்கை இந்த Human rights watch வலியுறுத்தியது எனவும், யூகோஸ்லாவியாவை உடைப்பதற்கான பரப்புரை இந்த நிறுவனத்தினாலேயே முன்னின்று நடத்தப்பட்டது எனவும் கூறுகின்றார். இந்த நிறுவனத்தின் கட்டமைப்பை ஆராய்ந்த Paul Treanor, பல்வேறு உலக மொழிகளில் தன் அறிக்கைகளை வெளியிடும் இந்த நிறுவனம் அடிப்படையில் அமெரிக்காவில் வசிக்காத எவரையும் தனது கட்டமைப்புக்குள் அனுமதிக்காது என்கின்றார். இந்த நிறுவனத்தின் தோற்றம் பற்றி மற்றுமொரு தொகுதி ஆய்வாளர்கள் ஆய்வுகளைச் செய்து விரிவான கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். சோவியத் யூனியன் மீது அழுத்தம் கொடுப்பதற்கும், சோவியத் காலத்தில் நிலவிய பனிப் போரினை வெற்றி கொள்வதற்குமான ஒரு வலிய ஆயுதமாக மனித உரிமைகள் விடயத்தைப் பரப்புரை செய்வதற்கு அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் 70களில் முடிவு செய்தனர். இதன் தொடர்ச்சியாக ஆரம்பத்தில் கெலன்சி வோச் (Helsinki watch) செயற்பட்டது. சோவியத்யூனியனைக் கண்காணிப்பதும், வருடாந்த அறிக்கைகளை வெளியிடுவதுமாக இவை செயற்பட்டன. பின்னர் அமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த இலத்தீன் அமெரிக்க நாடுகளைக் கண்காணிப்பதற்கான அமெரிக்கா வோச் (America Watch) உருவாகியது. 1985ல் ஆசியா வோச் (Asia Watch) உருவாகியது. இவற்றின் தொடர்ச்சியாக 1989ல் அனைத்தும் இணைக்கப்பட்டு Human rights watch உருவாகியது. இந்த நிறுவனத்திற்கான நிதி அமெரிக்க அரசால் வழங்கப்படுவதில்லை. மாறாக, தாராளவாத பொருளாதார நோக்குக் கொண்ட செல்வந்த அமெரிக்க நிறுவனங்கள், மற்றும் பெரும்செல்வந்தர்களுமே வழங்கி வந்தனர். இன்றைய உலகின் பிரபல நிதிச்சந்தை வணிகரான சோரஸ் (Soros) அவர்கள் இந்த நிறுவனத்தின் மிக முக்கிய நிதி ஆதரவாளராகவுள்ளார். அவரது குடும்பத்தினர் சிலரும், நண்பர்களும் இன்று Human rights watch செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் இந்த ஆய்வாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். இன்று ருஸ்சியாவுக்கு எதிரான செச்னிய சிக்கலில் செச்சினிய ஆதரவாளர்களாக Human rights watch மற்றும் சொரஸ் குழுமமும் உள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்த Human rights watch இன்று ஒரு தகவல் பரிமாற்ற பரப்புரை நிறுவனமாகவே செயற்படுகின்றது எனவும் இந்த ஆய்வாளர் குற்றஞ்சாட்டுகின்றார். சுவாரசியமான முறையில் இன்றுள்ள சனாதிபதி ஜோர்ஜ் புஸ் அரசுக்கும் திரு.சோரஸ் உள்ள உறவு சிக்கலானது. ஈராக் போரினை தனது தனிப்பட்ட காரணங்களுக்காக சோரசிற்கும் எதிர்த்ததால் பெரும்பாலும் Human rights watch ஒரு நடுநிலை நிலைப்பாட்டை இங்கு எடுக்கின்றது எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்

https://tamileelamarchive.com/

றனர். செக்கோஸ்லாவாக்கிய உடைப்புக்கு இந்த நிறுவனப் பரப்புரைகள் முழு உதவிகளையும் வழங்கின. சோவியத் சார்பு செக்கோஸ்லாவாக்கியா உடைக்கப்பட்டதன் பின்னர் பதவியேற்ற அமெரிக்க சார்பு சனாதிபதியான Vaclav Havel அவர்கள் நியூயோர்க்கில் உள்ள Human rights watch நிறுவன தலைமைப் பணிமனைக்குச் சென்று நன்றி தெரிவித்தார். "நீங்கள் எங்களுக்கு என்ன செய்தீர்கள் என்பதை நான் அறிவேன் - நீங்கள் இல்லாது விட்டால் எங்கள் புரட்சி இடம்பெற்றிருக்க முடியாது" என அவர் வாழ்த்தும் தெரிவித்தார். இன்றும் கூட கிழக்கைரோப்பிய நாடுகளில் தேர்வு செய்யப்பட்டமுறையில் Human rights watch வெளியிடும் அறிக்கைகள் ஆய்வாளர்களின் விமர்சனங்களுக்குட் படுத்தப்படுகின்றது.

+++++

புலிகளுக்கெதிராக அனைத்துலகரீதியில் தொடுக்கப்பட்டுள்ள Human rights watch நிறுவனத்தின் பரப்புரைப் போர் தமிழர் விடுதலைப் போர் எதிர்கொள்ள வேண்டிய சவால்களுக்கான முன்னெச்சரிக்கை மணியாக அமைகின்றது. இலங்கை இனச்சிக்கலின் பின்விளைவாக இலங்கைத்தீவு இரண்டாக உடைவதையோ, சிறீலங்கா ஒரு தோல்வியடைந்த தேசமாக மாறுவதையோ விரும்பாத உலக வல்லரசு அல்லது அந்த வல்லரசின் ஒருபகுதி கொள்கை வகுப்பாளர்கள் சிறீலங்காவை தோல்விப் பாதையிலிருந்து மீட்டு, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமக்கான வியூக விரிவின் ஒருபகுதியாக பாதுகாக்க விரும்புகின்றனர் என்பதை இத்தகைய முயற்சிகள் மூலம் வெளிக்காட்டுகின்றனர். அதாவது, பலதளங்களையும், முனைகளையும் கொண்ட வெளியுறவுத் தொடர்பாடல்களில் இன்று இத்தகைய புலி எதிர்ப்புப் பரப்புரைகளும் அதன் ஒரு முனையைப் பிரதிபலிக்கின்றது. எனினும், இலங்கைத்தீவின் இனச்சிக்கலின் தவிர்க்க முடியாத விளைவு இருதேசங்கள் கொண்ட தீவாக இலங்கைத்தீவு அங்கீகரிக்கப்படலிலேயே தங்கியுள்ளது என்பதை வரலாறு நிரூபிக்கும் போது இந்தக் கொள்கை நோக்கு கைவிடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். முடிவாக, இஸ்ரேல் உருவாக்கத்திற்காக முன்னின்று உழைத்தவரும், புல யூத மக்களிடம் நிதிப்பங்களிப்பை பெருமளவு திரட்டி உதவியவருமான கோல்டன் மேயர் அம்மையார் அன்று கூறியது போன்று "நாங்கள் விடயங்கள் எவ்வாறு உள்ளதோ அதனை அவ்வாறே பார்க்கும் தற்திறனும், துணிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் அத்துடன் எங்கள் அடிப்படையான உள்ளுணர்வுக்கும், சுயஇருப்புக்கும் ஏற்ப (அவ்விடயங்களில்) செயற்படல் வேண்ம்".


ஒளிப்படம்: கஜானி

# விடுதலை வாசலிலே

நுண் அனுசரணைப் பணியில்
நோர்வே தளராது நினைத்தபடி நின்று
இனவாதச் சிங்களத்தை
இழுத்துவந்தது ஜெனிவா வரை

மகிந்த சிந்தனை
விசாலித்த வகுப்புவாத
அரசின் பிரதிநிதிகள்
திரண்ட தரவுப் பயிற்சியோடு
வரவுதந்து வீற்றிருந்தபோதும்

திம்புப்பேச்சு முதல் எம்தரப்பில்
தம்ஞானம் துலங்க பங்குபற்றும்
எங்கள் அண்ணன் அன்ரனுக்கு
முன் நிமிரமுடியாது
நிமல் சில்வாகோஸ்டி
தம் நிலை தாழ்ந்தாராம்
அன்ன ஜெனிவா அரங்கினிலே

'யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றி
மகிந்த சிந்தனைக்கு அமையவைத்து
சித்தம்மகிழவே திரும்புவோம்' என வந்த
சில்வாவின் சத்தமோ
சூல்கெய்ம்முன் செல்லாது போனதுகாண்
வல்லவேங்கையின் வார்த்தைக்கு
ஜெனிவாவில் கிடைத்த வெற்றியிது

https://tamileelamarchive.com/

தொத்துப் படைகள் எதையும்
தாம் தத்தெடுத்து வளர்க்கவில்லை
இலங்கையில் இப்படை இல்லையெனவும்
அப்பட்டமான பொய்யை அவிழ்த்துவிட்ட அரசு தரப்பு
அன்ரன் அண்ணா அளித்த
அட்டவணையைக் கண்டு கொட்டமடங்கியது

ஒட்டுப்படைப் பொட்டுக்கேடு
வெட்டவெளிச்சம் ஆனதினால்
அதை கட்டுப்படுத்தச் சம்மதித்து
சில்வா கையெழுத்தும் இட்டார்

தாயக வரலாற்றில் தமிழர்தரப்பு
ஓயாதபேச்சுக்களையும்
ஒப்பந்தங்களையும்
எப்போதும் செய்துள்ளார்கள்
ஆனால் அவையாவும்
இனவாதக் கயமை அரசியலில் பொடியாகிப்போயின

வியட்நாம் விடுதலை இயக்கம்
வரலாற்றுப்போரில்
அயராது பத்து ஆண்டுகள்
அரசியல் பேசித்தான் பார்த்தது

பேச்சுக்குப் புலி பின்நிற்கமாட்டாது.

ஆனால் பாரும்
ஒட்டுப்படையின் ஆயுதக்களைவின்
பின்தான் அடுத்த பேச்சு நடக்கும் என
விடுத்த புலியின் காலக் கெடுவுக்கு எதிராக

தடைசெய்யப் பட்டவற்றுக்கு
படைஆடை, ஆயுதம் கொடுத்து
மக்களிடை நடமாடி நாசம்செய்ய
இனவாதம் ஊக்கம் கொடுத்துள்ளது

அடுத்தபேச்சு ஜெனிவாவில் நடக்குமா
என விடுக்கும் கேள்விக்கு
மகிந்தா
அடுத்த போருக்கு ஆயுதம் தேடுவதை
காட்டலாம்

சேர்த்த நிதியெல்லாம் அவர்
அடுத்த பெரும் போருக்கு
ஆயுதம் வாங்க தீர்த்து வருகின்றார்

சிறீலங்கா கடற்படைத் தளபதி
சிறில்தயாசந்தகிரி பாக்கிஸ்தான் சென்று
குறிவைத்துத் தாக்கும்
எறிகணைப் படகுகளை வாங்கி வருகின்றார்

பாதுகாப்புச் செயலாளர்
கோத்தபாய தன் குழுவோடு
பளுவான பௌத்த நட்போடு



சீனாவுக்குச் சென்று
வான் கலுகுகள் வாங்கியதும்

மகிந்தர் மீண்டும் இந்தியா
பாக்கிஸ்தான் என்று குவித்தகையோடு
கூலிப்படை கோரிச் செல்வதும்
போருக்கன்றி வேறெதற்கு

நாலுவருடமாக சூல்கெய்ம் அலைந்து
கால்கள் தேய்ந்ததும்
வெள்ளைப் புலி என்ற
பட்டப்பெயர் கேட்டதும்
மல்லர் பிக்குகள் சேர்ந்து
நோர்வே நாட்டின் கொடியை எரித்ததும்
விரிந்த வரலாறாய் நிற்க
சரியும் ஜெனிவாப் பேச்சு

நும் சிங்கக் கொடிபிடித்த கொள்ளையரின்
படிமுறை ஏமாற்றால்
உலக நல்லெண்ணம்
இடிந்தன, எரிந்தன, மடிந்தன,
மறைந்தது சமாதானம்

ஜெனிவாப்பேச்சுக் கனியும்
பிணிதீரும்
என எண்ணுவோரே
மையல் விலக்கி
தொய்யல் தவிர்த்துத் தொழிற்படுங்கள்

நீர் வேய்ந்த விடுதலையின்
வாசலுக்கு விரைந்துவிட்டீர்
நீர் மாய்ந்த களைப்பாற
தாய் ஈழம்பிறக்குது.

ந.கிருஷ்ணசிங்கம்

https://tamileelamarchive.com/

நேர்கண்டவர்: தமிழன்பன் (ஜவான்)

> போர்க்காலச் சூழலில்
> தேசியத் தலைவரின் வழிநடத்தலில்
> வாழக்கூடிய ஒரு நல்ல வாழ்க்கையை
> வாழ்ந்துகொண்டிருக்கிறேன்



# நேர்காணல்: தமிழ்க்கவி

**எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிசயமான வியக்கத்தக்க எத்தனையோ சாதனைகள் நடந்திருக்கின்றன. எங்களுடைய தமிழீழ தேசியத் தலைவர் எங்களுடைய இனத்தை ஒரு சமத்துவ மான சமதர்மமுடைய நல்ல பலமான ஒரு இனமாக கட்டி வளர்த்து வருகிறார்.**

**அந்த வகையில் களங்களையும் புலங்களையும் கண்டு பேனா முனையிலும் துப்பாக்கி முனையிலும் ஏர்முனையிலும் நின்று தன்னை நிலை நிறுத்தி இன்று வரை அயராது உழைத்துக்கொண்டிருக்கும் ஒரு உயர்ந்த பெண்மணியைச் சந்திக்கின்றோம்.**

ஏகப்பட்ட தடைகளையும் நெருக்கடிகளையும் தாண்டி அயராது உழைத்து நிமிர்ந்து நிற்கும் ஒரு உயர்ந்த இலட்சியவாதியாகவும் ஒரு போராளியாகவும் இருக்கிறீர்கள்.

ஒரு எழுத்தாளராக இருக்கிறீர்கள். எழுத்தாளர் எனும்பொழுது சிறுகதை, நாடகம், வானொலி நாடகம், நாவல், வரலாறு என பல பக்கங்களில் இயங்குவதை நாங்கள் பார்க்கின்றோம். அதை விட ஒரு பாடகியாகவும் இருக்கிறீர்கள்.

கிராமியப் பாடகியாக, கிராமியக் கலைஞராக சிறப்பாக இயங்குகிறீர்கள். ஒரு வீடியோ படப்பிடிப்பாளராக, படத் தொகுப்பாளராக, நெறியாளராக, படத்தயாரிப்பாளராக இயங்குகிறீர்கள்.

புலிகளின் குரல் வானொலியில் நீண்டகாலமாக நிகழ்ச்சி எழுத்தாளராக தயாரிப்பாளராக, நெறியாளராக இருக்கிறீர்கள். அந்த வகையில வானொலியூடாகவும் தொலைக்காட்சியூடாகவும், எழுத்து இலக்கியங்களூடாகவும் உங்களுடைய படைப்புக்கள் மக்களைச் சென்றடைந்திருக்கின்றன. அத்தோடு நீங்கள் உங்களை நல்ல ஒரு ஊடகவியலாளருக்குரிய தன்மையை வலுப்படுத்தி வழிகாட்டி வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு சட்டவாளராக இருக்கிறீர்கள். அவை எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் ஒரு மாவீரனுடைய தாயார். போராளியினுடைய தாயார். நல்ல விவசாயி. தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளை சரளமாக பேசக்கூடியவர். உங்களுடைய இந்த நீண்ட வரலாற்றில் இன்று நீங்கள் நிற்கும் நிலை வரைக்குமான அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**தமிழ்க்கவி : இவ்வளவு நீண்ட பட்டியலுக்குரியவளாக என்னை நான் ஒரு போதும் கருதிக்கொள்ளவில்லை. நீங்கள் சொல்லுவது அத்தனையும் என்னுடைய வாழ்க்கை. நான் ஒரு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். இந்தப் போராட்டச் சூழலில் எமது தேசியத் தலைவர் அவர்கள் பிறந்த அந்தக் காலத்தில் நானும் பிறந்தேன்.**

**அந்தக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். அந்தக் காலத்திலே உணர்ந்துகொண்டிருக்கின்றேன். என்கின்ற வகையிலே தான் என்னுடைய செயற்பாடுகளை நான் கூறக்கூடியதாக இருக்கும். வாசகர்களோடு நான்**

https://tamileelamarchive.com/

பகிர்ந்துகொள்ளக்கூடியதாக நீங்கள் சொல்லும் இவ்வளவு பரிமாணங்களையும் எட்டி இருக்கிறேன் என்றால் அதற்கு போராட்டச் சூழல் ஒரு வழிகாலாக இருந்திருக்கும். போராட்டம் என்கிறது வந்து என்னை மட்டுமல்ல இன்றைக்கு தமிழீழ மண்ணில இதை விட வியத்தகு சாதனைகளை நிறையவே செய்திருக்கு. அந்த வகையிலே போராட்டம் வார்த்தெடுத்த ஒரு வார்ப்பாக நான் அமைந்திருக்கிறேன்.

நல்ல ஒரு தலைவருக்குக் கீழ் எங்களை அணிதிரட்டிக்கொண்டதன் மூலமாகத்தான் எங்களுடைய இத்தனை வெளிப்பாடுகளும் நீங்கள் சொல்லுகின்ற இத்தனை பரிமாணங்களும் வாய்த்திருக்கிறது. சாதாரணமாக எல்லாப் பெண்களுக்குள்ளும் இருக்கின்ற ஒரு ஆற்றல் தான், அதை நாங்கள் வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இந்த போராட்டம், இந்த இயக்கம், இந்த இயக்கத்தினுடைய தலைவர் வழங்கியிருக்கிறார், அவர்கள் வெட்டிவிட்ட அந்த வாய்க்காலினூடாக ஓடிக்கொண்டிருக்கும் நீர் மட்டும் தான் நான்.

அந்த நீரை உரிய இடங்களுக்கு மடைமாற்றி அதன் மூலம், இந்தச் சமுதாயம் பெறக்கூடிய ஒரு பயனை வழங்கியிருக்கிறது என்று சொன்னால், எங்களுடைய இயக்கத்தையும் தலைவரையும் அவருடைய நெறியாள்கையின் கீழ் இருக்கின்ற இந்த நிறுவனங்களையும் தான் சொல்லலாம். நான் பிறந்ததில இருந்து சாதாரணமா ஒரு விவசாயின் மகள். அதுவும் நாகரீக வளர்ச்சியைக் காணாத ஆதிவாசிகளைப் போல வேட்டையோடு புலக்களோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற, வாழ்ந்துகொண்டிருந்த ஒரு சாதாரண விவசாயினுடைய மகளாக நான் பிறந்து, நவநாகரீகமான உலகத்தில் கணணிக்கு முன் இருந்து இப்பொழுது தொழில் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், இந்த நீரை உரிய இடத்திற்கும் மடை மாற்றி அந்த உரிய பயனை விளைவித்த பெருமைவந்து தேசியத் தலைவருக்குத்தான்.

இந்தப் பெருமையை நான் ஒரு போதும் சொந்தம்கொள்ள முடியாது. ஏனென்றால் எனக்குள் இந்த ஆற்றல் இருக்குதா என்ற அந்த செய்தியை வந்து என்னால ஏற்றுக்கொள்ளமுடியேல்ல ஏதோசெய்துகொண்டிருக்கிறேன்.

உங்களிடம் இருக்கும் ஆற்றல்களை மடை திறந்து வைத்தது இந்த விடுதலை போராட்டமா?

■ தலைவரால் கண்டு வழிநடத்தப்படுகிறேன் என்று ஒற்றைப் போக்கில சொல்றது மிகைப்படுத்தலாக இருக்காது. ஏனென்று சொன்னால் இந்த வழியும் இந்த வாய்க்காலும் அவர் அமைத்தது. இந்த இயக்கத்துக்கு வருகின்ற வழிவாய்க்கால் கூட அவர் அமைத்தது. இயக்கத்திற்கு வருவதற்கான அந்த வாய்க்காலை சில வேளை சிங்கள அரசாங்கம் வெட்டிவிட்டு இருக்கலாம். ஆனால் வாய்க்காலில் விழுந்த நீரை உரிய பயனுக்குக் கொண்டு வந்து வைத்தது இந்த விடுதலைப்போராட்டம் தான். இந்தப் பெருமையில துளியைத்தனையும் கொண்டாடுவதில் எந்த விதமான உரிமையும் எனக்கில்லை. நான் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். நான் முதலிலேயே சொன்னது போல போர்க்காலச் சூழலில் இந்த தேசியத் தலைவரின் வழிநடத்தலில் வாழக்கூடிய ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இதைத் தவிர வேற ஒன்றும் சொல்வதற்கில்லை. வாழ்க்கையினுடைய அமைப்பு நீங்கள் கூறுவது போல பல பரிமாணங்களைக் கொண்டிருக்கலாம். இது ஒரு வாழ்க்கை.

உங்கட ஆரம்ப கால வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்த மோசமான துயரங்கள் இருக்கலாம் எதிர்கொண்ட பலத்த நெருக்கடிகள் இருக்கலாம் அவற்றை எவ்வாறு தாண்டி வந்தீர்கள்?


■ நான் வாழ்ந்துகொண்டிருக்கிற காலத்தை விட, பிறந்து வளர்ந்த காலத்தை பற்றிக் கதைக்கலாம் என நினைக்கிறேன்.

எங்களுடைய கிராமத்திலேயே மிதி வண்டிகள் இல்லாத காலப்பகுதியில நான் மிதி வண்டி ஓடியதே ஒரு சாதனையாகக் கருதப்பட்டது. இது கூட எனது சமுதாயத்தை எதிர்த்துச் செய்த

தலைவரால் கண்டு வழிநடத்தப்படுகிறேன் என்று ஒற்றைப் போக்கில சொல்றது மிகைப்படுத்தலாக இருக்காது. ஏனென்று சொன்னால் இந்த வழியும் இந்த வாய்க்காலும் அவர் அமைத்தது. இந்த இயக்கத்துக்கு வருகின்ற வழிவாய்க்கால் கூட அவர் அமைத்தது. இயக்கத்திற்கு வருவதற்கான அந்த வாய்க்காலை சில வேளை சிங்கள அரசாங்கம் வெட்டிவிட்டு இருக்கலாம். ஆனால் வாய்க்காலில் விழுந்த நீரை உரிய பயனுக்குக் கொண்டு வந்து வைத்தது இந்த விடுதலைப்போராட்டம் தான். இந்தப் பெருமையில துளியைத்தனையும் கொண்டாடுவதில் எந்த விதமான உரிமையும் எனக்கில்லை. நான் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்.



https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: கஜானி

காரியம். 'ரலி' சைக்கிள் மிகப் பாரமானது. அந்த சைக்கிளுக்கு பலகையில் கரியல் போட்டு, நல்ல பலமான ஸ்ரான்ட் அடித்திருப்பார்கள், சைக்கிள உருட்டும் பொழுது அந்த ஸ்ரான்ட் எழும்பி 'படக்' என அடிக்கும். அந்த சைக்கிளை தள்ளும் போது அடித்து விழுந்திருக்கிறோம். அப்பா சைக்கிள உருட்டும் பொழுது பின்னுக்கு நிண்டு ஸ்ரான்ட் அடிச்சு காயப்பட்டிருக்கிறேன். சின்னப் பராயம். வெய்யில்ல நிண்ட சைக்கிள உருட்டி வைக்கிறத்துக்கு அடுத்த வீட்டில இருந்து ஒரு ஆம்பிளப்பிள்ளைய கூப்படச் சொல்லி அம்மா சொன்ன போது எனக்கு ஒரு ஆவல் வந்தது.

'ஏன் ஆம்பிளை வந்து உருட்டி வைக்கோணும் நான் உருட்டி வைச்சா என்ன? என்று நான் சைக்கிள உருட்டப் போன போது அம்மா வெளியால வந்து 'எடியேய்' எனச் சத்தம் போட நான் சைக்கிள தடுமாறி கீழ போட அந்த சைக்கிள உருட்ட வந்தவர் தலையில நறுக்கெண்டு குட்டு வைச்சு 'பெட்டச்சிக்கு ஏன் இந்த வேலை' எனக் கேட்டுட்டார்.

எனக்கு 'பெட்டச்சி' என்ற வார்த்தை அப்பவே சுட்டிற்று. அப்ப நான் ஓடவேண்டும் என்ற அந்த விரதத்தை வைச்சிருந்து மிகக் குறுகிய காலத்தில கொழும்பில இருந்து வந்த எனது மைத்துனரிடம் அவர் இப்போது அக்காவின் கணவராக இருக்கிறார். அவருடைய ஆதரவோடுதான் 'இந்தச் சைக்கிள உருட்டக் காட்டித் தாங்கோ' என்று கேட்டனான்.

அவர் சொன்னார் 'கொழும்பில பெண்கள் சைக்கிள் ஓடுகிறார்கள். நான் ஓடவே உனக்குக் காட்டித்தாறன்' அவர் காட்டித் தந்தார். ஒரு மூன்று தின நிலவில வீட்டில உள்ள அங்கத்தவர்கள் யாருக்கும் தெரியாமல் அந்தச் சைக்கிளை ஓடக்கற்றுக்கொண்டு, வீதியில அந்தச் சைக்கிள் ஓட்டத்தை நடத்தியபோது முதல் முறையாக என்னுடைய தாயார் தற்கொலைக்கே தயாராகி விட்டார். 'இப்படி ஒரு அடங்காப்பிடாரியை பெற்றதற்கு சாகலாம்' என்று சொல்லி. இப்ப கேட்கும் போது நகைச்சுவையாக இருக்கிறது. பக்கத்துவீட்டுப் பெண்களெல்லாம் வந்து அம்மாவுக்குப் சரியான பேச்சு. 'என்ன பிள்ளை பெத்து வைச்சிருக்கிற நீ , இப்படி ஒரு பிள்ளையைப் பெத்ததுக்கு செத்துப்போகலாம்' அம்மாட்ட இப்படி ஒரு கோபம் இருந்தது. இதை வந்து அப்பாவுக்குச் சொல்லப்போறா, அப்பா அடிக்கப்போறோர் அப்பாட்ட அந்த நேரம் சவுள் அடி வாங்குவன். சரியான குழப்படியும்தான் நான். 'அவள் தன்ர காலால தன்ர உடம்பால செய்யிறத நீ ஏன் தடுக்கிற, அதைப் பற்றி உங்களுக்கென்ன' என்று கேட்டுப்போட்டார்.

அந்த வயதில தந்தையை தொட்டுப் பேசுகிற வழக்கம் பெண் பிள்ளைகளிடம் இல்லை, இப்ப இருக்கு. ஆனால் அந்த நேரம் நான் அப்பாவை ஓடிப்போய் கட்டிப்பிடித்தன், அதுக்கு அடுத்த பேச்சு விழுந்தது. 'பொம்பிளப்பிள்ள இந்த வயசில போய் ஏன் அப்பாவை கட்டிப்பிடிக்கிறது' பொம்பிளப்பிள்ளை எட்ட நிண்டு கதைக்கோணும், ஆம்பிளப்பிள்ளை கிட்ட நிண்டு கதைக்கலாம். நான் அப்புவோட அப்படிப் பழகேல்ல. இரண்டு வாரத்துக்குள்ளேயே அப்பு எனக்கு வேலைகள் தரத்தொடங்கிவிட்டார். "பிள்ளை கொஞ்சம் எட்டப் போய் வயலுக்குள்ள மாடு நிக்கா எண்டு பாத்துக்கொண்டோடியா சைக்கிளக் கொண்டோடு".

நான் கொண்டுபோவன். என்னை உதாரணம் காட்டி மற்றவர்கள் தங்களுடைய பிள்ளைகளை வளர்க்கிற காலம் வந்துவிட்டது. யார் வந்து என்ர அம்மாவுக்கு கோள் சொன்னாவோ அந்தப் பெண்ணின் மகள் இரண்டு வருடத்தில் சைக்கிள் ரேசில் கப்பெடுத்தவா. அப்ப காலம் மாறிவிட்டது. முதல் மாற்றத்தை நான் செய்தன்.

அதே போல படிக்கவேண்டும் என்று சரியான ஆர்வம். ஜி.ஜி பொன்னம்பலத்தின் கதையை எல்லா இடமும் பேசினார்கள். வழக்குகளை உடைக்கிற விசயம் பற்றி பேசினார்கள். நான் இதைச் சொல்லியே ஆகவேணும் ஏனெண்டு சொன்னால் எனக்கு ஒரு சட்டவாளராக வரவேண்டும் என்று அப்பவே ஆசை, நானும் ஒரு கறுப்புக் கோட்டணிந்து நீதிவானுக்கு முன்னால பேசவேண்டும் என்று ஆசை இருந்தது, கல்வி வந்து எனக்கு இடையிலேயே நிறுத்தப்பட்டு போய் விட்டது.

என்ன பிரச்சனை என்று சொன்னால் ராணுவம் வந்து எங்களுடைய கிராமங்களை அண்டி நிலைப்படுத்திக்கொண்டார்கள். 1961ம் ஆண்டு

https://tamileelamarchive.com/

சிறிமாவோவினுடைய இராணுவம் வடபகுதிக்கு அனுப்பப்பட்டபோது எங்களுடைய கிராமத்துக்கு அண்மையிலதான் யோசப்காம் இருக்கிற இடம்.

அந்த இடத்தில தான் முகாம் அமைச்சு நிறைய இராணுவத்தை தங்க வைச்சிருந்தார்கள். அந்தப் பகுதியைத் தாண்டித்தான் பாடசாலைக்குப் போகவேண்டும். இதுக்கு முதலே இனக்கலவரம் 1958ம் ஆண்டு நடந்த போது ஒரு பன்னிரண்டு வயசுப் பெண் பிள்ளை எங்களுக்கு மூப்பு; அந்தப் பிள்ளையை எங்கட வீட்டில அந்தக் குடும்பத்தைப் பிரிச்சு குடியேற்றின பொழுது முதல் கொண்டு வந்து சங்கத்துக்காகக் கட்டப்பட்ட ஸ்ரோரில கட்டிடத்தில அகதியாக வைச்சிருந்தார்கள்.

பிறகு பிரிச்சு வீடு வீடா கேட்டு இரண்டு குடும்பங்களை ஒவ்வொரு வீட்டிலையும் விட்டிச்சினம். அப்ப எங்கட வீட்டுக்கு வந்த குடும்பத்தில ஒரு பிள்ளை அவாவுக்கு பன்னிரண்டு வயசிருக்கும். அந்தப் பிள்ளையை விளையாடுறத்துக்கு கூப்பிட்டா அவாட அம்மா வந்து மோசமாப் பேசுவா. அந்தப் பிள்ளையைப் பேசுவா. 'அதில ஏன்டி உக்காந்திருக்கிற, அதில ஏன்டி சிரிக்கிற, அவங்களை ஏன்டி பார்க்கிற.' அந்தப் பிள்ளை அழுதுகொண்டே தான் இருக்கும்.

என்ன நடக்கிறது எண்டு எங்களுக்குத் தெரியாது. ஒரு நாள் எல்லாருக்கும் அந்தப் பிள்ளேல ஒரு அனுதாபம் இருந்தது. கிணத்தடிக்குக் குளிக்கப் போச்சுது. நாங்களும் கூடப் போனோம் தண்ணி அள்ளி ஊத்த. என்னுடைய நாவலிலையும் குறிச்சிருந்தன் அந்த சம்பவத்தை. அப்பதான் பார்த்தன் அந்த பிள்ளையினுடைய உடையை, நீரில் அலம்பி வெளியால எடுக்கேக்குள்ள இந்தத் தண்ணி சிவப்பா மாறிவிட்டது. போட்டிருந்த உடுப்பு பச்சை நிறம். அந்தப் பிள்ளையினுடைய உடையை அலம்பி எடுக்கும் பொழுது சிவப்பா வருது தண்ணி.

அப்ப பச்சைத் துணியில எப்படி சிவப்புச் சாயம் வரும் நான் போய் எங்கட வயசுக்காரரோட கதைக்க, அந்தக் கதை அம்மாவுக்கு எட்ட, அம்மா போய் அந்த அம்மாவக் கூப்பிட்டுப் பேச, "என்ன அந்த பிள்ளை பெருசாகிட்டுதா, ஒளிச்சுவைச்சிருக்கிறேயா?" தீட்டுத் தொடக்கெல்லாம் பெருசாப் பார்க்கிற காலம் கிணத்தடியெல்லாம் கண்டபடி பழகிடுவினம். அதுக்குப் பிறகு தான் அந்த அம்மா அழுதுகொண்டே சொல்றா 'தன்னுடைய பிள்ளையை ஒரு நாலு சிங்களவர் சேர்ந்து....' பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர் என்ற சம்பவம் வருகுது.

அப்ப அந்த இனக்கலவர நேரம் எங்க ஊருக்கு ஒரு வானொலி பெட்டி இருந்தது. அது இடம் பெயர்ந்த வந்த ஒருவருடையது. இரவு அந்த வானொலிப் பெட்டியில் செய்திகள் கேட்கிறதுக்கு அயல் எல்லாம் கூடும். அன்றைக்கு அந்த அயலெல்லாம் கூடினது செய்தி கேட்க அல்ல, அந்தச் செய்தியை பரிமாறிக்கொள்ள. அந்தச் சம்பவத்தைச் சொல்லி அந்த நேரம் எங்களுக்கு விளக்கம் அளிக்கேல்ல. பாடசாலைக்கு நான் போகேக்குள்ள ஒன்பதாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தன். ஒன்பதாம் ஆண்டு பரீட்சை எழுதிப்போட்டு அடுத்த வகுப்புக்கான பாடசாலைக்குப் போகும் போது 'இராணுவம் வந்து நிற்கிறான்; இந்தப் பாதையால இனி பள்ளிக்குப் போகேலாது. நீ பள்ளிக்கூடத்துக்குப் போனாய் எண்டா உனக்குத் தெரியும் தானே பூவாய்க்கு நடந்த விசயம்.'

பூவாய்க்கு என்ன நடந்தது என்ற விசயத்தை அம்மா எனக்குச் சொல்றா. நாக்கு அண்ணத்தில ஒட்ட அப்படியே ஆவென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். விளங்கியும் விளங்காத வயசு. இந்தக் கதையை கேட்கேக்க எனக்கு பன்னிரண்டு வயசு. அப்ப நாலு வருசத்துக்குப் பிறகுதான் எனக்கு விளக்கம் சொல்றா. அந்தக் கேள்வியோடையே என்னுடைய படிப்பு முடிஞ்சுது.

பாடசாலையால நிண்ட பிறகு சட்டவாளராகிற கனவு, ஆசிரியராகிற கனவு அல்லது சங்கீதம் பாடுகிற ஒரு கனவு எல்லாம் அதோட முடிஞ்சுது. பிறகு, எங்கட குடும்பத்தில மூத்த ஆம்பிளப்பிள்ளை இல்லை. நாங்கள் முன்னுக்குப் பிறந்தது மூன்று பேரும் பொம்பிளப்பிள்ளையள். அதுக்குப் பிறகு பின்னுக்குப் பிறந்தது ஆம்பிளப்பிள்ளையள். ஒட்டு மொத்தமா எங்கட அம்மா பதினொரு பிள்ளைகளைப் பெத்தா. அப்பாவுக்கு நான் சைக்கிளும் ஓடப் பழகிட்டேன் தானே.

அதால கலப்பை கொண்டு போறது வயலுக்கு, மாடு கொண்டு போறது உழுகிறது.... அப்பா வயலில தனியப்பாடு படுவார். கூலியாள் போடமாட்டார்.

அப்ப நாங்கள் தேத்தண்ணி கொண்டு போய் கொடுக்கேக்குள்ள மாடு பூட்டோட நிண்டா கொஞ்சம் கலைப்பம். கலைச்சு உழுதா அவருக்கு உதவியா இருக்கும். திருப்பி மேட்டு வயல் திருத்துகிற நேரமெல்லாம் அவர் மண்ணைக் குத்தித் தர நாங்கள் பலகையை இழுப்பம்.

காணி திருத்தித் திருத்தி வேலை செய்றது, கட்டைகளுக்கு நெருப்பு வைக்கிறது, வெட்டும் போதெல்லாம் ஒரடி இரண்டடி சுற்றுமரங்களை அப்பா பிரிச்சு தந்திடுவார்.

அதுக்குரிய கோடாலியும் தருவார். 'அம்மா நீ மத்தியானத்துக்குள்ள இந்த மரத்த விழுத்திப் போட்டாயெண்டா உனக்கு ஒரு பாவடை வேண்டித் தருவேன்'. பாவடையெண்டா நீங்க பெருசா எதிர்ப்பார்க்காதீங்க சீத்தைப் பாவடை. இன்னொரு மரம் தங்கச்சிக்குக் கொடுப்பார். அவாவுக்குக் கொஞ்சம் குறைவு. அப்படி கைப்பருமன் உள்ள மரங்களை பிரிச்சுப் பிரிச்சு எங்களிட்ட தந்துபோட்டு மற்ற பெரிய மரங்களை அவர் எப்படியோ தான் தறிச்சுக் கிளிச்சுப் போடுவார்.

எல்லா வேலைகளிலேயுமே நாங்கள் அப்புவோட பங்குபற்றி வருவோம். வீட்ட வர அம்மா தொடங்குவா. 'ஒரு வெங்காயம் உரிக்கத் தெரியாது, ஒரு பச்சை மிளகாய் வெட்டத் தெரியாது, தேத்தண்ணி ஊத்தத் தெரியாது, கொண்டு திரியிறீங்க பின்னால, கொண்டு திரியிறீங்க பின்னால, நாளைக்கு வாறவனிட்ட குத்துப்படப் போறாள்!' அம்மா நெடுகப் பேசிக்கொண்டே இருப்பா. அப்பு சொல்லுவார் 'எணைய் நீ பேசாமல் இரு பேசாமல் இரு, பொம்பிளப்பிள்ளை எண்டு பார்க்கக்கூடாது.'

அப்ப தமிழரசுக் கட்சி ஊர்வலத்துக்கெல்லாம் என்னை தோளில தூக்கிக்கொண்டு போகேக்குள்ள அதத்தான் சொல்லுவார். 'விடுதலை என்பது பொம்பிளையளுக்கும் வேணும் அது நீ எண்ணிப்பாக்கத்தான் வேணும்' விளங்குதோ விளங்கேல்லையோ சொல்லிக்கொண்டு இருப்பார். மேடைகளில பேசுற கூட்டங்களில தமிழ் பெண்களுக்கென்று ஒரு நாள் நடந்தது. இப்ப இருக்கிற சைவப்பிரகாசவித்தியாசாலையில், அப்ப கட்டிக் குறை, அதுக்கதான் நடந்தது, அந்த மாநாட்டில போய் அப்ப ஏழெட்டு வயசுதான், 47ம் ஆண்டு பிறந்தனான், 57ம் ஆண்டு அந்த

https://tamileelamarchive.com/

சிறிமாவோவினுடைய இராணுவம் வடபகுதிக்கு அனுப்பப்பட்டபோது எங்களுடைய கிராமத்துக்கு அண்மையிலதான் யோசப்காம் இருக்கிற இடம்.

அந்த இடத்தில தான் முகாம் அமைச்சு நிறைய இராணுவத்தை தங்க வைச்சிருந்தார்கள். அந்தப் பகுதியைத் தாண்டித்தான் பாடசாலைக்குப் போகவேண்டும். இதுக்கு முதலே இனக்கலவரம் 1958ம் ஆண்டு நடந்த போது ஒரு பன்னிரண்டு வயசுப் பெண் பிள்ளை எங்களுக்கு மூப்பு; அந்தப் பிள்ளையை எங்கட வீட்டில அந்தக் குடும்பத்தைப் பிரிச்சு குடியேற்றின பொழுது முதல் கொண்டு வந்து சங்கத்துக்காகக் கட்டப்பட்ட ஸ்ரோரில கட்டிடத்தில அகதியாக வைச்சிருந்தார்கள்.

பிறகு பிரிச்சு வீடு வீடா கேட்டு இரண்டு குடும்பங்களை ஒவ்வொரு வீட்டிலையும் விட்டிச்சினம். அப்ப எங்கட வீட்டுக்கு வந்த குடும்பத்தில ஒரு பிள்ளை அவாவுக்கு பன்னிரண்டு வயசிருக்கும். அந்தப் பிள்ளையை விளையாடுறத்துக்கு கூப்பிட்டா அவாட அம்மா வந்து மோசமாப் பேசுவா. அந்தப் பிள்ளையைப் பேசுவா. 'அதில ஏன்டி உக்காந்திருக்கிற, அதில ஏன்டி சிரிக்கிற, அவங்களை ஏன்டி பார்க்கிற.' அந்தப் பிள்ளை அழுதுகொண்டே தான் இருக்கும்.

என்ன நடக்கிறது எண்டு எங்களுக்குத் தெரியாது. ஒரு நாள் எல்லாருக்கும் அந்தப் பிள்ளேல ஒரு அனுதாபம் இருந்தது. கிணத்தடிக்குக் குளிக்கப் போச்சுது. நாங்களும் கூடப் போனோம் தண்ணி அள்ளி ஊத்த. என்னுடைய நாவலிலையும் குறிச்சிருந்தன் அந்த சம்பவத்தை. அப்பதான் பார்த்தன் அந்த பிள்ளையினுடைய உடையை, நீரில் அலம்பி வெளியால எடுக்கேக்குள்ள இந்தத் தண்ணி சிவப்பா மாறிவிட்டது. போட்டிருந்த உடுப்பு பச்சை நிறம். அந்தப் பிள்ளையினுடைய உடையை அலம்பி எடுக்கும் பொழுது சிவப்பா வருது தண்ணி.

அப்ப பச்சைத் துணியில எப்படி சிவப்புச் சாயம் வரும் நான் போய் எங்கட வயசுக்காரரோட கதைக்க, அந்தக் கதை அம்மாவுக்கு எட்ட, அம்மா போய் அந்த அம்மாவக் கூப்பிட்டுப் பேச, "என்ன அந்த பிள்ளை பெருசாகிட்டுதா, ஒளிச்சுவைச்சிருக்கிறேயா?" தீட்டுத் தொடக்கெல்லாம் பெருசாப் பார்க்கிற காலம் கிணத்தடியெல்லாம் கண்டபடி பழகிடுவினம். அதுக்குப் பிறகு தான் அந்த அம்மா அழுதுகொண்டே சொல்றா 'தன்னுடைய பிள்ளையை ஒரு நாலு சிங்களவர் சேர்ந்து....' பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர் என்ற சம்பவம் வருகுது.

அப்ப அந்த இனக்கலவர நேரம் எங்க ஊருக்கு ஒரு வானொலி பெட்டி இருந்தது. அது இடம் பெயர்ந்த வந்த ஒருவருடையது. இரவு அந்த வானொலிப் பெட்டியில் செய்திகள் கேட்கிறதுக்கு அயல் எல்லாம் கூடும். அன்றைக்கு அந்த அயலெல்லாம் கூடினது செய்தி கேட்க அல்ல, அந்தச் செய்தியை பரிமாறிக்கொள்ள. அந்தச் சம்பவத்தைச் சொல்லி அந்த நேரம் எங்களுக்கு விளக்கம் அளிக்கேல்ல. பாடசாலைக்கு நான் போகேக்குள்ள ஒன்பதாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தன். ஒன்பதாம் ஆண்டு பரீட்சை எழுதிப்போட்டு அடுத்த வகுப்புக்கான பாடசாலைக்குப் போகும் போது 'இராணுவம் வந்து நிற்கிறான்; இந்தப் பாதையால இனி பள்ளிக்குப் போகேலாது. நீ பள்ளிக்கூடத்துக்குப் போனாய் எண்டா உனக்குத் தெரியும் தானே பூவாய்க்கு நடந்த விசயம்.'

பூவாய்க்கு என்ன நடந்தது என்ற விசயத்தை அம்மா எனக்குச் சொல்றா. நாக்கு அண்ணத்தில ஒட்ட அப்படியே ஆவென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். விளங்கியும் விளங்காத வயசு. இந்தக் கதையை கேட்கேக்க எனக்கு பன்னிரண்டு வயசு. அப்ப நாலு வருசத்துக்குப் பிறகுதான் எனக்கு விளக்கம் சொல்றா. அந்தக் கேள்வியோடையே என்னுடைய படிப்பு முடிஞ்சுது.

பாடசாலையால நிண்ட பிறகு சட்டவாளராகிற கனவு, ஆசிரியராகிற கனவு அல்லது சங்கீதம் பாடுகிற ஒரு கனவு எல்லாம் அதோட முடிஞ்சுது. பிறகு, எங்கட குடும்பத்தில மூத்த ஆம்பிளப்பிள்ளை இல்லை. நாங்கள் முன்னுக்குப் பிறந்தது மூன்று பேரும் பொம்பிளப்பிள்ளையள். அதுக்குப் பிறகு பின்னுக்குப் பிறந்தது ஆம்பிளப்பிள்ளையள். ஒட்டு மொத்தமா எங்கட அம்மா பதினொரு பிள்ளைகளைப் பெத்தா. அப்பாவுக்கு நான் சைக்கிளும் ஓடப் பழகிட்டேன் தானே.

அதால கலப்பை கொண்டு போறது வயலுக்கு, மாடு கொண்டு போறது உழுகிறது.... அப்பா வயலில தனியப்பாடு படுவார். கூலியாள் போடமாட்டார்.

அப்ப நாங்கள் தேத்தண்ணி கொண்டு போய் கொடுக்கேக்குள்ள மாடு பூட்டோட நிண்டா கொஞ்சம் கலைப்பம். கலைச்சு உழுதா அவருக்கு உதவியா இருக்கும். திருப்பி மேட்டு வயல் திருத்துகிற நேரமெல்லாம் அவர் மண்ணைக் குத்தித் தர நாங்கள் பலகையை இழுப்பம்.

காணி திருத்தித் திருத்தி வேலை செய்றது, கட்டைகளுக்கு நெருப்பு வைக்கிறது, வெட்டும் போதெல்லாம் ஒரடி இரண்டடி சுற்றுமரங்களை அப்பா பிரிச்சு தந்திடுவார்.

அதுக்குரிய கோடாலியும் தருவார். 'அம்மா நீ மத்தியானத்துக்குள்ள இந்த மரத்த விழுத்திப் போட்டாயெண்டா உனக்கு ஒரு பாவடை வேண்டித் தருவேன்'. பாவடையெண்டா நீங்க பெருசா எதிர்ப்பார்க்காதீங்க சீத்தைப் பாவடை. இன்னொரு மரம் தங்கச்சிக்குக் கொடுப்பார். அவாவுக்குக் கொஞ்சம் குறைவு. அப்படி கைப்பருமன் உள்ள மரங்களை பிரிச்சுப் பிரிச்சு எங்களிட்ட தந்துபோட்டு மற்ற பெரிய மரங்களை அவர் எப்படியோ தான் தறிச்சுக் கிளிச்சுப் போடுவார்.

எல்லா வேலைகளிலேயுமே நாங்கள் அப்புவோட பங்குபற்றி வருவோம். வீட்ட வர அம்மா தொடங்குவா. 'ஒரு வெங்காயம் உரிக்கத் தெரியாது, ஒரு பச்சை மிளகாய் வெட்டத் தெரியாது, தேத்தண்ணி ஊத்தத் தெரியாது, கொண்டு திரியிறீங்க பின்னால, கொண்டு திரியிறீங்க பின்னால, நாளைக்கு வாறவனிட்ட குத்துப்படப் போறாள்!' அம்மா நெடுகப் பேசிக்கொண்டே இருப்பா. அப்பு சொல்லுவார் 'எணைய் நீ பேசாமல் இரு பேசாமல் இரு, பொம்பிளப்பிள்ளை எண்டு பார்க்கக்கூடாது.'

அப்ப தமிழரசுக் கட்சி ஊர்வலத்துக்கெல்லாம் என்னை தோளில தூக்கிக்கொண்டு போகேக்குள்ள அதத்தான் சொல்லுவார். 'விடுதலை என்பது பொம்பிளையளுக்கும் வேணும் அது நீ எண்ணிப்பாக்கத்தான் வேணும்' விளங்குதோ விளங்கேல்லையோ சொல்லிக்கொண்டு இருப்பார். மேடைகளில பேசுற கூட்டங்களில தமிழ் பெண்களுக்கென்று ஒரு நாள் நடந்தது. இப்ப இருக்கிற சைவப்பிரகாசவித்தியாசாலையில், அப்ப கட்டிக் குறை, அதுக்கதான் நடந்தது, அந்த மாநாட்டில போய் அப்ப ஏழெட்டு வயசுதான், 47ம் ஆண்டு பிறந்தனான், 57ம் ஆண்டு அந்த

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: சஜானி

பள்ளிக்கூடத்தில இருக்கிற சக மாணவிகள் எல்லாருக்கும் நான் தான் அந்தக் கதை சொல்லி. எல்லாருக்கும் கதை தெரியும் பேப்பர் எடுக்கினமோ எடுக்கேல்லையோ கதை தெரியும். அப்படிக் கதை சொல்லிக் கொண்டு வந்தா அப்ப ஒரு யோசனை எனக்கு வகுப்பில மாஸ்ரர் எழும்பிச் சொல்லுவார். ஒரு பாடத்தை விளங்கப்படுத்தும் போது சரித்திரப் புத்தகம், பூமி சாத்திரப் புத்தகம், ஒராள் வாசியிங்க எண்டு சொல்லிப்போட்டு எல்லாருக்கும் விளங்கப்படுத்துவார். சில நேரம் நான் எழும்பி நிண்டு வாசிப்பன். புதுசா எங்களுக்கு வந்தவர் அந்த ஆசிரியர் ஐந்தாம் ஆண்டு அரசாங்கச் சோதனை ஒன்பது வயசு எனக்கு அப்ப வகுப்பில சாதாரணமா கெட்டிக்காரியா இருந்தனான். இப்ப உள்ளது போல எனக்கு உணரத்தெரியேல்ல. அந்தப் பரீட்சையில மூன்று பாடம் வைப்பினம் ஆங்கிலம், கணிதம், தமிழ், பொதுஅறிவு. ஆங்கிலப் பாடத்தில மாகாணத்தில முதல் மாணவி என்ற விருது எங்கட பாடசாலைக்கு வந்தது. அந்த முதல் மாணவி யாரெண்டா அப்ப எங்களுக்குத் தெரியாது. லீவு முடிஞ்சும் போன பிறகு அந்த வகுப்பிலேயே கடைசி வாங்கில இருக்கிற ஆள் நான்தான். ஏனென்றால் முன் வாங்கெல்லாம் உத்தியோகத்தருடைய பிள்ளைகளுக்கு; இரண்டாம் வாங்கு கொஞ்சம் வர்த்தகர் காசுக்காரருடைய பிள்ளைகளுக்கு; அடுத்த வாங்கு அதையும் விட கொஞ்சம் கார் வைச்சிருக்கிறவைக்கு, சைக்கிள் வைச்சிருக்கிறவைக்கு. சைக்கிள் வைச்சிருக்கிறவனும் அப்ப பணக்காரன் தான். பின் வாங்கில உண்மையிலே பிச்சை எடுக்கிற குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகள் இருந்தது. எங்களை அந்தப் பிள்ளைகளோட தள்ளி விட்டிடுவினம். ஏனென்றால் நான் கறுப்பு. தாழ்வுணர்ச்சியை நான் அங்கிருந்து பொறுக்கிறன். பின் வாங்கி தள்ளி விட்டிருவினம். அப்ப வகுப்பில நான் ஒரு முன்னணிக்குரிய ஆள் என்று எனக்குத் தெரியவே தெரியாது. நான் அப்படி நினைக்கவும் இல்லை. ஏதோ படிச்சுக்கொண்டிருக்கிறன். அப்ப 'மாகாணத்துக்குள்ள முதல் மாணவி எங்கட வகுப்பில வந்திருக்காம்' எண்டு ஆசிரியர் சொல்லுறார். யாரெண்டு சொல்லேல்ல. அப்ப எல்லாரையும் கூப்பிட்டாச்சு மேடையை குவிச்சாச்சு ரீச்சர்ரெல்லாம் வந்தாச்சா, வந்தோண்ண இவர் சொன்னேர் மாஸ்ரரில்லத்தானே. வாத்தியார், வாத்தியாரம்மா, பெரிய வாத்தியார் தலைமை வாத்தியார் பெரிய வாத்தியார் மற்ற எல்லாரும் வாத்தியார். அப்ப வாத்தியார் வந்து சொல்றார் 'எங்கட வகுப்பில இருக்கிற பிள்ளைக்கு பரிசு கிடைச்சிருக்காம் எல்லாரையும் வரட்டாம். எல்லாரும் போனோம் சின்ன வகுப்புக்காரர் முன்னுக்கு. மற்ற எல்லாரும் பின்னுக்கு. கூப்பிட்டார் மாஸ்ரர் 'எழும்பு' என்ர பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார் 'எழும்பு' எண்டு அப்பவும் அந்த நேரமும் பக்கத்தில இருந்த மாணவிக்குக் கிள்ளிபோட்டன். கிள்ளிப்போட்டுத்தான் இருக்கிறன் என்னை நெருக்கிப்போட்டாள் எண்டு.

இவர் எழும்பு எண்டோன்ன எனக்கு விறைச்சுப் போச்சு. இவர் நுள்ளினதைக் கண்டுட்டேரெண்டு. அவர் அலக்காக் கோலி மேடையில ஏத்திப் போட்டுச் சொன்னேர் 'இவள் தான் அவள்' எனக்கு விடிஞ்சதும் தெரியாது, பொழுதுபட்டதும் தெரியாது, ஒன்பது வயது எங்களுக்கு என்ன விளங்கும் இவள் தான் அவள் என்று. அந்த ஆசிரியரைக் கூப்பிட்டார் ஆங்கிலம் படிப்பிச்ச மனுசி ஒரு பறங்கி மனுசி. இந்த வெள்ளைக்காரரெல்லாம் வெளியேறின போது போகாமல் அங்கு நிண்ட ஒரு பறங்கி மனுசிதான் எங்களுக்குப் படிப்பிச்சவா. அப்ப அவாவ கூப்பிட்டிட்டு இந்தப் பிள்ளை இந்த பாடத்திலும் கெட்டிக்காரி அந்தப் பாடத்திலையும் நல்ல புள்ளி எடுத்திருக்கிறாள் இந்த பாடத்திலையும் புள்ளி எடுத்திருக்கிறாள் 'ஏன் ஒருத்தரும் இனங்காணாமல் வைச்சிருந்தனீங்கள்' எண்டு அந்த மேடையில் பேசும் போது அவர் கேட்கிறார். அப்ப இரண்டாம் ஆண்டு படிப்பிச்ச ஒரு ஆசிரியர் சொன்னா "அவள் அப்பவே கெட்டிக்காறிதான்?"ஒரு நாளும் அந்த ஆசிரியர் என்னைப் பார்த்துக் கெட்டிக்காறி என்று சொல்லேல்ல அவாட்ட அடியெண்டா நாளாந்தம் வாங்கியிருக்கிறன்.

அப்படிப்பட்ட அடி வாங்கியிருக்கிறன் அந்த வாத்திமார் எல்லாருட்டையும். ஒருத்தரும் கூட என்னை நெத்திக்கு நேர நீ கெட்டிக்காறி என்று சொன்னதே கிடையாது. அப்படி நேர சொல்லியிருந்தால் நான் இன்னும் படிச்சிருப்பன். அப்போ உள்ள கொள்ளை என்னெண்டு சொன்னால் நேரடியா பாராட்டின பிள்ளை விழுந்துபோகும். என்னுடைய தந்தையைப் பற்றி நான் சொல்லவேண்டும் எங்கட அப்புட்ட போய் நீங்க சொல்லுங்க 'அப்பு நான் இண்டைக்கு சங்கீதத்தில் முதல் பரிசு வாங்கியிருக்கிறன்' 'ஆ' எண்டிற்று போயிடுவார். திரும்பிப் பார்க்க மாட்டார். அப்ப நான் கணக்கில நூற்றுக்கு நூறு

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: கஜானி

எல்லாம் எடுத்திருக்கிறன் 'ஆ'எண்டிற்று போயிடுவார். சில நேரம் கேக்காமலேயே போயிடும் அந்த ஆள். ஒரு நாள் என்னை பாராட்டுறத்துக்கு வரேல்ல என்னத்துக்கென்று தெரியேல்ல. எங்கட வளவுக்க நிண்ட மாடு அறுத்துக்கொண்டு பாய்ஞ்சிட்டுது.

அறுத்துக்கொண்டு பாய்ஞ்சா. எல்லாரும் தானே திரிஞ்சு பாத்திச்சினம். ஒருத்தருக்கும் அம்பிடேல்ல அது. கடைசியா நான் தான் மடக்கி பள்ளிக்கூடத்தால வந்து உடுப்பு களட்டேல்ல அப்ப இவர் சொல்றார் 'எத்தும் எத்தும்' எண்டு .

\+ + + +

நான் மட்டுமல்ல விவசாயக் குடும்பத்தில பத்து வயசில பிள்ளை மாடு சாய்க்கும். இப்பவும் நீங்கள் பார்க்கலாம் மலையக பிள்ளைகள் சமைக்குது. ஒன்பது வயது பிள்ளை சமைக்குது. என்ர மகளும் சமைத்தவள். தகப்பனுக்கு பின்னால தடி கொண்டு போவினம்.

அப்ப நான் மட்டும் எண்டில்லை பொதுவா பின்தங்கிய கிராமங்களுக்குப் போய் பார்த்தீர்கள் என்றா தெரியும். 'பாலன் பஞ்சம் பத்து வருசம்' பத்து வயசு வந்தா பிள்ளை தகப்பனுக்குப் பின்னால தடி கொண்டு போகும் மாடு சாய்க்க. அதால்தான் அந்த முதுமொழியே வந்தது. அப்ப எங்கட வீட்ட ஆம்பிளப்பிள்ளையே இல்லை. நான் தான் அந்த மூத்த மகள். மூத்த மகள் என்ற செல்வாக்கிலே நிழலில் வளர்ந்தனான். இரண்டாவது நான் தான். அடுத்தது நான் வந்து காடேறிதான்.

அப்ப அந்த நிலைமையில திரிஞ்சபடியா நான் அந்த வேலைகளுக்கெல்லாம் போகத்தொடங்கிட்டன். பாடசாலை கல்வி என்றது அங்க முக்கியமாக கருதப்படேல்ல.

அப்ப அம்மாவுக்கு உதவி செய்கிறது முத்துக்குப் பிறந்த பிள்ளைதான். என்னுடைய மகளே ஒன்பது வயசில நான் ஆஸ்பத்திரிக்குள்ள இருக்கேக்க எனக்கு சமைச்சு சாப்பாடு எடுத்துக்கொண்டு வருவாள்.

ஆனால் இப்ப என்னுடைய பேத்தி 20 வயசு அவள் செய்யமாட்டாள். கால மாற்றம் என்றது அங்குதான் வருது.

அப்ப அந்தமாதிரியான காலப்பகுதியிலதான் இந்த மாட அவுட்டுக்கொண்டு காலேல தவுடு வைக்கிறது எல்லாம் என்ர வேலை. எனக்கு விடிய எழும்பினா வீட்டோட உள்ள வேலை, விடிய எழும்பின உடன பல்லுல கரியப் போட்டுக்கொண்டு ஒரு தண்ணி குடம் இருக்கு அதைத்தூக்கிக்கொண்டு கிணத்தடிக்குப் போவன். அள்ளிக்கொண்டு வாறது அங்கு தண்ணில தவிடு குளைச்சு மாட்டுக்கு வைக்கிறதோட அங்க தேத்தண்ணி ரெடியா இருக்கும்.

வீட்டில எல்லாரும் தரையிலதான் படுப்பினம். எனக்கு ஒரு சாக்குக் கட்டிலிருக்கு. ஏனெண்டா ஆம்பிள வேலை செய்யிற ஆள். உழைக்கிற பிள்ளை என்றதுக்காக அந்த ஒரு செல்வாக்கு இருந்தது. இந்த மாடு அறுத்துக்கொண்டு திரிய எல்லோரும் ஓடி கடைசியா ஏலாம களைச்சுப்போய் இருக்கினம். நாங்கள் அப்ப இரண்டு நேர பள்ளிக்கூடம். காலமைச் சாப்பாடு 25 இடியப்பம் வாங்கிக் கட்டிக்கொண்டு போறது. அத சாப்பிட்டிட்டு மூன்றரைக்குத்தான் பள்ளியால வருவம்.

பள்ளியால எண்டா - இப்போ இதில இருக்கிற ரியூசன் கிளாசுக்குச் சைக்கிள் கேட்குது எங்கட பிள்ளைகள். இரண்டரை மைல் நடந்து போய் நடந்து வரோணும். அதுவும் வீட்டில வேலை செய்துபோட்டு ஓட்டமும் நடையுமாத்தான் போவம்.

இப்போ உள்ள பிள்ளைகள் வீட்டில வெள்ளன குளிச்சுப்போட்டு பள்ளிக்கூடத்திற்கு போகுதுகள். எப்பவும் நாங்க - இன்றைக்குக்கூட காலையில பேத்திய அனுப்பேக்குள்ள நான் நினைச்சன். பாடசாலை துவங்குவதற்கு முன் பத்து நிமிசம் ஆவது பள்ளிக்கூடத்தில முன்னுக்கு நிக்க வேணும் என்ற ஆசை எனக்கு வெகு நாட்களா இருந்தது.

பள்ளிக்கூடம் துவங்குறதுக்கு பத்து நிமிசத்துக்கு முதலாவது நான் பள்ளிக்கூடத்திற்கு போகவேண்டும்.

https://tamileelamarchive.com/

ஆனால் எப்பவும் நாங்கள் போறது பள்ளிக்கூடம் துவங்கி இரண்டு நிமிசம் கழிஞ்ச பிறகு. ஓடோடெண்டு ஓடினாலும் பிரார்த்தனை துவங்கிவிடும். பள்ளிக்கூடத் தட்டிக்குக் கீழால புத்தகத்தை உள்ளுக்கத் தள்ளிபோட்டு பிராத்தனையில நிண்டுட்டு வாற மாதிரி போவம்.

அப்படித்தான் வகுப்புக்குப் போயிருக்கிறன். நான் பள்ளிக்கூடம் மூன்றரையால வர இந்த மாடு வாலைக்கிழப்பிக்கொண்டு ஒடுது. நாலுதறையும் ஓடித்திரியிது அந்த இரண்டு ஏக்கர் காணியையும் ஒரு ஏக்கரையும் தாண்டுது.

அப்ப அப்பு சொல்றோ். 'போகாத பிள்ளை போகாத மாடு தாறுமாறா பாயுது' என்று.

அப்ப நான் சொன்னன் 'நான் பிடிச்சுத் தாறன்' எண்டு. பின்ன அவர் ஒன்றும் கதைக்கேல்ல. நான் மாட்டையே பார்க்கேல்ல. வாளி எடுத்துக்கொண்டு கிணத்தடிக்குப்போனன். அவர் ஓடிக் களைச்சு நிண்டவர் தானே வாளிய கண்டவுடன் தண்ணிக்கு வந்தார்.

வழக்கமா நான்தானே தண்ணி வைக்கிறனான். தண்ணிய அள்ளி வைச்சன் குடிச்சுது. அப்படியே எட்டி நாணயக் கயித்தில பிடிச்சன். கட்டிப்போட்டன்.

அப்பு சொன்னோ் 'நான் அவளத்தாண்டி என்ர பிள்ளையெண்டு இருக்கிறன் அவள் தான் நாளைக்கு எண்ர பெயர் சொல்லப்போறவள்' எண்டார்

அம்மாவுக்கு இண்டைக்கு அவற்றப் பெயர்தான் சொல்றன்.

அப்ப அம்மா என்ன சொன்னா எண்டு தெரியுமா 'பொம்பிளப்பிள்ளை சொல்லாதப்பா அது ஒருத்தனுக்குப் பின்னால போறது.' என்று சொன்னா.

இப்படித்தான் எங்கட கால மாற்றமும் சூழலும். பொம்பிளப்பிளையள் கல்யாணம் செய்தா புருசன்ர பெயரத்தான் சொல்லுவினம். இன்றைக்கு நான் அப்புட பெயரைத்தான் சொல்லுவன். இண்டைக்கு இந்த வளர்ச்சிக்கு அடிநாதமா நின்றவர் அவர் தான்.

அந்தக் காலப்பகுதிலேயே ஒரு விடிவுப்போக்கத் தந்து வளர்த்தவர் என்ற முறையில நான் வந்து அதைச் சொல்லுவன். அண்டைக்குத்தான் அவர் என்னை பாராட்டினது. வேற விஷயங்களுக்குப் பாராட்டமாட்டேர்.

ஒருக்கா வயல் கிணத்துக்குள்ள ஒரு பிள்ளை விழுந்திற்று. எனக்கு நீச்சல் தெரியும். ஆனால் விழுந்த பிள்ளைய எப்படி காப்பாத்துவது என்று தெரியாது. சில வேளை எங்களையும் சேர்த்து இழுத்துப்போடுவினம் தானே.

அப்ப நான் வயல்கிணத்துக்குள்ள குதிக்க எண்டு முயற்சிபண்ணிப்போட்டும் பிறகு நான் ஏனோ ஒரு நினைவில என்ன செய்தனான் எண்டு சொன்னா ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்த தும்பியை இறக்கிவிட்டன். இறக்கின உடனே அந்தப் பிள்ளை அந்தத் தும்பியப் பிடிச்சிட்டு. தும்பிய பிடிச்ச பிறகுதான் நான் சத்தம் வைச்சு மற்ற ஆக்களைக் கூப்பிட்டன். அந்தப் பிள்ளையைக் காப்பாற்றிவிட்டம்.

காப்பாற்றினதுக்குமே அந்த இரண்டாவது பாராட்டை எனக்கு அப்பு தாறோ். பாராட்டை தார அண்டைக்கும் சொல்றோ் 'அவள் மூளையைப் பாவிச்ச படியால் குதிக்காமல் விட்டால், குதிச்சிருந்தா இரண்டு பேரும் செத்திருப்பினம்'. அதுக்குப் பிறகுதான் எங்களுக்குத் தெரியும் தண்ணிக்குள்ள விழுந்தவள குதிச்சுக் காப்பாற்றக்கூடாது எண்டு.

குதிச்சிருப்பன் அந்த நேரம் உயிருக்குப் பயம் எனக்கு. நான் விழுந்து செத்தாலும் எண்டுதான் தும்பிய விட்டனான். அவர் அதை நினைக்கேல்ல. ஏனெண்டா சமயோசிதமான ஒரு சிந்தனையை போட்டன் என்றதைத்தான் அவர் நினைத்தார்.

இப்படி என்ர வாழ்க்கையில நினைச்சு எதிர்பார்த்திருந்து அந்தச் சம்பவங்கள் எல்லாம் கரைந்தே போயிட்டுது.

இனி இல்லை என்று நினைச்சுக்கொண்டிருந்தனான். 11 வயது 12 வயது கல்விய முடிச்சிட்டன். 12 வயது ஆரம்பத்திலேயே ஒன்பதாவது வகுப்பு. ஏனென்றால் அப்ப கதைக்கத் தெரிஞ்சா பள்ளிக்கூடத்திற்கு போகாமல் விடலாம்.

இப்ப மாதிரி அப்ப வயது கட்டுப்பாடில்லை. நாலு வயசில கதைக்கத் தொடங்கிட்டன். நாலு வயசில அரிவரி. ஐஞ்சு வயசில முதலாம் ஆண்டு. இப்படியே முதலாம் வகுப்பு இரண்டாம் வகுப்பு என்று ஏறிவந்தேன். ஒன்பதாம் ஆண்டு நான் படிக்கேக்க எனக்கு 12 வயது. அடுத்த வருசம் நான் ஓ- எல் எடுக்கவேணும் எண்டேக்க எங்கட ஆசிரியர் அதைத்தான் சொன்னவா: 'நீ பத்தாம் ஆண்டு படித்தாக் கூட உன்னை விடேலாது. வயது கட்டுப்பாடு வந்திட்டு. 14 வயசு வராமல் பரீட்சை எழுதமுடியாது என்று அவா சொல்லிட்டா. நீ படிச்சுக்கொண்டு வரலாம். அது பிரச்சனை இல்லை. இந்த வயசில என்னெண்டு இந்த வகுப்புக்கு வந்தாய்'. எண்ட கேள்வியும் அவா போடுவா.

அப்ப எங்களுக்கு ஒண்டும் விளக்கம் இல்லாத காலம் நாங்கள் கதைக்கமாட்டம். ஆனால் ஒன்பதாம் வகுப்போடையே என்னுடைய கல்வி முடிஞ்சுது. பிறகு நான் வெள்ளைக் கவுண் ஒண்டு போட்டுக்கொண்டு ஒரு சிவப்பு ரை ஒண்டு கட்டிக்கொண்டு காலுக்கு வெள்ளைச் சப்பாத்துப் போட்டுக்கொண்டு பெரிய நடப்பா அந்த ரோட்டால நடந்து போகோணும் எண்டு சரியான ஆசை. அந்த ஆசைக்குக் கூட ஒரு கவுண் போட்டதில்லை.

ஏனெண்டா அப்ப சீருடை வழக்கில இருக்கேல்ல. எங்கட அம்மா பொம்பிளப்பிளைக்கு கண்டக்கால் தெரியக்கூடாது எண்டு சொல்லி முழுப் பாவடை தைச்சு தான் பாடசாலைக்கு அனுப்புவா.

அப்ப என்னுடைய அந்த வகுப்பு எட்டாம் ஆண்டு முடிஞ்சு ஒன்பதாம் ஆண்டு வந்து பத்தாம் ஆண்டுக்குப் போகும் போது வேற பாடசாலைக்குப் போகோணும்.

அந்தப் பாடசாலையில் சீருடை நடைமுறையில் இருந்தது. அப்ப நான் அந்தப் பாடசாலைக்கும் போகும் போது வெள்ளைக் கவுண் போட்டுக்கொண்டு போவேன் எண்டு ஆசை ஆசையாக் காத்துக்கொண்டிருந்தனான்.

ஆனால் அது ஒரு நாளும் நடக்கேல்ல. அதுவும் கனவோடையே போயிற்று. இண்டைக்குக்கூட எனக்கு அந்த

https://tamileelamarchive.com/

தாக்கம் இருக்குது. நான் ஒரு வெள்ளைக் கவுண் போட்டுக்கொண்டு ஒரு பள்ளிக்கூடம் போகவில்லையே என்ற தாக்கம் எனக்கு இருக்கு.

அதுக்குப்பிறகு எதிர்பாராத விதமாக 14 வயசிலேயே எனக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. நிச்சயப்படுத்தப்பட்டது என்றும் சொல்லேலாது. எங்கட அப்பு நல்லா குடி பழகிட்டார். அப்புவினுடைய நண்பர்களும் அப்புவும் சேர்ந்து குடிச்சார்கள். எங்கட அக்காவைத் திருமணம் செய்தவரும் இருந்து குடிச்சார்.

அவருடைய நண்பர்களும் குடிச்சார்கள். எல்லாரும் கூடிக் குடிச்சு சாராயப் போத்தலோட ஒரு தீர்மானம் எடுத்தார்கள். தீர்மானம் ஆகியது அந்த கல்யாண வீடு. ஒரு நத்தார் தினத்துக்கு முதல் தீர்மானம் செய்திச்சினம். இந்தப் பொம்பிளைய அவருக்குக் கட்டிக்கொடுக்கிறது என்று.

அவர் யார்? எவர்? என்ற விசாரனை ஒன்றும் இல்லை. அந்த முடிவை எடுத்ததுக்குப் பிறகு பொங்கலுக்கு மறுநாள் திருமணம் முடிஞ்சுது.

4ம் திகதி பேச்சு. பொம்பிளை பார்த்தது 16ம் திகதி. 17 திகதி கல்யாண வீடு. அந்த திருமணம் நடந்ததுக்குப் பிறகு ஏறக் குறைய 14 வருடங்கள் அஞ்ஞாத வாசம் எண்டு சொல்லோணும். அந்தப் 14 வருடங்களின் இடைக்குள்ள என்னுடைய குடும்ப நிலையினுடைய மிக மோசமான கட்டங்களையெல்லாம் நான் சந்திச்சன்.

என்னுடைய பகையாளிக்குக்கூட அந்தத் துயரங்கள் வரக்கூடாது. எனக்கொரு பகையாளி எண்டு இப்ப ஒருத்தரும் இல்லை சுட்டிக்காட்டக்கூடியதாக இல்லையென்று சொன்னாலும் கூட அந்த மொழிக்காக நான் சொல்றன். என்னுடைய எதிரிக்குக்கூட அந்த நிலை வரக்கூடாது என்று நான் நினைக்கிறமாதிரியான மோசமான துயரங்களை, மோசமான ஒடுக்கு முறைகளை, மோசமான சித்திரவதைகளையெல்லாம் நான் அதுக்குள்ளே அனுபவிச்சு ஆறு குழந்தைகளையும் பெற்றன்.

ஆறு குழந்தைகளும் பிறந்து இந்த இடைக்காலப்பகுதியில் என்னுடைய மூன்றாவது குழந்தை பிறந்த காலப் பகுதியில ஒரு பண்டிதரைச் சந்தித்தனான். அவர் இறந்திட்டார். அந்தப் பண்டிதருக்கு என்னுடைய தமிழில் அவருக்கு ஆவல். தமிழ் செய்யுள்களை நான் விளங்கப்படுத்திற விதம். அப்ப அவர் முதல்ல சொல்லுவார் 'அவள் தமிழை உச்சரிக்கிற விதம் அவள் பேசுற விதம் அவளிட்ட ஒரு நளினம் இருக்கெண்டு'.

அந்த நேரம் என்னுடைய பாடசாலை ஆசிரியர் என்னுடைய கட்டுரைகளை வாங்கி பாராட்டினார். ஒரு கட்டுரை எழுதினேன் எண்டா அந்தக் கட்டுரையை அவர் எல்லா ஆசிரியர்களுக்கும் அனுப்புவார். 'என்னுடைய வகுப்பு மாணவி ஒருகட்டுரை எழுதியிருக்கிறா பாருங்கோ' எண்டு சொல்லி.

அந்தக் கட்டுரை எழுதுற ஆற்றல் எல்லாம் எனக்கு இந்தக் கல்கி, குமுதம் இந்தப் புத்தகங்களால் வந்தது. அப்ப எட்டாம் ஆண்டில நான் எழுதுற கட்டுரை எல்லாம் எல்லா வகுப்புகளுக்கும் போய்வரும். கட்டுரைப் போட்டியில பரிசு எடுத்திருக்கிறன். பேச்சுப் போட்டியில பரிசு எடுத்திருக்கிறன். ஓட்டப் போட்டிகளில பரிசு எடுத்திருக்கிறன். அந்த நேரம் நாடகப் போட்டிகளெல்லாம் நடந்துகொண்டிருக்கேக்க ஒரு நாடகத்தில நடிகர்களைச் சேர்த்து இருந்திச்சினம். அதில

இயல்பாக தலைமை ஆசிரியருடைய மகள் இன்னொரு ஆசிரியருடைய மகன் அப்படி அந்தக் கொஞ்சம் கண்ணுக்கு பூசணை உள்ள ஆக்களை பிடிச்சு நாடகத்தில சேர்த்திருந்தார்கள்.

நாடகத்தைப் பழக்கும் போது நாங்கள் வேடிக்கை பார்ப்போம். சுத்தி நிண்டு அப்ப அந்த ஆசிரியர் சொல்லுவா 'கனபேர் நிக்க நடிச்சா கூச்சம் இருக்காது மேடையில செய்யேக்க' எண்டு கூப்பிட்டு எல்லாரையும் விட்டிற்றுதான் நடிக்கப்பழக்கிறது.

அப்படி நடிச்சுக்கொண்டிருக்கேக்குள்ள ஒரு பாத்திரம் ஒரு அம்மா பாத்திரம் அந்தப் பாத்திரம் நடித்த விதம் ஆசிரியருக்கு திருப்தித் தரேல்ல. திருப்பி திருப்பி ஆசிரியர் சொல்லிக்கொண்டிருக்க சரிவரேல்ல. நான் அதைப் பார்த்துக்கொண்டிருந்தனான் உள்ளுக்குள்ள போய் இப்படிச் செய்யலாமே எண்டு சொல்லி இந்த விருந்தினர்கள் வரேக்க எப்படி வரவேக்கிறது எண்டுறதை 'ஆ வாங்கோ இருங்கோ எப்படிச் சுகம்' என்ற ஒன்று மட்டும் தான் கேட்டன்.

அந்த ஆசிரியருக்குப் அது பிடிச்சுப் போட்டு. சரியெண்டு அந்தப் பாத்திரத்தை மாத்தி 'நீயே செய்' என்று என்னைக் கூப்பிட்டு விட்டார். என்னை கூப்பிட்டு விட்டா அதே சமயம் அந்த பாடசாலையில் நடக்கிற நிகழ்ச்சி அத்தனைக்கும் நான் பின்னணி பாடுவன்.

ஆனால் முன்னணிக்கு வரேலாது. ஏனென்றால் கறுப்பு. அப்பவே கறுப்பெண்டு ஒதுக்கிச்சினமோ என்னமோ தெரியாது நான் கருதிறது அப்படித்தான் என்னுக்குள்ள.

எல்லாப் பிள்ளைகளும் வடிவான பிள்ளைகளா இருக்கு. நான் கறுப்பு ஆனபடியா நான் பின்னுக்கு இருந்து பாடுவன். இந்தச் சம்பவம் வந்து எங்கட அப்புவுக்குக் கொஞ்சம் பிடிக்காது. அப்பு சொல்லுவார் 'அதென்ன பின்னணி பாடுறது முன்னுக்கு விடாம' எண்டு.

அப்ப நான் நாடகத்தில சேர்ந்திருக்கிறன் எண்டு அவருக்கு நல்ல சந்தோசம் ஆனால் அந்த நாடகத்துக்கான உடையை அது இதெல்லாம் வேண்டிக்கொடுக்கமாட்டினம் வசதி இல்லை.

அந்த ஆசிரியர் தன்னுடைய உடைகளைத்தான் தந்து என்னை நடிக்கும் படி சொல்லி உற்சாகப் படுத்தினார். அந்த நாடகமும் பரிசு பெற்ற நாடகம் தான். அதே நேரம் இன்னுமொரு நாடகத்திலையும் என்னைச் சேர்த்திருந்தினம். சேர்த்துப்போட்டு பிறகு என்னை எடுத்துப்போட்டினம். வேறையொரு ஆளைப் போட்டு செய்திச்சினம்.

அப்ப இந்த நாடகத்தை நடத்திக்கொண்டிருந்த ஆசிரியை வந்து அந்த மாணவியைக் கூப்பிட்டக் கேட்கிறா 'முதல் தமயந்தி போட்டிருந்ததல்லோ அந்த நாடகத்தில நாங்கள் நாடகத்தை வெள்ளண்ண பழக்கிப்போட்டம் தானே ஏன் அவாவ விட்டுப்போட்டு வேற ஆள மாத்தினது' என்று சொல்லி

அப்ப அதில இருந்த பிள்ளை சொல்லிச்சிது 'அவா

https://tamileelamarchive.com/



> எங்களுடைய கிராமத்திலே மிதி வண்டிகள் இல்லாத காலப்பகுதியில நான் மிதி வண்டி ஓடியதே ஒரு சாதனையாகக் கருதப்பட்டது. இது கூட எனது சமுதாயத்தை எதிர்த்துச் செய்த காரியம்தான்.

வடிவில்லையாம்'.

அந்த ஆசிரியர் அங்க கதைச்சத அந்தப் பிள்ளை அதுக்குச் சொல்லக் கூடாது என்றது தெரியேல்ல அதிலேயே வைச்சு சொல்லுது. 'அவா வடிவில்லையாம் அதான் வேற ஆள மாத்தினதாம்'.

அப்ப அந்த ஆசிரியர் வந்து அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டு 'நீ இப்படிச் சொல்லக்கூடாது சொல்லியிருந்தாலும் நீ இதில வைச்சுச் சொல்லக்கூடாது அவாவுக்கு' ஆனால் எனக்கு தைக்கேல்ல. ஏனென்றால் இதெல்லாம் சின்னல்ல இருந்து கேட்டுக்கொண்டு வாறதால தைக்கேல்ல.

ஆனால் அந்த ஆசிரியர் கனக்க மனம் வருத்தினார். இந்தக் கதையை எனக்கு முன்னால வந்து சொல்லிப்போட்டாளே எண்டு. அப்ப இந்த உறைப்புகளெல்லாம் எனக்கு வரக்கூடிய காலம் எப்ப வந்தது என்று சொன்னால் திருமணத்திற்குப் பிறகுதான்.

தமிழ் கட்டுரையை கொண்டு வந்து அவரவர் எழுதிய கட்டுரையை வாசியிங்கோ எண்டேக்குள்ள நான் கட்டுரையை வாசிக்க இந்த வாசிப்யைக் கேட்டுப் போட்டு அந்த தலைமை ஆசிரியர் பெரிய வாத்தியார் அவர் சொன்னார்' 'நீ ஒரு காலத்தில வானொலி அறிவிப்பாளரா வரவேண்டிய தகுதி இருக்கு. உனக்கு அவ்வளவு செழுமையான வாசிப்பெண்டு.'

செய்யுள் படிச்சாலும் அப்படித்தான். செய்யுளும் அந்தமாதிரித்தான் வாசிப்பன். அந்த மாதிரித்தான் கருத்துச் சொல்லுவன். படிக்காட்டியும் பாஸ் பண்ணிடுவன். நல்ல புள்ளி எடுப்பன். அவர் சொன்னார் 'நீ ஒரு வானொலி அறிவிப்பாளரா வரவேண்டிய ஒரு தகுதி இருக்கு உனக்கு' எண்டு சொல்லி.

அப்ப வானொலி அங்க அப்ப இலங்கை வானொலிதானே. இதையெல்லாம் யார் நினைச்சது எங்களுக்கு ஒரு வானொலி வரப்போகுது நாங்களும் அதுக்க நிப்பம் எண்டோ அல்லது நான் இருந்த நிலைக்க நான் இப்படி வருவேன் எண்டோ எதிர்ப்பார்க்கேல்லத்தானே.

அப்ப நான் சொல்லும் அந்தக் கனவு எனக்குள்ள. நல்லா பாடிக்கொண்டிருந்தன். சும்மா சினிமாப் பாடல்கள் தான். பாடுறதைக் கேட்டிற்று ஒரு நுளம்பெண்ணை அடிக்க வந்த ஒரு உத்தியோகத்தர் நான் பிள்ளை தாலாட்டுறதுக்குப் பாடிக்கொண்டிருந்த பாட்டைக் கேட்டிற்றுச் சொன்னார் 'நீர் நல்லா பாடுறீர் ஒருக்காப் பாடும் பாப்பம் நான் பாட்டுக் கேட்க' எண்டு சொல்லி. அப்ப நான் 'சமரசம் உலாவும் இடமே' எண்ட பாட்டு அதைத்தான் பாடினன்.

இப்பக் கொஞ்சம் குரல் உரலாப் போய்ச்சுது. அந்தப் பாட்டைக் கேட்டிற்று சொன்னார் 'சூ! என்ன மாதிரி பாடுது இந்தப் பிள்ளை நீ சங்கீதம் படிக்கிறீரா?' 'இல்லை' எங்கட வவுனியா மாவட்டத்துக்கே சங்கீதப் பாடம் இல்லை. ஆக மகாவித்தியாலத்தில ஒரு மாஸ்ரர் இருப்பார் இந்தத் தமிழ் தினப் போட்டி மாதிரி எதும் போட்டி வந்தால் அந்த ஒரு ஆசிரியர் எல்லாப் பாடசாலைக்கும் நிகழ்ச்சி நடத்துவார் போய். ச ரி க ம ப த நி ஸ ஸ நி த ப ம க ரி ஸ என்ற அந்த சுரங்களைக் கூட நாங்கள் எங்கையோ படிச்சப் பிள்ளைகளிட்டக் கேட்டுப் பார்த்ததுதானே ஒளிய அதில சுட்டுப் போட்டாலும் எங்களுக்கு வராது.

சினிமாப் பாட்டுக் கேட்டிங்களண்டா 'வராத மழைதனிலே வரு ஜோரான கௌதாரி இரண்டு' இந்தப் பாட்டு ஒரு பிரபலமான விருப்பமான பாட்டு 'பெண்களை நம்பாதே கண்களே பெண்களை நம்பாதே' தோக்கு தூக்கில வந்த ஒரு பழைய பாட்டு இந்தப் பாட்டப் படிக்கச் சொல்லிக் கேக்கிறாங்கள் ஆம்பிளையள். எனக்கு விவரம் தெரியாது நான் நல்லாப் பாடுவன் 'ஒய்யாரக் கொண்டையிலே தாளம் பூவா அதனுள்ளே இருக்கிறது ஈரும் பேனாம். இளமையா உணர்ந்தவனே புத்திமானாம் மேனி மினுக்கும் பெண்டுகள பார்த்திடானா பெண்களை நம்பாதே கண்களே' எண்டு அப்படியே போகும் அந்த வரி நாங்களே பாடுவோம்.

இந்தப் பாட்டக் கேக்கறதுக்காகக் கொஞ்சம் ரசிகர் கூட்டம். கிராம அடிப்படையிலேயே, மற்றும் கடிதம் எழுதுறது. எல்லா வீட்டுக்கும் நாங்க தான் கடிதம் கொடுக்கோணும். இப்ப சொன்னாலே நெஞ்சு விறைக்குது. ஆசிரியர் காப்பாற்றினது ஐந்தாம் ஆண்டு படிக்கேக்குள்ள கடிதம் எழுதினா '.....வந்திட்டுப் போகட்டாம்' அங்க போனா சொல்லுவார் "ஒரு எம்பலப்பும், கடிதாசியும் வைச்சுக்கொண்டு இன்றும் ...." மகன் அறிவது' என்ற ஒரு கடிதம் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதி அதைக் கொடுக்கிறது.

எங்களுடைய அப்பா சொன்னார் ஐஞ்சாம் வகுப்பில, 'பிள்ளை நீ இப்ப காகிதம் எல்லாம் எழுதுவாய் தானே,

https://tamileelamarchive.com/

பிள்ளைக்கு எழுதப் படிக்க எல்லாம் தெரியும் தானே, சீனா அண்ணேக்கெல்லாம் எழுதிக்கொடுத்தனியாம், இனிக் காணும் அம்மா பிள்ளை நில்லுங்கோ குரங்குக் காவலுக்கு ஆளில்லை. குரங்கு காவலுக்குப் போகோணும். ஆனபடியா படிச்சது காணும். பிள்ளைக்கு இனி எழுதப் படிக்கத் தெரியும் தானே. இனி பிள்ளை கதைப் புத்தகம் எல்லாம் படிக்கும் வயதுதானே.

எண்டோன்ன நான் ஓம் அப்பு. அப்பு சொன்னாச் சரி. சாகும் வரைக்கும் அப்பு போன வருசம் தான் செத்தவர். சாகும் வரைக்கும் அப்பு சொன்னா அந்த கோட்டத் தாண்டமாட்டன் நான். சரி எண்டுட்டன். நிண்டாச்சு பள்ளிக்கூடாத்தாலையும் நிண்டாச்சு. நிண்ட பிறகு மாஸ்ரர் ஓடிவந்துட்டேர். வீட்ட வந்து கேட்டார் 'ஏன் இவள் பள்ளிக்கு வரேல்ல' எண்டு

அப்பு சொன்னேர் 'குரங்குக் காவலுக்கு ஆளில்லை மாஸ்ரர், பள்ளிக்கூடத்துக்கு விட்டு நாங்க என்ன செய்றது மாஸ்ரர்,நாங்கள் ஏழைக் குடும்பம் அதைச் செய்து முன்னேறினால் தானே - நாங்களும் சாப்பாட்டுக்கு விளைச்ச பயிர குரங்குக்கு விட்டிற்று என்ன செய்றது. பிள்ளைய குரங்குக்குக் காவல் விட்டிருக்கு'

'பேமனிசா குரங்குக் காவல் முடிய அவள அனுப்பு. பழுதாக்கிப் போடாத, அவள் மாவட்டப் பரிசு வாங்கினவள். மாகாணப் பரிசு வாங்கினவள். நீ இப்படி விசர் கதை பறையாத அனுப்பிப்போடு' என்று.

அது போலதான் இந்த நுளம்பெண்ணை அடிக்க வந்த அந்த அதிகாரி தன்ர வேலையை விட்டிற்று வந்து அப்புவோட கதைக்கிறார்

'இந்தப் பிள்ளைய எனக்குத் தாருங்கோ நான் கொண்டே சங்கீதம் பழக்கிறன்' அவர் அருணா செல்லத்துரையினுடைய மாமனார்... அவர் வந்து கேட்கிறார்.

அப்பு சொல்லிப்போட்டேர் 'அவள விட்டிற்று நான் ஐஞ்சு நிமிசம் இருக்கமாட்டன்' பாடசாலையில சுற்றுலா போங்கள் சனம் பிள்ளைகள் எல்லாம் போங்கள் ஒரு இரண்டு ரூபா காசு தந்து என்னையும் அனுப்பு அப்பு எண்டா அது விடாது

'உன்னை விட்டிற்று நான் என்னெண்டு இருக்கிறது' எண்டு. ஒரு காலத்திலும் நான் ஒரு சுற்றுலாவுக்கும் போனதில்லை. எங்கட பாடசாலையில இருந்து அந்த பாடசாலை வளவைத்தாண்டிக் கொஞ்சம் தள்ளி அங்கால விளையாட்டுப் போட்டி எண்டா கூட அனுப்பமாட்டார்.

"யாரையும் நம்பி பிள்ளைய விடலாம், விடேலாது. அது நான் தான் வரவேணும். வாத்தியார நான் என்னெண்டு நம்பிறது." எண்டு எனக்குச் சொல்லி சமாளிச்சுப்போடுவார். இப்படியே என்ர வாழ்வு இருளுக்க இருந்தது.

(தொடரும்)



https://tamileelamarchive.com/

# சுடரான தாய்



அன்னை உதரத்தின் அக்கினி!
எண்ணை விளக்காகி
எங்களுள் எரிகின்றது!

அது தீயாகி பின் சுடராகி
முது உருவின் உணர்வாகி
மட்டுநகரில் நெஞ்சுமுட்டும்
சுட்டதுயராகித் துலங்கியது!

தம்பி திலீபன்
தாங்கிய வேள்வியில்
தம்முடல் காய்ந்து
வெந்துடல் சோர்ந்து
உயிர் ஓய்ந்தது கண்டு நாம்
கண்ணீர் விட்டோம்!
கவிதைகள் பாடினோம்!
கும்பிட்டோம்! பின்பு,
வெம்பல் அடங்கி எம்
வேலைகளில் மூழ்கினோம்!
ஆனால், பாரும்!
அன்னைபூபதித்தாய்
தன்னையும் பசித்தணலிலே திணித்து
எண்ணிறைந்த காயங்கள் பட்ட
பொன் உதரத் தீயோடு,
மன்னன் திலீபனின் ஆத்மாவைப்
பின்தொடர்ந்து,
தாய்மையின் நித்தியச்சுடராய்
நிலமிசை நிமிர்ந்தாள்!

வாழ்வைச் செதுக்கும்
வலிமை கொண்டவள் தாய்!
வீழ்பழி நேர்ந்தக்கால்
சூழ் புயலாகி
பகை உழுதபாதையில்
நெருப்பாய்ப் பெருகி
தொகை எதிரி துகளாக
துர்க்கையாய் மாறுவாள்!

உள் நுளைந்த சினம்
உருப்பெருக்கம் எய்தியதால்
உதிரம் கருகவென
உணவுமறுத்து,
உட்திணிந்த விடுதலைப்பசி நெருப்பில்
உருகி ஆன்மா ஓடவென
முப்பதுநாள் முழுதும் துடித்தே அன்று
சுதந்திரத்தின்
சுடரானாள் பூபதித் தாய்!

திசைவெளி விருட்சங்கள்
தீப்பிடித்து எரிய
அன்னை ஓய்ந்தகணத்தில்
அவதரித்த போரில்,
வேய்ந்த ஒரு இலட்சம்
வெகுளிப்படையில்
தோய்ந்த குருதியாடி
தொகையானோர் வீழ,
பாய்ந்த புலியின் முன்
பாரதம் நிற்கமுடியாது,
வேரறுந்தே வெளிப்பட்டு,
பாராமுகச் சிங்களத்தின்
பாதகத்தைச் சந்தித்து,
வெந்தமனத்தோடு
விழுந்த தம் படைவிட்டு
அழுந்துவசை அவர் சுமந்தே
அழாக்குறையாக அகன்றார்!

கருவறையில்காவி
உருதந்து, உணர்வு ஈந்து
உதிரம்பெருக்கி எம்
சதிரம்நோகாது ஈன்று,
மதுரப்பால் தந்து
மருந்து தான் உண்டு
வருந்தி வகை வகையாய்
அருந்த, உண்ண
அனைத்தும் தந்து,
விருந்து ஈந்து வளர்க்கும்
தாயின் அன்ன உதரம்
சுடரானபோதும் அது
தீமைசூழின் தீயாக மாறுமிவ்
உவமையென பூபதி
இவ்வையத்தில்
வாழ்ந்து சென்றாள்!

நெடுந்துயர்காவி
நொந்தெரிந்து சுருண்டு கருகி
மாய்ந்து கிடக்கும் எம்
மண்ணைப் பார்த்து
மனம் பொறுக்காது
உதிரம் தீயாக உருப்பட
அதரங்கள் நெரும
அங்கே தாயகத்தில்
ஆயுதங்கள் தாங்கி
சமராடும்காட்சி கண்டு அன்று
சிங்களம் அடங்கியது! இன்றோ
நடுங்கிக் கிடக்கின்கிறது!
பொங்கிய துயரின் பெருக்கிடை
கங்குல்கழியவே எங்கள்
தாய்க் குலம்
கலங்கள் தூக்கவே
விளங்கும் ஒளியானாள்
கலங்கரைப் பூபதித்தாய்!

சுதந்திரத்தின் சுடரான
அன்னை இவள்
பதந்தனைத் தொடர்ந்த
புதிய பூபதிகள்
நிதம்எழுந்து நிலமிசை விரிய,
உதித்த தாரகைகள்
கதிர்த்தெழுந்த கதிரவனாய்
முதிர்ந்த விடுதலையின்
மூலச்சுடராய்
கொதித்தே குதித்துள்ளனர்!

சிதைக்கப்பட்ட தாயின்,
சோதரியின், சொந்தங்களின்
சதைத்துண்டங்களை
திரட்டியெடுத்த தீரத்தின் உருவாய்
பகைவிரட்டும் தீயாய்
உவகைத் தாயகத்தை
மிகை வீரத்தால் மீட்க
பூவிரியும் நினைவுகளோடு
புதுயுகம்காணப் புறப்பட்ட
எமதீழ மகளிர் மாபடைஎழுக

பசிநெருப்பு எனும் உதிரத்தீயால்
திசைகள் திறந்திட அன்று
நடுநிசி இருளில்...
அன்னை பூபதி ஏற்றிவைத்த
சுதந்திரச் சுடரின்
விதந்திடும் தோற்றம்
வீறுகொண்டு
இது வழியெனக்காட்டி
வெற்றியின் பாதையில்
நாட்டுப் பற்றாளர்களைக்
கூட்டி வளர்க்கின்றது!

ந.கிருஷ்ணசிங்கம்

https://tamileelamarchive.com/



## கண்மணிகள்

களங்கள் பல கண்டு
கலங்காது நின்று
விடுதலை வேள்வியில்
ஆகுதியானவரே
நீபெற்ற ஆயுதம்
வேங்கை என்னும் கையிலடா
கலங்காது நீ தூங்கு - எம் ஈழ
வரலாற்றுப் பணிதனை
சமுதாயம் ஏற்குதடா
பகைவன் கொட்டம்
பலமுறை அடக்கியே
வித்துடலானவரே
எம் இனவிடிவிற்காய்
வழிகாட்டிச் சென்றவரே
வீரத் திலகங்களே
உங்கள் இலட்சியம்
உள்ளவரை
எங்கள் பயணம் ஓயாது
வானம் பூமி உள்ளவரை
உங்கள் நினைவு
தொடரும்.
நாளை விடுதலை
சுதந்திர தமிழீழம்
மலரும்.

## மாவீரர்கள்

நாளெல்லாம் நாமும்மைப்
போற்றிப் பாடுவோம்
உன்னத பாதையில்
உரிமைக்காய் போராடி
கண்மூடித் தொட்டினில்
தூங்கும் கண்மணிகளே

ஓர் பாமாலை சாற்றுகிறேன்
பூமாலை தொடுக்கின்றேன்
ஒளி தீபம் ஏற்றுகின்றேன்
ஓர் கீதம் இசைக்கின்றேன்
இத்தனை இருந்தும்
தீரவில்லை; எங்கள் மனமோ
தவிக்கின்றது உங்களது
பூமுகம் காண.

வாருங்கள் ஒளியாக
இசை யாக - வாருங்கள்
உங்கள் இலட்சிய நெருப்பை நெஞ்சில்
சுமந்து
போர்க்களம் நோக்கி நாங்கள்.



கவிதைகள்
அன்புக்கரசன்
நவம் அறிவுக்கூடம்

https://tamileelamarchive.com/



# விலங்குடைக்கும் பெண்ணினம்

பெண்ணடிமை விலங்கொடிக்க
புறப்பட்ட பூங்கொடியே
தன்மானம் தனைக் காத்து
தமிழ்மானம் காத்தவளே

அகப்பை தனை விட்டெறிந்து
அகத்தினிலே திடம் கொண்டாய்
சுடுகலனை தூக்கி விட்டாய்
துணிந்து விட்டாய் விலங்கொடிக்க

பல களங்கள் கண்டு விட்டாய்
பகைதனையும் கொன்று விட்டாய்
அடிமை வாழ்வை துறந்து விட்டு
பலதுறையில் புகுந்துவிட்டாய்
பல உயர் பதவி பெற்று விட்டாய்

வீரத்தின் விளைநிலமே வேங்கைகளே
புயலாய் புறப்பட்டவளே

கடற்புலியாய் கரும்புலியாய் போனவளே
உலகிற்கே வித்திட்ட தமிழ்த்தாய்க் குலமே
எம்மைப் பெற்றெடுத்த அன்னையரே
இனி நீவீர் யாருக்கும் அடிமையில்லை

உன்மானம் காக்க அடிமைச் சங்கிலியை
உடைத்தெறிந்தாய் சுழலும் சக்கரம் போல்
உன் சுதந்திரத்திற்காய் சுழன்றிடுவாய்

உன் எதிர்காலம் உன் கையில்
எள்ளி நகைத்தவருக்கோ எரிமலைக் குழம்பு
தள்ளி வைத்தவரை உணர்த்தத் தாகம்
கொண்டாய்

உன் கண்ணிலே வடிவது உப்புநீரல்ல
இது உன்னினத்தின் விடிவிற்கான தீக்குழம்பு
உன் ஆழ்மனத்தில் அடிமையை உடைத்தெறி
உன் வாழ்க்கையில் என்றும் எழுந்து நிற்பாய்

பெண்புத்தி பின்புத்தி என்று புறந்தள்ளி
வைத்தவரே
உன்புத்தி முன்புத்தி என முன்மொழிந்து நிற்க
புறப்படு பெண்ணினமே புதுமைகள்
படைத்திடு
என்றும் உன்னினம் உயர்ந்திட எழுந்திரு
புயலாய்.

https://tamileelamarchive.com/


# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும்

7

## கண்களில் நீரைச்சேமிக்கிறேன்

எனக்காக எனது அழுஞ்சுவர்
காத்திருக்கிறது.
என் பிரிவின் காலத்துத்
துயர் முழுதையும்
அதில் கதறியழுது
கொட்டித்தீர்த்துவிட
மனம் கொதிப்புறுகிறது.
முட்களின் மீது
இரவல் மண்களில்
நான் நகர்கிறேன்

எனக்காக எனது அழுஞ்சுவர்
காத்திருக்கிறது.
என் பிரிவின் காலத்து
முட்களின் வலியை கதறியழுது
தீர்த்துவிட
கொதிப்புற்றுள்ளேன்
கண்களில்
நீரைச்சேமிக்கிறேன்.



ஒளிப்படம், கவிதை: தி.தவபாலன்

https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

வாழ்வுக்குள் ஒரு போதுமே
அகப்படாதது போலான
தொலைவில் தொலைந்த யதார்த்தமொன்று
சத்தமேதுமின்றித் தனிமையில்
உடைந்து நொருங்கிய பின்
தாழ்ந்து போனவை போக
மிகுதிகள் மிதப்பது போல்

பட்டுப்போன மரத்தைவிட்டுப்
பறவைகள் அகன்ற பின்
விறகாக வீழப்போகும்
கிளைகளின் இடுக்குகளில்
இறுதி நாட்களைக் காத்து
இன்னமும் எஞ்சியிருக்கும்
ஏகாந்தக் கூடுகளைப்போல்

சடைத்த இரண்டு வேப்பமரங்கள்
கூனிய நான்கு பூவரச மரங்கள்
உவர்நீர் ஊறும் ஒரு கிணறு
கிணற்றுக்கரை வேங்கை மரம்
எப்போதும் உலர்ந்து காய்ந்தே
கிடக்கும் ஒரு முற்றம்
கதியால்கள் பட்டுப்போன ஒரு வேலி
காணும் நேரமெல்லாம் மலர்ந்திருக்கும்
கடதாசிப்பூச்செடி என்பவை

எண்ணற்ற பிரயத்தனங்களின்பின்னும்
பயணப்பொதியிலிருந்து இன்னமும்
அகற்றப்படாதிருக்கின்றன.

கடந்து வந்த நகரங்களையும்
கிராமங்களையும் கூடக் காவிக்கொண்டு
ஆழங்களின் அலைவுகளை
ஸ்பரிசித்துக் கொண்டே
சலனமற்ற மேற்பரப்புகளில்
பயணம் தொடர்கிறது.

சந்திக்கும் மனிதர்கள் எல்லோருமே
எண்ணிக்கையற்ற தெருக்கள் சந்திக்கும் சந்திகளாக
அவர்களிடம் இருந்து ஒரு பாதையைத்
தேர்வதும் பயணிப்பதுமாய்

ஒரு சந்தியிலிருந்து இன்னொரு சந்திக்கு
ஒற்றையடிப்பாதைகளினூடு

பைத்தியமாக பரதேசியாக
வேரில்லாவெறுமை அணிந்து
அழுவதற்கான காரணங்களில்
ஆகக் குறைந்தது ஒன்றேனும்
இல்லையென்றாகாதா எனும் ஏக்கம் சுமந்து
இல்லையென்றாகி விடுவதும்
தொலைந்து விடுவதுமாக
மேலும் மேலும் தொலைவிற்குச் செல்லலும்
தொலைந்து செல்லலுமாக


கருவிலிருந்தபோது கற்பிக்கப்பட்ட
ஆதிசோகத்தை உயிரிலிருந்து
பிடுங்க முடியாத தோல்வியில்
வெறியில் சினத்தின் உக்கிரத்தில்
மனிதமெனும் சாபத்துள் வீழ்ந்த
நொண்டித்தனத்தை மட்டும் நொந்தபடி

தகரக் கூரையில் பொழியவிருக்கும்
ஒரு பெருமழையைப்பார்த்து
இதுவரையும் கொள்ளாத என்
தூக்கங்கள் காத்திருக்கின்றன.

வீட்டுப்பாடத்தை நிறைவு
செய்யாமலேயே பாடசாலைக்குச்
செல்லும் சிறுவனின் மனோநிலையில்
எட்டமுடியாத தொலைவை நோக்கி
நொண்டி நொண்டி
விரைந்து கொண்டிருக்கிறது
மொழியின் பெருவெளியில்
தோல்வி கண்ட பிரக்ஞை

எந்த வயல்களுக்கும்
சொந்தமில்லாமல்
வரப்புகளும் மட்டும்
கால்கள் தடுமாறித் தடுமாறி
நிரந்தரமற்ற எல்லைகளில்
அலைவதும் தொலைவதும்
மீண்டும் மீண்டும்
தொலைவை யாசிப்பதுமாய்

இருள்பட முன் வீடு செல்லும்
எண்ணம் இழக்கப்படாமலே
தொடர்கிறது தொலைதூரப் பயணம்.



# தொலைவில்

## வாசுதேவன் கவிதைகள்

விரைவில் வெளிவர இருக்கும்
'தொலைவில்' கவிதை நூலில் இருந்து....

https://tamileelamarchive.com/

# அவ்வளவேதான் நான்

அதன் வலி எனக்கு வலிக்கிறது.
அதன் களைப்பு என்னை வருத்துகிறது.
அதற்குப் பசிக்கும் போது எனக்குப்
பசிக்கிறது.
அதற்கு தாகம் வரும் போது
எனக்குத் தெரிகிறது.
அதன் சுகிப்புக்கள் எனக்குச்
சுகிக்கிறது.
அதன் சிந்தனை என்னில் நிகழ்கிறது.

அது தூங்கிக் கிடக்கும் பொழுது
எனக்கு அமைதி கிடைக்கிறது.


அது காலமாகி
மீண்டும் வேறு சடமாகி விடும்போது
நான் சூனியமாகிவிடுவேன்.

மனிதப் பரிமாணத்தில்,
மனித நிபந்தனையில்
மனித மொழியில்,
நான் என்பது அவ்வளவுதான்.

அதுவே அனைத்தும்
அதுவே நான்.
அதுவின்றி என்னை நான்
அறியேன்
அதுவின்றி என்னை நான்
உணரேன்.
அதுவின்றி எனக்குப்
புலன்களில்லை.
அதுவின்றி எனக்கும்
புத்தியில்லை.
அதுவின்றி எனக்குச்
சித்தமில்லை
அதுவே நான்

அதுதான் என் தசை.
என் உடல்.
உடல்தான் என்னுயிர்.

சடத்தில் நான்
ஒரு மாயைத் தோற்றம்.
சடமே சத்தியம்.
சடமே நித்தியம்.



https://tamileelamarchive.com/



# கஞ்சாவிற்குப் பின்

முதலிலேயே முப்பது
ஈரோக்களைத் தன்னிடம் தரும் படிகேட்டாள்
அதை அடுத்து அவள்
ஓட்டை விழுந்த ஒரு சாரத்தை
எனக்கு வழங்கி அணிந்து கொள் என்றாள்

இதோ பறவைகள் உண்பதற்காகப்
படைக்கப் பட்ட சோற்றுப்பருக்கைகள்
உண்ணென்றாள்.

பின் பூமியைத் தட்டையாக்கு என்றும்
காலத்தை வட்டமாக்கு என்றும்
கட்டளையிட்டாள்.

யாரோ சுற்றிப்போட்டுவிட்ட
நூற்பந்தைப்போல் கிடந்த
கால உருண்டை குலைய ஆரம்பமாகியது.

நூல் குலைந்து செல்லும் வேகத்தில்
அவள் அவற்றை நெய்து கொண்டேயிருந்தாள்.
அவளின் கைத்தறியிலிருந்து வடிவம் பெற்று
புத்தம்புதிய சித்திரங்களுடன் சேலைகள்
புறப்பட்டன.

அங்கு 'பட்டம் இழந்த கயிறுபோல்
பரிதவிக்க விட்டாயே அம்மா' என பாப்பாக்கா
எழுதி வைத்த நாளேட்டுக் குறிப்பிருந்தது.

சிலுந்தாய் குளத்தில் மாரிகாலமொன்றில்
மூழ்கி மூச்சடக்கி மரித்த மங்களம்
தோய்த்துப் போடமுடியாது போன
அழுக்காடைகளிருந்தன.

மிளகாய்த் தோட்டத்தில் கிருமி நாசினியைப்
பருகிக்கொண்டு உயிரை மாய்த்துக்கொண்ட
சுப்பிரமணியத்தின் மண்வெட்டி இருந்தது.

யாருமற்றவனாய் இறந்துபோன
நாலாங்குறுக்குத் தெருவில்
மூட்டைதூக்கிய வடக்கத்தையான்
உத்தாண்டுக்கிழவனின்
தொழிலாளர் பாதுகாப்புச்
சேமிப்புப் பணம் இருந்தது.

எழுபத்தோராம் ஆண்டு காணாமற்போன
எழுத்தாளன் லூசுக்கிரிவாசனின் தாய்
அப்பம் சுட்டுவிற்கும் பாக்கியம்
ஓட்டாண்டியாய் உலகைவிட்டுப்போனபின்
ஆமிக்காரனால் சுடப்பட்ட அவள்
நாயின் சடலம் கிடந்தது

அம்மா தற்கொலை செய்து இறந்து
அவள் சுடலைக்குக் கொண்டு சென்று
எரிக்கப்பட்டபின்னும்
மரத்திலிருந்த அவளின் சுருக்குக் கயிறு
இன்னமும் அகற்றப்படாமலேயிருந்தது.

நெசவுக்காரியின் சேலைகளின்
நீளங்கள் முடிவற்று விரிந்து கொண்டேயிருந்தன.
காலத்தைவிட வேகமாக
அவள் தன் கைத்தறியில் சேலை நெய்தாள்.
உலகம் மேலும் மேலும் தட்டையாகிக்
கொண்டே போனது.
தட்டையாகிய உலகம் முழுவதையும்
அவள் சேலைகள் மூடிக்கொண்டே சென்றன.
எனக்கு மூச்சடைத்துக்கொண்டு சென்றது.

நான் மண்டையுடைந்து தெருவில்
மயங்கிக் கிடந்தேன் என
மறுநாட்காலை மருத்துவத் தாதி கூறினாள்.



https://tamileelamarchive.com/

நான் என்னைக் கவிஞன் என்று நினைத்திருந்தேன்
எனக்கு சூரியனை அழைக்க வார்த்தைகள் வரவில்லை
நான் அவனுக்குச் சொன்னேன்
சூரியனே!
உனது துளையிலிருந்து வெளியே வா,
மூடியிருப்பதனைத்தையும் உடைத்தெறி!
பனிப்புகார்களைத் தகர்த்தெறி!


இருளை விழுங்கிக்
கரைத்துன்னைக் காட்டு !
எங்களுக்கு உலகைக் காட்டு !
உலகிற்கு எங்களைக் காட்டு!
துளையை விட்டு வெளியே வா!
சூரியனே!
பேசு! பேசு!
உன் இருப்பினைக் காட்டு!
நீ யாரென்று காட்டு!

நான் பண்பற்று நடந்து கொண்டேன்.
எரியும் நெருப்பில் விறகைப் போட்டேன்
வேறொரு தொனியில் முயற்சித்தேன்.
முடிந்தால் துளையை விட்டு வெளியே வா!
துணிவிருந்தால் காட்டு உன்னை!
நிழலைக்கண்டு மிகவும் அஞ்சுகிறாயா
துளைக்குள் கிடந்து பயப்பிடுகிறாயா?
ஒரு துளை
வட்டம் நீ!

எந்தப் பயனும் இல்லை.
பழைய அலுமாரியின் சில பலகைத் துண்டுகளை
நெருப்பில் போட்டுவிட்டு
மீண்டும் முயற்சித்தேன்:
சூரியனே வருக!
மேசையில் உனக்காக விருந்து காத்திருக்கிறது.
அனைத்து மரங்களும்,
அனைத்துப் புற்களும்,
அனைத்து மிருகங்களும்,
அனைத்து மனிதர்களும்,
அனைத்துக் கடல்களும்,
அனைத்து ஆறுகளும்,
நீ வந்து உன் எரியும் கரங்களால் அள்ளுவாய் என
காத்திருக்கின்றன.
வானத்தின் வேட்டையாடும் வாய்,
குடித்து, உண்ண வா!
கிழக்கிலிருந்து மேற்குவரை
உனக்கு உணவு பரிமாறப்பட்டுள்ளது.

இது கூட நல்ல பயனைத் தரவில்லை.
விரைவில், எரிப்பதற்கு அறையில் ஒன்றும் இருக்காது.
சிறிது சிறிதாக நெருப்பில் போடுவதற்கு
நான் பரணில் இருந்த கட்டிலை எடுத்து வர இருந்தேன்.

சூரியனே !
நீ படுகிழவன்.
நீ மிகவும் இளையவன்.
நீ ஒரு ஞானி
நீ ஒரு பித்தன்



நீ ஒரு போதும் குறைந்தவனுமில்லை
நீ பகிரப்பட்டவனுமில்லை.
வாழும் ஒவ்வொரு கண்ணுக்குள்ளும்
முழுமையாய் நிறைந்தவன்,
இருந்தும்
எப்போதும் தனித்தவன்
நீ விண்ணை நிரப்பும் அளவுக்குப் பெரியவன்
ஊசியின் துளையால் நுழையும் அளவுக்குச் சிறியவன்
உன்னை எதுவும் தொடமுடியாத அளவிற்கு
நீ மிகவும் சுதந்திரமானவன்
அத்துடன் சட்டத்துடன் மிகவும்
பின்னிப்பிணைந்திருப்பவன்
நீ
முடியாதவன்
கொஞ்சம் முதல் உதிக்க முடியாதவன்.

René Daumel 1908-1944

மொழிபெயர்ப்பு: கௌரி

https://tamileelamarchive.com/



# பிள்ளைக்கனியமுதே பேரறிவுப் பெட்டகமே

சு.வில்வரெத்தினம்


சிறுபாடியம்

நாங்கள் மலையேறிகளாக இருந்ததில்லை.
மலையேறுதல் வெற்றுச் சாகசம் மட்டுமா?
அதுவோர் அழகிய கனவு
அழகிய கனவுகள் அவற்றுக்கான நிகழ்வெளியைக்
கொண்டிருக்கும் மனவெளியில் இருந்து பூமியில் அது வேர்விடும்.
கனவு வேர்விடுமா?
பூமிக்கும் ஒரு வெளியுண்டு அல்லவா
அந்த வெளியில் கனவுகள் வேர்விடும்
பூமியின் நிகழ்களத்தில் நீர் உறிஞ்சும்

அழகிய கனவுகளை நிகழ்கள வெளியில்
நடைமுறைப்படுத்துவதற்கு நாம்
இடர்களைந்தாக வேண்டும்
இடர்களைதலுக்கான முயற்சிகளை நாம் எடுப்பதில்லை.
வேலையற்றோர் விண்ணப்பப்படிவம் தேடி அலைவதுபோல்
எமக்கு இரங்குவோரைத் தேடி அலைவோம்
மலையேற்றம் என்பதோ தேடலின் உச்சி நோக்கிய பயணம்
இடர்களைந்து செல்லும் வாழ்வின் உன்னதம்.

வாழ்வெனும் விருட்சத்தில் பூக்கும் அழகிய கனவுகளின்
உதயக் கனியை மலையேறித்தான் பறிக்க வேண்டும்
ஏனெனில் அதுவோர் மலைவிருட்சமாக இருக்கிறது.
வாழ்வில் வேர்விட்ட அழகிய கனவுகளின் மலைவிருட்சம்

நாடகப் பட்டறை நிகழ்வொன்று
பள்ளி மாணவர்க்கானது.
மாணவர்கள் கூடிச்சுற்றி நின்றார்கள்
நடுவே பயிற்றுனர் ‘இப்போது நீங்கள் எல்லோரும் மலையேறிகள்
மலையேறுங்கள் பார்க்கலாம்’
பயிற்றுனர் தானும் மலையேறினார்
மாணவர் கூட நடந்தனர்; ஆயினும்
மலையேறுதல் என்றதும் அவர்களிடம் இருந்த
இலகு இயக்கம் விடைபெற்றுக்கொண்டது
மலையேறுதல் என்ற வார்த்தையே அவர்களின்



ஒளிப்படம்: கஜானி

https://tamileelamarchive.com/

வழியடைக்கும் கல்போல் திரண்டு நின்றது.
மாணவர்களின் மனவெளியில் இருள்மலை.

மனத்தடைதான் பெரிய தடை என்பதை அறியாதவர்கள்
ஓரிரண்டு அடிகள் எடுத்து வைத்ததுமே தோள்களில்
மலையைச் சுமப்பவர்கள் போலாகிவிட்டனர்.
மேலும் சில அடிகள், மேலும் சில எட்டுகளென்று
தொடராத பயணத்தின் சுமையாக மாறினர்.

நாடகத்தில் மலையேறிகளாய் நடிக்கவும் களைப்பெய்துபவர்கள்
நாளைய வாழ்வின் இடறல்களை எதிர்கொள்ளும்
வலுவை எப்படிப்பெறுவர்?
இன்றைய நடையை இடறல் அற்றதாய் நடந்தால்தானே
இடர் களைந்த எட்டுதல்கள் நாளை கை கூடும்?
அழகிய கனவுகள் இதழ்விரியும் மனவெளியை
முதலில் நம்முள் திறத்தல் வேண்டும்.

இளையமனசே தாள் திற:
இதோ உன் முன் திசைவெளிகள் இதழ்விரியும்.
ஒரு திசை வெளிக்காட்சி பார்:

'காற்று வெளியைக் கிழித்து மேலெழும் ஏவுகணை
வாலிலே தீக்கொளுத்திய அநுமனைப்போல் 'விரைகிறது
தெரிகிறதா'? 'தெரிகிறது'

வானத்துச் சுடர்களை வசப்படுத்த பேரறிவுச் சிறகு
முளைத்துப் பறக்கிறது 'ஒரு பறவை தெரிகிறதா?'
'தெரிகிறது'

'அநுமனின் குழந்தைமை தொட்டிலில் கிடந்தபோதே
சூரியனைச் செம்பழம் என நினைத்துப் பறித்துண்ண
கைநீட்டிப் பறந்தமை தெரியுமா'?
'தெரியும்'

'தெரிந்ததை வைத்துக்கொண்டு வளர்த்த அறிவின்
பெரிய இலக்குத்தான் பேரண்ட வெளி நோக்கிய
ஆய்வின் முதற் காலடி தெரியுமா?'

'அந்த முதற்காலடியின் உந்துதல் எமக்குள்ளும் உண்டுதானே'

'உண்டு: அந்த உந்துதலை இன்றைய காலத்து
வளர்ச்சியிலே பொருத்திருப்பார்: இலக்குத்தெரிகிறதா?'
'தெரிகிறது'

'அதை உன் மனவெளியில் வரைவுசெய்
அநுமனின் பயண வழியும்
பறவையின் பயண வெளியும் புலப்படும்'

அழகிய கனவு அறிவின் தேடலும் ஒன்றோடு ஒன்று
இணைந்தவை. ஆதலால் கனவுகள் வேண்டும் நமக்கு
புராணங்கள் அத்தகைய கனவுகள் ; கூட்டுக் கனவுகள்;
அந்தக் கனவுகளை அறிவுப்புலத்தில்
வரைவு செய்பவை விஞ்ஞான ஆய்வுகள்;

ஆதலால் கனவுகள் வேண்டும் நமக்கு;
அழகிய கனவுகள் ; வாழ்வின் மீதான அழகிய கனவுகள்!
வானளாவும் கனவுகள்;

வாழ்வியற்தளத்தில் நிகழ்த்தும் கனவுகளின் பின்னால்
அறிவின் இறக்கைகள் விரியும்; அண்டம் அளாவிய
ஆய்வுப் புலத்தை இலக்காய் வரிக்கும்.
ஆதலால் இளைய,
கனவுகள் வேண்டும் நமக்கு.
அறிவு தேடும் இறக்கைகள் முளைத்த கனவுகள்.

போடாபோ ! போய்ப்புத்தகத்தை எடுத்துப்படி
தந்தை உறுமுகிறார் மைந்தனிடம்;
விளையாட்டை விட்டு விட்டு விலகுகிறான் மகன்;
உடலை வைத்து வாழ்வு ஓவியம் எழுதும்
வழியை மறுக்கிறார் தந்தை மகனுக்கு.

'பிள்ளை இதென்ன பூக்களோடு கதைக்கிறாய் '
உனக்கு விசரே போய்ப்படி தந்தையின் மிரட்டல்.

'பூக்கள் செடிகளில் பூத்த கனவுகளப்பா;
வடிவான வாசமுள்ள கனவுகள்'
பிள்ளை கனவுகொஞ்சும் மொழியில் கதைக்கிறாள்.

'பகல் கனவு பலிக்காது பிள்ளை; போய்ப்படி'
கோபம் மின்னிடத் தந்தை சொல்கிறார்.

பிள்ளைகளின் கனவுகள் பலிக்காமல் போவதில்
பெருவிருப்புடைய பெற்றோர் பிள்ளைகளின்
சுயவளர்ச்சிக்குத் தடை போடுகிறார்கள்
இவர்கள் பிள்ளைகளின் கண்களில் ஒளிமிக்க கனவுகளை
ஒருபோதும் வாசிக்காதவர்கள்.

துயிலும் குழந்தையின் வாயிதழ்களில்
கனவுகள் பூத்தால் தாய்மார்
'கடவுள் ரோசாப்பூக் காட்டுகிறார்' என்பார்கள்.
கடவுள் குழந்தைகளுக்கு நீட்டும் கனவுப்பூக்களை
எங்கள் தந்தைமாரே பிய்த்தெறிகிறார்

கடவுள் பெரியவனா?
கல்வியையும் அழகிய கனவின்பதியன்களாய்,
இறக்கி வைக்காமல், பிள்ளை மனங்களில்
பெருங்குழி வறுகி, முள் விருட்சங்களாய்
ஊன்றும் தந்தை பெரியவனா?
யார் பெரியவர்? பிள்ளை மனசில் தள்ளாட்டம்;
தந்தையோ தன்னைத் திணிக்கிறார்.
தனது பெயரை, உருவத்தை, பிள்ளையில்
பிரதியாய் வார்ப்பிக்க விரும்புகிறார்.
பிள்ளைக்கோ பெரியபொருள் வேண்டும்.
தூணிலும், துரும்பிலும், பூவிலும், தளிரிலும்,
காற்றிலும், கடலலையிலும், வான் வெளியிலும்
குடியிருக்கும் பேரறிவின் வியாபகம் வேண்டும்;
வியாபித்த கனவுகள் வேண்டும்.
தந்தையோ தன்னைத் திணிக்கிறார்;
பிள்ளைக் கனவைப் பிடுங்குகிறார்;
பிடுங்கிய இடத்தில் முள் விருட்ச மனோபாவத்தை ஊன்றுகிறார்.
குழந்தை மனசை முட்கள் பிராண்டி உட்குருதி வழிகிறது.

பூந்தோட்டம் பிள்ளைக்கு ஒரு கனவுலகின் பிரதி.
ஆனால் அது உண்மையானது.
பூந்தோட்டக் கலை உணர்வுச் செயற்பாட்டை

https://tamileelamarchive.com/

அழகியல் வடிவமாக அநுபவிக்கும் குழந்தை
பிள்ளை மனதின் வளத்தையும், உடல் ஆரோக்கியத்தையும்
ஒரு சேரத்தன்னுள் இசைவாக்கச் செயலாக்கமாக்குகிறது.
இதை அறியாத பிரம்பும் கையும்,
விறைத்த மொழியும் பார்வையும் அதிகார முள்ளாய்
பிள்ளை மனசைக் கீறுகிறது.
இந்தச் செயல், ஈனச் செயல் இல்லையா?
நமது திணிப்புக்கள் பிள்ளை மனங்களின்
அகச் செயல்பாட்டிற்கு ஊறு விளைவிப்பது.
அழகிய பிள்ளைக் கனவுகளைப் பூந்தோட்டம் ஆக்குவதே
ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு அநுகூலமானது.
சான்றோனாக்கும் வழிமுறையில் தந்தையின் பங்கையே
சமூகம் அதிகம் அழுத்துவதால்
பிள்ளைமையின் உணர்வுபூர்வமானதும்,
நளினமிக்கதுமான பக்கம் இருளடைகிறது.
அந்தப் பக்கத்திற்கு ஒளியூட்டக் கூடியவள் தாய்.
அவள் உள்ளுணர்வின் ஊற்றகம்.

சங்கத்துச் சான்றோனை இங்கழைக்கின்றோம்
வருக! வருக; சான்றோய் வருக!
சால்புடைமை பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்

'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'
'என்றால் இன்று புறத்தருதலோடு தாயின் கடன் முடிகிறதா'

'இல்லை இல்லை பாலூட்டம் தருவது
உணவு தருவதும் கூட'

'அன்பு செய்வது, அழகியல்பு ஊட்டுவது,
தாலாட்டினோடு தமிழ்மையும் ஊட்டுவது
சால்புடைமைகளுள் அடங்காதோ?
அதைத் தாய்செய்கிறாளே'

'அவை சான்றாண்மை ஊட்டாது
ஆண்மை என்ற அழுத்தத்தைக் கவனியும்'

'சால்புடைமை பெண்ணுக்கில்லையா?
அமைந்தால் அடுக்காதா?
சால்பெண்மை என்றமைத்தால் தகாதா?
'தகாது'

'சான்றோனே! இது என்ன பேதம் பாராட்டுதல்'

'சான்றோன் எனக் கேட்டபொழுதில் பெரிதுவக்கலாம்
இதுவே பெண்ணுக்குத் தக்கது'

'பிள்ளைக்குத் தக்கது தாயும் தந்தையும் இணைந்த
தகவமைப்பு அல்லவா?'
சால்பின்மை பெண்ணிடத்துக் கண்டால்
இந்தத் தகவுடைமை வாழ்வில் வருமா?

'வராது'

'என்றால் பெண்ணிற்கும் சால்புடைமை தேவைதானே'

'[சற்றே தயக்கத்துடன்] தேவைதான்'

'என்றால் பிள்ளையை சால்புடையோராக்குதலில்
பெண்ணிற்கும் பங்கு உண்டல்லவா'?

'[மீண்டும் தயக்கத்துடன்] உண்டு எனலாம்'

'எனலாம் என்பது உங்கள் தயக்கத்தைக் காட்டுகிறது'

'சரி ஏற்றுக் கொள்கிறேன்'

'சரி இப்பொழுது என்னுடன் வாருங்கள்';

இருவரும் செல்கிறார்கள். பூந்தோட்டத்தில் ஆண்பிள்ளை
விளையாடிக் கொண்டிருக்கின்றான்.
பெண்பிள்ளை பூக்களோடு பேசிக்கொண்டிருக்கிறாள்;
தந்தை பிள்ளைகளை நோக்கி
கத்தி முனைச் சொற்களை வீசிக்கொண்டிருக்கிறார்.
பூக்களை சிதைக்கும் மனோபாவத்தின் அதிகார வீச்சுகள் அவை
பூந்தோட்டத்திற்கு உகந்தவையோ புன்னகை மலர்கள்
கீறிக்கிழிக்கும் கத்தி வீச்சுகளல்ல.
இந்தக் கத்தி வீச்சுகளால் பூந்தோட்டம் அழுகிறது.
பூவிழிகள் அழுகின்றன. புன்னகைகள் கருகுகின்றன.

'பாருங்கள் சான்றோனே, பிள்ளைக் கனவுகளின் வேரிடம்
நோக்கி கத்தியை வீசிக்கொண்டிருக்கிறார் உங்கள்
சான்றோனாக்கும் கடனுடைய தந்தை'

'அடடா! குழந்தையைப் பற்றி நான் பாடியதெல்லாம்
கத்தி வீச்சில் குருதியாய் தெறித்துப் பறக்கிறதே'

'என்ன பாடினீர்கள்?'

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
மயக்குறு மழலை இல்லோர்க்கு [இல்லறத்தவர்க்கு]
பயக்குறை இல்லை தாம் வாழுநாளே'

'பயக்குறை இப்போது பிள்ளைகளுக்காயிற்று பாருங்கள்'
'பார்க்கிறேன்'

'இப்போது சொல்லுங்கள் தந்தையின் ஆதிக்கம்
சான்றோனை ஆக்குமா'?

'இல்லை பிள்ளைக் கறிசமைத்து உண்ணுகிற தந்தை
தன்னையே பிள்ளையுருவில் வார்ப்பதாய் முடியும்'

இது தான் நீங்கள் 'வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடன்'
எனவும் பாடியதால் வந்தவினை
'ஏன் அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?'

'வேல்வடித்த கொல்லன் அதை தந்தையிடம் கொடுத்தான்.
தந்தை பிள்ளையிடம் கொடுத்தான்.
தலைமுறை தலைமுறையாய்
தந்தையாதிக்கத்தை நிலைநிறுத்தும் ஆயுதமாய்'

'இந்த வேலாயுதம் கைமாறி வருகிறது!'

'சரி வேலாயுதத்திற்குப் பதிலாய் எதனைக் கொடுப்பதாம்?'

https://tamileelamarchive.com/

'அறிவாயுதத்தை'

'அறிவு ஆயுதமாகுமா?'

'அதுதான் ஆழ்ந்து அகன்ற நுண்ணியம் ஆகிய ஆயுதம்.

அடடே, அதுதான் சரியான ஆயுதம்;
தன்னையும், உலகையும்
சரியாய் ஆழ்ந்தகன்று அளக்கும் நுண்ணிய கருவி'

'சரி இப்போது உங்களிடம் ஒரு வேண்டுகோள்'
'என்ன அது?'

'உங்கள் தந்தைக் குலத்திற்குச் சொல்லு
பிள்ளைக் கனவுகளை சீவுகிற
காட்டுக்கத்தியை வீசி ஏறியுமாறு.
பதிலாகச் செயற்கைச் சிறுகுகளை
பொருத்த வேண்டாமென்றும் சொல்லுக.
புத்தகப் பொதி சுமக்கும் கழுதையாய் பிள்ளைமையை
மாற்றினால் முதுகுவளைந்த கூனல்தான்
எஞ்சுமெனவும் சொல்லுக'

சுமை சுமந்து சோர்ந்த பிள்ளை சுதந்திரக் கைவீசி
நடக்குமா? பிள்ளை நடை தளர்ந்தால் பேசுகிற சுதந்திரம்
என்னாகும்? சான்றோனே! என் தந்தை உலகைச் சால்புறுத்த
திருத்திப் பாடுக ஒரு பாடல்.

சகலரும் செவிமடுங்கள்
சங்கத்துச் சான்றோனின் புதிய பாடல் இது

தந்தை உலகே! தந்தை உலகே
முந்தை நிலவு பிள்ளைகளின்
பாற்சோற்றுக் கிண்ணமாயிருந்தது!
இன்றதனுள் பேரறிவின் பருக்கை விளைகிறது
பிள்ளை பேரறிவுப் பால் நிலவின் பருக்கைகளை
பொறுக்கி உண்ணட்டும் விடுங்கள்

சூரியனைத் தந்தை வடிவெனச் சுட்டாதீர்
அதுவோர் பிள்ளைப் பழமெனப் பேசுங்கள்
பேரறிவுப் பழமாய் சூரியன் உன்னுள்ளும்
திரண்டுவிளையுமென உறுதிபடச் சொல்லுங்கள்

வாழ்வின் உதயக்கனி பறிக்க அநுமன்
தாவிக் காற்றில் விரைந்தமை போல
சஞ்சீவிமலையைக் காவி வந்தமைபோல
உனதும் விண்வெளிப்பயணம் அமைகென வாழ்த்துங்கள்
பேரறிவை நோக்கிய பெரும் பயணமது

'மிக நன்றி சான்றோனே உமக்கு நன்று
விண்ணில் நடத்தல் சரிதான் பிள்ளைகள்
மண்ணில் நடக்கும் வழி பற்றியும் பேசுதல் நன்றல்லவா?'

பிள்ளை நடக்கட்டும் விடுங்கள்
வீட்டு முற்றத்தில் விழுந்தெழும்பட்டும்
விரிந்த வளவைச் சுற்றிப் பின்னர் நடக்கும்
பிள்ளை நடைக்குப் பின்னால் உங்கள்
உள்ளம் செல்லட்டும் அதுவோர் உயிர்தழுவும்
மென்காற்றாய் இருத்தல் நன்று.

பிள்ளை, பிறகு, பெருநடைக்குத் தயாராகுமா?
பெருநடையாலே உலகளக்குமா?

வயல் பரப்பில் பிள்ளை நடைவரம்புகளில்
தட்டுண்டு விழுந்தால் தடுமாறாதீர்
தானாய் எழுந்திருக்கும் தன்னழகைப் பார்த்திருங்கள்;
பிள்ளை தன் நடை பயிலட்டும்
இந்தத் தன் நடைதான் மலையேறும்
உயர் நடைச் சுவடுகளாய் விளையும்
ஊர்கொள்ளா விளைச்சலை பெற்றுத்தரும்;

'பிள்ளை உயர் மலையேறுவான் என்று
உறுதிபடச் சொல்கிறீர்கள்
உண்மைதானா? தம்பி மலையேறுவானா'?

தம்பி மட்டுமல்ல தங்கையும் மலையேறுவாள்
உயர் மலையென்பது உச்ச இலக்கு
அங்கொளிரும் விளக்கு உள்ளக விளக்கு;
உயர் மலை விளக்கே வழிகாட்டு
ஊதும் சங்காய் மிதக்கும் வெண்பிறையே
பிள்ளை நடைக்குப் பால் புகட்கு
எங்கள் இளம் மலையேறிகள் வருகின்றார்
முழுமதியாய் உனைக் கொணர்கின்றார்
தண்ணிலவாறு தரையெங்கும்
தன்னை உருக்கி உயிர் பாயும்.

ஒவ்வோர் உயிரும் சிலிர்க்கும்
உலகம் தனது இருப்பறியும்.



மிக நன்று சான்றோனே
மிக்க நன்று
இன்றைய நடைக்கு
ஏற்றம் தந்தீர்.
பிள்ளை நடைக்கு
பெரும் நடை தந்தீர்.
காலமறிந்து
புதுப்பாடல் மரபு
தந்தீர் வாழிய.

ஆதலினால்
உலகத்தீரே
உங்களுக்கென்று
இயம்புவன் கேளீர்
நாங்கள் உயர்
மலையேறிகளாய்
இருந்ததில்லை என்பதனால்
பிள்ளைகளின் மலையேற்றக்
கனவுகளைப் பிடுங்காதீர்;
பிள்ளைகளின் மலையேற்றம் என்பது
இன்னொருதள நிலை மாற்றம்: மாற்றங்களின்
உணர்வறிந்து நடைமாறு காலத்தில்
உங்களது குடியிருப்பை மலைச்சாரல் நோக்கி
வேண்டுமெனின் மாற்றி நிறுவிக்கொள்ளுங்கள்: மன்னும்
மானுடத்தின் உயர்மலை எங்கள் மலையென்று பாடுங்கள்
மலையின் மேலாக இளைய வானவில்.
மழைக்குறியென்று பாடுங்கள்.

https://tamileelamarchive.com/



# வழுக்குமர வாழ்க்கை

ஆதித்தநிலா

தென்னஞ்சோலைகள் முல்லை மண்ணின் கற்பகதருக்கள். பத்து ஏக்கர் இருக்கும் அந்தத்தெருக்காணி. சுவாத்தியமான தென்றற் காற்று. தென்னங்கீற்றுக்களின் சலசலப்பு. நிலவு எறிக்கையில் வெளியில் கட்டிலைப் போட்டிட்டு வானத்தையும் அந்த தென்னம் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டிருப்பதில் அலாதி பிரியம் மலரிற்கு. வேலை முடிந்ததும் அரக்கப்பரக்கப் பிள்ளயைக் கிணத்துக் கட்டில கிடத்திவிட்டுப் போனமாதிரி அதுக்காகவே ஓடி வந்திருக்கிறாள் எத்தனையோ தடவைகள்.

அந்த ரம்மியமான காட்சியை எப்பவும் பார்த்துக்கொண்டு, அனுபவிச்சுக்கொண்டு இருக்கலாம் போலத் தோன்றும். ஆனால், அவனின் முகம் மட்டும் நினைவில் வராதவரைக்கும் தான். அந்த ரம்மியம் எல்லாம். அவனின் முகம் நினைவில் வர, அவள் வாடிப்போடுவாள். நிலவுகூடச் சுடுவதாகத் தோன்றும். தென்றற் காற்றுக் கூடக் கூதல் காற்றாய்த் தோன்றும்.

'உடும்பு' மாதிரி ஒட்டிக் கொண்டே இலாவகமாய் ஏறும் மதுவன், 13 வயதுகளே நிரம்பியவன். உழைப்பு மிகுதியால் உருகுலைந்து போன உடல்வாகு. குச்சி தடியான கை கால்கள் ஏழ்மையிலும் வெய்யிலிலும் துயரிலும் வாடிவதங்கி தினமும் மரத்தை உரசி உரசி ஏறி உராஞ்சுப்பட்ட கீறல்கள் ஏராளம் அவனில்.

அவன் அந்தப் பத்து ஏக்கர் காணிக்குள்ள இருக்கிற 850 பிள்ளைகளிலையும் மாதத்திற்கு இரண்டு தடவைகள் ஏனும் தேங்காய் பறிக்க வருவான். 12 வயதுகளே நிரம்பிய அவனது தம்பி கஜனும் கூடவே வருவான். மதுவனைப் பார்த்தால் அவன்

https://tamileelamarchive.com/

தம்பியைப் பார்க்கவே வேண்டாம். மதுவனிலிருந்து சில இயல்புகளில் மட்டும் வேறுபாடுடையவன் அவன் தம்பி.

மதுவன் கேட்கும் கேள்விகளுக்கேனும் பதில் கூறுவான். கூறும் பதில்கள் ஞானிகளின் பதில் போல் தத்துவம் பேசும். இவன் தம்பியோ கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லாத மௌனி. வெறித்த பார்வை "தம்பி, நீங்கள் எந்த இடம்....." "தனங்கிளப்பக்கா" மலர் கேட்ட கேள்விக்கு பணிவாய்ப் பதில் சொன்னவன் மதுவன் தான்.

"நீங்கள் படிக்கப்போறதில்லையோ....." குனிந்து கொண்டான். மௌனமாய் நின்றவன், நிமிர்ந்த போது அவன் கண்கள் கலங்கியிருந்தது தெரிந்தது. நோகடித்து விட்டாலோ என்று வருத்தமாய் இருந்தது அவளுக்கு.

"அக்கா தனங்கிளப்பில் இதவிடப் பெரிய தென்னஞ்சோலையில எங்கட வீடு. இடம் பெயர்ந்த ஓடி வரேக்க எதையுமே எடுக்கேல்ல. அப்ப எனக்கு 5 வயது. தம்பிக்கு நாலு வயது. தங்கச்சியாக்கள் ஒருத்திக்கு மூன்று வயது. ஒருத்திக்கு ஒரு வயது. நாங்களே ஓடி ஓடி வரேக்க செல்லடி பட்டு அப்பா செத்துப் போட்டார். அம்மா தான் இங்கால எங்கள கொண்டுவந்து சேர்த்தவா.

அப்பாவக்கூட அடக்கம் செய்யிற அவகாசம் இல்லாம அப்படியே விட்டிட்டு வந்தம். அம்மா அதச் சொல்லி அழுதழுதே நோயாளியாப்போட்டா. நான் தான் வீட்டப் பாக்கிறனான்."

"தங்கச்சியாக்கள் படிக்கினமோப்பன்"

"கடசித் தங்கச்சி மட்டும் படிக்கப் போறவள்.

தம்பிக்கு அடுத்தவள் விடியக்காலையில மா இடிக்க அது இது எண்டு வேலைக்கு போட்டு பின்னேரப் படிப்புக்குப் போறவள்"

"நீங்கள் ஏன் அப்பன் போறதில்ல.....?"

கண்ணில் நீர்கட்டச் சிரித்தான். "ஊருக்குப் போய்த்தான் படிக்கிறது எண்டிருந்தன்! இப்ப ஊருக்குப் போனாலும் இதே நிலைதான். தென்ன மரங்கள் ஒண்டும் இல்லையாம். பொட்டல் வெளியாய் அடிகுத்திகள் மட்டும்தான் இருக்காம். போய் என்ன செய்யிறது....

அதோட எங்களின்ர வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் வினோதினியக்கான்ர வீடு.

நான் வினோக்கா எண்டுதான் கூப்பிடுறனான். அவா நல்ல படிப்பு படிச்சவா அவாக்கு

இன்னும் வேலை கிடைக்கேல்ல நான் அழேக்க அவதான் என்னத் தேற்றுறவா. அவா அழேக்க நான் தான் தேற்றுறனான்."

மலரிற்கு வினோதினியைத் தெரியும் முல்லை மாவட்டத்தில் அந்த நேரத்தில் இருந்த வசதியீனங்களுக்கு மத்தியிலும் நல்ல பெறுபேறோட என்ர (Enter) பண்ணினவள் வினோதினி. தகப்பன் முதல மாதச் சம்பளத்தில அம்மாவிற்கு சேலை வாங்கி கொடுக்க வேணும் எண்டு கனவுகள் நிறைந்த கண்ணோடு அவள் சொல்லிக்கொண்டு இருந்தது மலரிற்குத் தெரியும்.

கோஸ் முடிச்சு ஐஞ்சு வருசம் நியமனம் கிடைக்கேல்ல.

இப்பயெண்டா அமைதி நிலை; A9 திறப்பு எண்டு பணிப்பெருக்கங்களுக்குள்ள ஏதோ ஒண்டுக்குள்ள புகுந்திடலாம் அப்ப கீழ் உழைப்பில் ஜீ ஏ (G.A) பண்ட் எண்டு போய் வந்து கொண்டுதானிருந்தாள். அந்த கீழ் உழைப்புச் சம்பளமும் உரிய நேரத்திற்கு கிடைக்காது. அதில தான் அவள் குடும்ப வண்டியை ஓட்டிக்கொண்டு இருந்தாள்.

ஒரு நாள் அவள் எதேச்சையாய்ச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைச்சுது மலரிற்கு. படிக்கேக்க இருந்த மாதிரியே இருந்தாள் வினோதினி. உள்ளுக்கு எரிமலையாய் குமுறிக்கொண்டு இருந்தாலும் வெளியில காட்டிக்கொள்ள மாட்டாள்.

அன்றும் வேலைக்குப் போய்த்தான் வந்திருந்தாள். அவள் தோற்றம் அதனைப் புலப்படுத்த அவளுக்கான நியமனம் கிடைக்காதது தெரியாத மலர், "என்ன மாதிரி வினோதினி அம்மாக்குச் சீலை வாங்கிக் குடுத்தியோ? டிப்ளோமா முடிச்சுப்போட்டியோ" என்று கேட்டாள்.

டிப்ளோமா எண்டதும் வினோதினி உடைந்துபோனாள். நியமனம் கிடைக்கேல்ல. டிப்ளோமா எப்பிடிச் செய்யிறது. 'காலக்கரைப்பு' கனமானதுதான். குலுங்கிக் குலுங்கி அழும் அவள, மலரால தேற்ற முடியேல்ல. அவளின்ர எதிர்பார்ப்புக்கள்....!

"என்னக்கா யோசிக்கிறியள்...." மதுவன் தான் மலரை நட்புக்குக் கூட்டிவந்தான். "தம்பி வேலைக்காகப் படிக்க வேண்டாம்; அறிவுக்கொண்டாலும் பின்னேரப் பள்ளிப் படிப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேணும் அப்பன். சிறுவர் நலன் காக்க எடுக்கிற முயற்சிகளில நீங்கள் அக்கறை காட்டவேணும் அப்பன்..." அறிவுக்கோ....! அவனின் அசட்டையான கேள்வி பொறி தட்டிற்று. "அறிவு எண்டது என்னக்கா....!" அவன் தான் கேட்டான். 'மெய்ப் பொருள் காண்பது அறிவு' பல்கலைக்கழக இலட்சினையில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் நினைவில் பளிச்சிட்டது அவளுக்கு.

'மெய்ப் பொருள் காண்பது அறிவு; உண்மைப் பொருளைக் காண்பது தான் அறிவு'. "எது உண்மைப் பொருள்..." அவனுக்கு, எந்த உண்மைப் பொருளையும் தெரியாது? வறுமை! வாழ்வு! வறுமையிலும் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வரும் நிமிர்வு. படிச்சுச் சாதிச்சது எது என்ற தெளிவு.

படிப்பு - வாழ்வு கொடுக்க வேணும். வாழ்வு கொடுக்கிறதா? வினோதினி போல எத்தினை பட்டதாரிகள்.... எது அறிவு? தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். "அக்கா....." அவன் அன்பொழுக அழைத்தான். "அக்கா வினோக்காவுக்கும் உங்கள மாதிரி வேலைக் கிடைச்சா நான் காவடி எடுக்கிறதெண்டு அம்பாளிடம் வேண்டியிருக்கிறன்."

அவனது வேண்டுதலை அலசிக்கொண்டிருந்தவளை மீண்டும் அவன் தான் அழைத்தான். "அக்கா கடசித் தங்கச்சி படிக்கிறாள். நல்லாப் படிக்கிறாளாம். வினோக்கா தான் சொல்லிச்சு. அவள எப்பிடியும் படிபிச்சுப் போடுவன்.

ஆனாலும் வினோக்கா மாதிரி அவளும் எப்பயோ ஒருநாள் அழுதுகொண்டிருப்பாளோ எண்டு தான் கவலையாய் இருக்கு" இவனுக்கா அறிவு இல்லை....? அனுபவம் என்றஆசான்

https://tamileelamarchive.com/

குருவாய் நின்று வழிகாட்ட அவன் 'உலகப் பேரேட்டை' கற்றுக் கொண்டு இருப்பது புரிந்தது.

அவள் அவனை ஆழமாய் ஊடுருவிப் பார்க்கையில் சாரதாவின் சாயல் அடிப்பது நினைவில் வந்தது.

மலரிற்கு நியமனம் கிடைத்த புதிது. அந்த கிராமத்துப் பாடசாலையில் ஆண்டு ஒன்பதிற்கு வகுப்பாசிரியராய் நியமிக்கப்பட்டிருந்தாள். ஒரு மாணவி மட்டும் வசதிக்கட்டணம் கட்டேல்ல. கேட்டபோதுதான் புரிந்தது அவள் கட்டணம் கட்டவில்லை என்பதற்காக வரவில் ஒழுங்கில்லை என்பது.

மலர் வந்த சில நாட்களிலேயே அந்த வகுப்பில் முன்னிலையில் நிக்கிற மாணவிகளில் ஒருத்தியாய் சாரதாவை இனம் கண்டிருக்கிறாள். அவளின் ஒழுங்கற்ற வரவுக்கு சக மாணவர்கள் சொல்லுவது போல வசதிக்கட்டணம் தான் காரணமாய் இருக்குமோ என்று தோன்ற அணுகிய போது தான் அவளின் நிலவரம் புரிந்தது.

சாரதாவின் தகப்பன் கைது செய்யப்பட்டு காணாமற் போய்விட இடப்பெயர்வு அவலங்களும் இணைந்து அவர்களைக் கொடுமையாய்ப் பாதித்திருந்தது.

அத்தனை கொடுமைகளுக்குள்ளும்..... ஏழ்மைக்குள்ளும்..... பிரிவிற்குள்ளும்..... தாயுடன் சேர்ந்து தோட்டம் செய்துகொண்டு படிப்பையும் தொடர்ந்து கொண்டிருந்தாள் சாரதா.

அதிகாலை முன்று மணிக்கு, ஐநூறு மிளகாய்க் கண்டுகளுக்குக் குளத்தில் இருந்து பட்டையால் தண்ணீர் இறைத்து விட்டு ஐந்து மைல்கள் நடந்தே அவள் பாடசாலை வருவதாய்ச் சொன்னபோது மலர் அடைந்த அவநம்பிக்கை....? ஆராய்ந்தறிந்த போதான ஆச்சரியம்! வேதனை...!

எட்டு ரூபாய் வசதிக்கட்டணம் அவளுக்காய் அன்று கட்டியதற்காக இன்று வரை அவள், மலர் வீவில் வந்து நிக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் "ரீச்சர்! எப்படி இருக்கிறியள் உங்களாலதான் படிச்சனான்" என்று மகிழ்ந்து கூறுகையில் மலர் சிறுத்துத்தான் போவாள். என்னதான் இவளுக்குச் செய்தனான் என்று தோன்றும் மலரிற்கு. மலரிற்கு ஏழ்மையிலும் வசதி வாய்ப்புக்கள் அற்றும் கிடைக்கும் மிகக்குறைந்த வசதிகளைப் பற்றிப்படரும் இவள் போன்ற சிறுவர்கள் நினைவில் சுழல, வசதிவாய்ப்புக்களைக் கொண்டிருந்தும் பெறுபேற்று அரட்டைக் கச்சேரி நடத்தும் மாணவர்களை வழிக்குக் கொண்டுவரப் படாதபாடு படுகையில் உஷ்ணம் தலைதூக்கும்.

அதிர்ந்தே கதைக்க விரும்பாதவள், அவர்கள் நலனுக்காய்க் கண்டிக்கையில் 'பூமராங்காய்' அதே கண்டிப்புக்கள் அவளைத் தாக்கும்! வசதி வாய்ப்புக்கள் கண்ணை மறைக்கும் புதிர்கள் வேதனை தரும். இருந்தும் அவள் கடமை தொடரும்.

நினைவுகள் மோதிக்கொண்டிருக்கையில் மீண்டும் மதுவன்தான் கவனத்தைக் கலைத்தான்.

"அக்கா, ஐயா வாறார்!" அந்தத் தோட்டக்கார உரிமையாளர் ஐயா மட்டும் தான். பிள்ளயள் எல்லோரும் வெளிநாட்டில.

கத்தியும் ஆளுமாய்ப் போகும் மதுவனைக் கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தவளுக்குச் சிறிய வயதில் பார்த்த 'வழுக்கு மரப் போட்டி' நினைவில் குமிழியிட்டது. மாறி மாறிப் போட்டியாளர்கள் ஏறி வழுக்கிக் கொண்டிருந்தார்களே ஒழிய உச்சிய எட்டேல்ல.

கடைசியாப் போட்டியில கலந்துக் கொண்ட பத்துப் பேரும் சேர்ந்து ஒருத்தருக்கு மேல ஒருத்தர் ஏறி நின்று உச்சியத் தொட்டவை. பேந்தென்ன அதில வந்த நூறுருபாயைப் பத்துப் பத்து ருபாயாய்ப் பகிர்ந்துக் கொண்டதுதான்.

மலரிற்கு, அவன் மரத்தில ஏறுகிற போதெல்லாம், அவனுக்கு, அவன் வாழ்கை வழுக்கு மரம் போலவும் இந்த கடும் காற்றுக்க அவன் மரத்தில ஏறுகிறபோது அவன் கழுமரத்தில் ஏற்றப்படுவது போலவும் தோன்றும். 'பட்டினத்தார்' கழுமரத்தில் ஏற்றப்பட்ட போது அதுபற்றி எரிஞ்சதாய் மலர் படித்திருக்கிறாள்.

இவன் ஏறும்போதெல்லாம் பட்டினத்தார் ஏற்றப்பட்டபோது கழுமரம் பற்றி எரிஞ்சமாதிரி இதாலவாற இவன்ர உழைப்பு, அவன்ர வறுமையெல்லாம் எரிஞ்சு அவனையும் உயர்த்துமோ! அல்லது அவனையே...?

"சீ..." என்ன நினைப்பிது! எண்ணங்கள் எப்பவுமே நேராகவே இருக்க வேணும் என்று சிந்தனையை உதறியவளுக்கு, சிறுவர் தினத்திற்காய்க் கட்டுரை கவிதை எழுத ஊக்கப்படுத்த வேண்டிய பொறுப்பு தன்னிடம் தரப்பட்டது நினைவுக்கு வந்தது.

கட்டுரை, கவிதைகள், 'சிறுவர் உரிமை அவற்றினைப் பாதுகாத்தல்' தொடர்பாய் அமையவேணும்.

அவளுக்கு அண்மைய காலங்களில் வந்து கொண்டிருக்கும் பத்திரிகைச் செய்திகளில் சகல பிள்ளைகளுக்கும் கல்வி. வறிய, இடைவிலகல் மாணவர்களுக்குப் பல மனித நேய சிறுவர் உரிமை நிறுவனங்கள் பாடசாலை உபகரணங்கள் கொடுத்து வருகின்றன என்ற செய்தியும், பழைய பாடத்திட்ட ஆண்டு ஆறோ ஒன்பதோ சரியா நினைவில இல்ல. ஆங்கிலப் புத்தகத்தில் 'த புவ மான் ' என்ற கவிதையும் பளிச்சிட்டன. பசியோடு வந்து கொண்டிருந்த ஏழை மனிதருக்குக் கடற்கரையில் நின்று அதன் அழகை ரசித்துக் கொண்டிருந்த மனிதன் ஆகா...! என்ன அற்புதம்! என்று விபரிக்க வயிற்றுப் பசியோட வந்த ஏழை மனிதனுக்கோ இரசிக்க முடியவில்லை கொட்டாவி வருகிறது.


ஆனால் அவன் இரசிக்கத் தெரியாத மனிதனல்ல! இவனுக்கு....? இடப்பெயர்வுகள்..... இழப்புகள்.... இல்லாமை....

வாழ்க்கையே கசந்துபோயிருக்குமோ, பாணுக்கே வழியில்லை என்று மகாராணியிட்ட முறையிட்ட மக்களுக்கு "கேக் சாப்பிடுங்கோ!" என்று மகாராணி சொன்ன ஆலோசனை மாதிரி மலரிற்கும் மதுவனுக்குத் தான் சொன்ன ஆலோசனைகள் இருக்கமோ என்று தோன்றுகிறது.

க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்பாய் 'வழுக்குமர வாழ்க்கை' பொருத்தப்பாடாய் அமையும் என்று குறிப்பெடுத்துக் கொள்ளுகிறாள் மலர்.

https://tamileelamarchive.com/

# ஆதிகால மானுட வரலாறு நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 5



நிலாந்தன்

தொழில்முறை இராணுவம் யுத்தத்தை அதன் பூர்வீக நிலையிலிருந்தும் விடுவித்தது. (எனினும் தொழில்முறை இராணுவத்திற்குப் பிறகும் யுத்தம் அதன் பூர்வீகக் குணாம்சங்களிலிருந்து முற்றுலுமாக விடுபட்டுவிட்டது என்பதற்கில்லை. தொழில்முறை ராணுவத்தோடு யுத்தம் ஒரு தொழிலாகியது. அத்தோடு முக்கியமாக அது ஒரு கலையாகவும் பயிலப்படுவதாயிற்று. யுத்தம் ஒருவிதத்தில் சொத்துக்களை நாகசமாக்கியதுதான். ஆனால் இன்னொரு விதத்தில் அது சொத்துக்களையும், வளங்களையும், ஆற்றல்களையும் பலசாலிகளின் கைகளில் குவிப்பதுமாயிற்று.



இத்தகைய ஒரு மைய நிர்வாகத்தின் கீழான ஒரு வளத்திரட்சியும் ஆற்றல்களின் குவிவும் திடீரென வளர்ச்சியை வேகப்படுத்தின. சமூகத்திற் காணப்பட்ட மற்றெல்லாத் தொழில், வழிமுறைகளோடும் ஒப்பிடுகையில் யுத்தமே செல்வத்தைத் திரட்டுவதற்குரிய உடனடியான ஆதாயமான வழியாக இருந்தது. எனவே யுத்தநோய் மன்னர்களை எளிதிற் தொற்றிற்று. படை நகர்த்தும் அரசியல் வரலாற்றின் முன்னணிக்கு வரலாற்று அறநெறிகள் அதிகம் வளர்ச்சியடைந்திராத அந்நாட்களில் எழுச்சி பெற்ற வந்த அரசுகள் பிராந்திய அரசுகளுக்கிடையில் வளப்போட்டிகள் உண்டாகிய போது யுத்தமே முதலும் கடைசியுமான ஒரே வழியாக இருந்தது. இவை தவிர யுத்தமானது வர்த்தகத்தைப் போலவும், பல சமயங்களில் வர்த்தகத்தை விட விஸ்தரிக்கப்பட்ட விதங்களில் உடனடியாகவும் நாகரீகங்கள் கலைக்கப்படவும், பரவலாக்கப்படவும் காரணமாகியது. பெரும்பாலான நாகரீகங்களில் பிந்திய காலங்களில் யுத்தமே ஒரு விதத்தில் புதிய கண்டுபிடிப்புக்களின் தாயாகவும் காணப்படுகின்றது. குறிப்பாகக் கருவி நுட்பத்தை அதிகரிப்பதில் யுத்தத்தின் பங்கு நிர்ணயகரமானதாகும். (சிறப்பான உதாரணம் - மொசப்பத்தேமிய நாகரீகம்)

பிந்திய நூற்றாண்டுகளில் சில நாகரீகங்களில் ராணுவம் சலுகை பெற்ற சமூகப் பிரிவுகளில் ஒன்றாகக் காணப்படுவதிலிருந்து அங்கெல்லாம் யுத்தம் எத்துணை முக்கியத்துவம் பெற்றிருந்ததென்பதனை நாம் விளங்கிக்கொள்ள முடியும். உதாரணமாக எகிப்தில் கி.மு 1850 இற்கு பின் தோன்றிய நிலமைகளே ராணுவத்தைச் சடுதியாக வளர்த்த வேகத்திலேயே ஒரே தாவலாகத் தாவி சமூகத்தின் மேல் அடுக்குகளில் போய் அமர்ந்துவிட்டது. குறிப்பாக கி.மு 1550இற்குப் பின் எகிப்தில் மன்னர்கள் மதகுருக்கள் பிரதானிகளுக்கு அடுத்த படியாக கேந்திரஸ்தானத்தில் சலுகை பெற்ற ஒரு அமைப்பாக இராணுவம் காணப்படுகின்றது. இங்கிருந்தே எகிப்தின் பேரரசுக்கான பேராசையும் தொடங்குகின்றது.


எல்லா முதல் வலிய அரசுகளிலும் இது நிகழ்ந்தது. ஆனால் வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு விதங்களில் நிகழ்ந்தது.

முதல் வலிய அரசுகள் நதிப்பள்ளத்தாக்குகளைப் பொறுத்தவரையில் முற்றிலும் புதியதொரு அனுபவந்தான். ஆற்றல்கள், வளங்கள் ஒரு மைய அதிகாரத்தின் கீழ் திரட்டப்பட்டதுடன் வெவ்வேறு இனக்குழுக்களிற்கு உரிய வித்தியாசமான மனித அனுபவங்கள் ஒரு பொதுவான நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

முன்னெப்பொழுதையும் விட பரந்தகன்ற அடிப்படையில் மனித அனுபவங்கள் கலக்கப்பட்டு புதிய கலப்பு நாகரீகங்கள் உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் வரலாற்றில் முதற் தடவையாக விஸ்த்தரிக்கப்பட்ட உறுதியான விதங்களில் அதிகரித்தன. மனித குலத்தில் இன்றுவரையிலும் நிறைவேறாத பரந்தகன்ற பொதுப்பண்பாட்டை நோக்கிய பயணத்தின் ஆதியாரம்பம் இது தான்.

வலிய அரசுகளுடனேயே மனிதனைப் பிரிக்கும் திட்ட வட்டமான ஆதிக்க எல்லைக் கோடுகள் வரையப்பட்டிருப்பது சாத்தியம். ஏனெனில் எல்லாம் வலிய அரசுகளும் ஏதோவொரு வகைப்பட்ட ஆதிக்கப் போட்டியின் இறுதி வெற்றிகளாகவே காணப்படுகின்றன. எனவே வென்றெடுக்கப்பட்ட எல்லைகள் என்பதால் வலிய அரசின் எல்லைகள் முன்னெப்பொழுதையும் விட திட்டவட்டமானவை

நன்றி: படங்கள் À L'AUBE DES GRANDES CIVILISATIONS https://tamileelamarchive.com/



களாயும் நிச்சயமானவைகளாயும் இருந்திருக்கும்.

ஒவ்வொரு வலிய அரசிலும் அதன் உருவாக்கத்தில் திகழ்ந்த ஆதிக்கப்போட்டி எந்தளவிற்கு யுத்தத்தின் வகைப்பட்டது என்பதில் அந்ததந்த வலிய அரசுகளின் அமைவிடமே சிறப்பாகத் தீர்மானித்தது. இது போலவே வலிய அரசுகளில் நிகழ்ந்த ராணுவ மயமாக்கலின் தன்மை மற்றும் அதன் அளவு போன்றவற்றையும் அந்தந்த வலிய அரசுகளின் அமைவிடமே சிறப்பாகத் தீர்மானித்தது.

எல்லா முதல் வலிய அரசுகளும் வலிய அரசுகள் என்ற வகையில் பொதுத்தன்மைகளைக் கொண்டிருந்தாலும் அவற்றின் அமைவிடம் காரணமாக அவற்றிற்கேயான தனித்துவமான சவால்களையும் வாய்ப்புக்களையும் கொண்டிருந்தன. உதாரணமாக எகிப்திய வலிய அரசு மலைகள், பாலைவனங்கள, கடல் போன்றவற்றால் குழப்பப்பட்டு இயற்கையாகவே கவசமிடப்பட்டு இருந்தது என்பதால் அது நீண்டகாலத்திற்கு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பி வந்தது. ஆனால் மொசப்பத்தேமியாவில் நிலமை முற்றிலும் தலைகீழாய் இருந்தது. அங்கு வலிய அரசு வெளிப்படையெடுப்பிற்கு எப்போதும் திறந்துவிடப்பட்ட இயற்கை அமைப்பைக் கொண்டிருந்தது என்பதால் அது எதிரிகளால் இலகுவில் தாக்கப்படக் கூடியதாகவும் இருந்தது. இந்திய வலிய அரசு சீனாவைப்போல் ஏனைய நாகரீகங்களிலிருந்து தொலைவில் இருந்தது. எனவே வெளியில் இருந்து வரக்கூடிய ஆபத்துக்களிலிருந்தும் இது ஒப்பீட்டளவில விலகி இருந்தது. அத்தோடு போதிய வளங்கொண்ட மிகப் பரந்த நிலப்பரப்பில் அமைந்திருந்த வலிய அரசு என்பதால் அங்கு ஒப்பீட்டளவில் குறைந்தளவு வளப்போட்டிகளே இருந்திருப்பது சாத்தியம். இது காரணமாகவே இந்திய நாகரீகம் இராணுவ வகைப்பட்ட வளர்ச்சிகளை அதிகம் பெற்றிருக்கவில்லை. இதுதான் தன்னைத் தற்காத்துக் கொள்ளத்தக்க இராணுவத்தை ஒத்த அமைப்பு இல்லாதிருந்தமைதான் - இந்நாகரீகத்தின் வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணிகளில் ஒன்றாய் இருந்திருக்க வேண்டும்.

சீன நாகரீகம் அதன் அமைவிடம் காரணமாகவும், முக்கியமாக அதன் இயல்பு காரணமாகவும் ஒரு தீவைப் போன்று எல்லா விதங்களிலும் ஆனது. ஏனைய பெரிய நாகரீகங்களைவிட வயதில் மிகவும் இளையது. ஏனைய நாகரீக மையங்களிலிருந்து விலகி ஒப்பீட்டளவில் தொலைவில் இருந்தமையாலும் போதியளவு வளங்கொண்ட பரந்தகன்ற நிலப்பரப்பில் காணப்பட்டதாலும் ஏனைய நாகரீகங்களுடனான அதன் உறவுகள் ஆரம்பத்தில் ஒப்பீட்டளவில் தொலைவிற் காணப்பட்டதால் சீன நாகரீகம் வெளியாரின் தலையீடுகளிலிருந்து அநேகமாகத் தப்பியிருக்க முடிந்தது. எனவே இது போன்ற பல காரணங்களினாலும், சீனநாகரீகம் ஏனைய பெரிய நாகரீகங்களின் வளர்ச்சிப் போக்குகளால் அதிகபட்சம் தீண்டப்படாத தனக்கேயான நூதனமான மெதுவான வளர்ச்சிப் படிகளிற்கூடாக ஆனால் ஸ்திரமாகவும், முக்கியமாக தொடர்ச்சியறாமலும் முன்னேறி வந்தது. எனினும் பொதுவான வளர்ச்சிப்போக்குகளைப் பொறுத்தவரை நாகரீகத்தின் எழுச்சி எளிய அரசு உருவாக்கம் ராணுவமயமாதல் பேரரசு உருவாக்கம் போன்றவற்றில் அது ஏனைய பெரிய முதல் நாகரீகங்களைப் போன்றதுதான்

எனவே அமைவிடம் காரணமாக ஒவ்வொரு நதிப்பள்ளத்தாக்கிலும் காணப்பட்ட முதல் வலிய அரசுகளில் இராணுவமயமாக்கல் வெவ்வேறு அளவுகளிலும் வெவ்வேறு விதங்களிலும், வெவ்வேறு காலப்பகுதிகளிலுமே நிகழ்ந்திருக்கக் காணலாம்.

இதில் ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவிலும் அதிகரித்த வேகத்திலும் இராணுவமயமாக்கப்பட்ட வலிய அரசாகக் காணப்படுவது மேற்காசியாவின் மொசப்பதேமிய வலிய அரசுதான்.

இவ்வலிய அரசுதான் ஏனைய அரசுகளைவிட மூத்ததாக இருந்ததும் ஒரு காரணம். எனினும் முக்கியமாக அமைவிடம் காரணமாக இவ்வலிய அரசு Fertle crecent எனப்படும் வளம் பொருந்திய பிறைவடிவ நிலப்பகுதியைத் தன்னுள் கொண்டிருந்ததால் அதிகரித்த வளப் போட்டிகளுக்கு இலக்காகியதுடன், அதிலும் குறிப்பாக இயற்கையாகவே வெளிப்படையெடுப்புக்களிற்கு திறந்துவிடப்பட்ட ஒரு நில அமைப்பையும் கொண்டிருந்தது. இக்காரணங்களினாலேயே இவ்வலிய அரசு இராணுவமயமாதலில் ஏனைய வலிய அரசுகளை முந்தியிருப்பது சாத்தியம். இதுதான் இப்பிராந்தியம் வரலாற்றின் முதலாவது பேரரசனை உருவாக்கியதற்குரிய அடிப்படைக் காரணமாகவும் இருந்திருக்க வேண்டும்.

அதோடு கி.முந்திய ஆதிப் பேரரசுகளின் எண்ணிக்கையில் அதிகளவு பேரரசுகள் உருவாகிய பிராந்தியமாக இது காணப்படுவதற்கும் இதுவே அடிப்படைக் காரணமாகும். எகிப்து அதன் முதலாவது பேரரசை யுத்தத்தேரின் பின்னரே கண்டது. யுத்தத்தேர்

https://tamileelamarchive.com/

எகிப்தின் தலைமையை உடைத்துவிட தொடர்ந்துருவான நிலமைகளின் வளர்ச்சிப் போக்கில் முதலாவது எகிப்தியப் பேரரசு தோன்றியது. ஏனைய மூத்த பெரிய நாகரீக மையங்களான இந்தியாவிலும். சீனத்திலும் கிரேக்கத்திலும் முதலாவது பேரரசுகள் மிகவும் பிந்தியே காணப்படுகின்றன.

முதலாவது வலிய அரசு தோன்றி சுமாராக 1000 (ஆயிரம்) ஆண்டுகால வளர்ச்சிகளின் பின் கி.மு. 2345இல் வரலாற்றின் முதலாவது பேரரசின் எழுச்சி நிகழ்ந்தது.

சாகொன் - வரலாற்றின் முதலாவது பேரரசன் தனது (5000) ஐயாயிரத்திற்கும் குறையாத படையாட்களோடு கழுதைகள் பூட்டிய நான்கு சில்லுத் தேரிலேறி மொசப்பதேமியாவலிருந்து வரலாற்றின் முன்னணிக்கு வந்து சேர்ந்தார்.

படைபல மேலாண்மையோடு தொழில்நுட்ப மேலாண்மையும் முக்கியமாக ஒரு தனிப்பட்ட அரசனின் கெட்டித்தனங்களும் சேர்ந்துவிட இத்தகைய முதலாவது பேரரசு சாத்தியமாகியது. இன்று வரையிலுமான உலகத்தின் எல்லாப் பேரரசுகளையும் போலவே முதலாவது பேரரசன் சாகொனும் ஒரு யுத்தத்தின் குழந்தைதான். தமக்கிடையே எப்பொழுதும் மோதியபடி பல வீனப்பட்டிருந்த மொசப்பதேமிய மாநகர அரசுகளை சாகொன் கி.மு 2400 இலிருந்து கி.மு 2446 வரையிலுமான சுமார் 46ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெற்றி கொண்டார். ஒரு சாதாரண சிப்பாயாக இருந்து பின் தளபதியாகி இறுதியில் பேரரசனாக அவர் உயர்ந்தது இப்படித்தான்.

சாகொனிலிருந்தே வரலாற்றில் தனிநபர்கள் பெயர்கள் முதன்மைபெற தொடங்கியதாக சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.

சாகொனின் வெற்றிக்கு மூல காரணம் அவருடைய தொடர்ச்சியான போர் அனுபவமுடைய கட்டுப்பாடான இராணுவம்தான். அநேகமாக வரலாற்றில் ஒப்பீட்டளவில் முழு வளர்ச்சியடைந்த தொழில்முறை இராணுவமாக இதுதான் இருந்திருக்க முடியும். சாகொனின் முன் ஒவ்வொருநாளும் 5400 படையாட்கள் அமர்ந்து உணவருந்தியதாக மொசப்பதேமியக் குறிப்புக்கள் கூறுகின்றன. எனினும் சாகொனின் இராணுவம் அதனுடைய தாய் நிலமான அக்காடியாவிலிருந்தே பேரரசின் ஏனைய வளமான இடங்களை நோக்கி அடிக்கடி நகர்ந்தபடி இருந்தது சாகொனின் குறிப்புக்கள் மத்தியதரைக் கடற்கரைகள், கருங்கடலின் கரைகள், வரையிலும் பரந்து சென்றார்கள்.

சாகொனின் வெற்றி ஒரு விதத்தில் தொழில்நுட்ப வெற்றியுமாகும். ஏனெனில் நான்கு சில்லுகள் பூட்டிய தேரில் ஏறியே அவர் முதலாவது பேரரசராக வரலாற்றின் முன்னணிக்கு வந்தார். இவர் காலத்தில் நிலவி வந்த வலுச்சமநிலையை உடைத்துக் கொண்டு ஒரு பேரரசராக அவர் உருவாகியதில் யுத்தத் தேவை அவர் வெற்றிகரமாகக் கையாண்டதும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும் நான்கு சில்லுகள் பூட்டிய தேர் யுத்தத் தொழில்நுட்பத்தில் இரு சில்லுப் பூட்டிய தேருடன் ஒப்பிடுகையில் அத்துணை வினைத்திறன் கொண்டதல்ல எனினும் அது வரலாற்றின் முதலாவது பேரரசன் ஏறிவந்த தேர் என்பதாலேயே அதற்கொரு முக்கியத்துவம் கிடைத்து விடுகின்றது.

(இன்னும் வரும்)

**ஒவ்வொரு வலிய அரசிலும் அதன் உருவாக்கத்தில் திகழ்ந்த ஆதிக்கப்போட்டி எந்தளவிற்கு யுத்தத்தின் வகைப்பட்டது என்பதில் அந்தந்த வலிய அரசுகளில் அமைவிடமே சிறப்பாகத் தீர்மானித்தது. இது போலவே வலிய அரசுகளில் நிகழ்ந்த ராணுவ மயமாக்கலின் தன்மை மற்றும் அதன் அளவு போன்றவற்றையும் அந்தந்த வலிய அரசுகளின் அமைவிடமே சிறப்பாகத் தீர்மானித்தது.**



https://tamileelamarchive.com/



# இயற்கையுள் விழுந்த இயந்திர உறுமல்

கடற்கரை அருகே ஓர் தென்னைமரம்.
பரந்த கடலின் வடக்கு எல்லையாய் தொடுவானம் நிற்க,
தெற்குக் கரையின் எல்லையில் இந்தத் தென்னை.
தெற்கிலிருந்து சோளகம் எழுகிறது.
தென்னை தன் கைகளை எல்லாம் கடலை நோக்கி நீட்டி,
எதையோ யாசிப்பது போலவும், எல்லையற்ற
பரம்பொருளின் முன்னே கைகளை பரப்பி
இறைஞ்சும் பக்தனைப் போலவும் மாறுகிறது.

வடக்கிலிருந்து வாடையெழும்போது, தென்னையில்
விழுந்த சிறுகுனிவு, குளித்துவிட்டு
கூந்தலை உலர்த்தும் பெண்போல் - அதுவும்
தன்னைக் காமுற்று நிற்கும் காதலன் முன்னே -
தலையை சிறிது ஓரம் சாய்த்து, கைகள் இரண்டையும்
உயர்த்திக் கூந்தலை நீவிவிடும்
பெண்ணின் பராமுகப் பெருமிதத்தோடு
தென்னை.


இப்போ வாடையும் இல்லை, சோளகமும் இல்லை.
மழைவருமுன் ஏற்படும் காற்றுவிழுந்த திடீர் அமைதி.
தென்னை ஆரவாரம் களைந்து, அசையாது
கரையில் 'இருத்தல்' செய்கிறது, நெய்தலுக்குரிய
இரங்கலோடு.

யாருக்காக காத்திருக்கிறது? இரங்குகிறது?
கடலின் நடுவே சிறுகட்டுமரம்.
அலைகளின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஏற்ப
இடைக்கிடை அதன் இருபக்க முனைகளின்
முன்னீட்டில், அவ்வளவே.
அதற்கப்பால் நேவிக்கப்பல் ஒன்றின் உறுமல்.
தென்னை, கட்டுமரம் பத்திரமாய் கரைசேர
வேண்டும் என்பதுபோல் தியானித்து நிற்கிறது.

காற்றில் கனமேறுகிறது.
அந்தக் கனம் குளிரின் சுமை.
மழைக்கால மாலை வந்துகொண்டிருக்கிறது.
கடலின் வெண்ணுரை கக்கிய தூரப்பிரதேசம்
கருமை படர, கட்டுமரத்தின் கருமுனைகள்
அழுத்தம் அழிந்து கரைவனபோல்.......
தூர அடிவானப் பரப்பில் ஊமை வெள்ளிகள்
கண்ணைக் கசக்குதுபோல் சில சிமிட்டல்கள்
நிலவை விரும்பாத மழைமேகங்கள் ஊத்தை
சீலைகளை இழுத்துக்கொண்டு திரிவோர் போல்
வானமெங்கும் சிதறலாய்ப் படரல்....

நேவிக்கப்பலின் இரைச்சல் இப்போ மிக
அருகில் கேட்கிறது.
தென்னை ஒருதரம் பெருமூச்செறிந்ததுபோல்
உடல் சிலிர்த்துக் கொள்கிறது.

https://tamileelamarchive.com/



மு.பொ

# அதிகாரம் புரியாத சமன்பாடு


ஜீப் வண்டிகள் உறும,
சப்பாத்துக்கள் ஒலிக்க
மக்கள் மத்தியில்
ஏந்திய ஆயுதங்களுடன்

காக்கி உடை ராட்சதர்கள் போல்
அவர்கள்.


அவர்கள் ஏந்தும் ஆயுதமுனைகளின் மோப்பங்களுக்கு
முகம் கொடுக்காது,
மௌனமாய் மக்களோடு மக்களாய் இவர்கள்
நீட்டிய ஆயுதங்களில் பீதியின் நிழல்
மௌன ஊடாட்டத்தில் விடுதலை விரிக்கக்
காத்திருக்கும் உள்வாங்கல்
வீரியத்தின் ஒளிச்சிதறல்.
அந்த ஒளிச்சிதறலில் கண்ணிமைப்புருவங்கள் போல்
பேச்சற்ற உள்நடுங்கும் ஆயுதப் பரிவாரங்கள்.

அவர்களின் காக்கி முகாம்கள் கூடக்கூட
இவர்களின் விடுதலைக்குகைகள் பெருகிக்கொண்டே
இருக்கின்றன.
அவர்களின் ஆயுதம் கக்கிய சன்னங்களில்
இருவர் கொலையுண்ண
நால்வர் புதிதாக ஜனித்தெழும்
இவர்களின் விடுதலை இனவிருத்தி பற்றி அறியாத
அதிகாரம்.

சர்வாதிகாரம் என்பது விடுதலையை
ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு,
தன்னை அறியாமலேயே அதைப் பிறப்பிக்க
யோனி வாயிலில் காத்திருக்கும் மருத்துவிச்சி.
சர்வாதிகாரம் சமன் விடுதலை.
எத்தனை தரம் சரித்திரம் இதைக் கற்பித்துக் கொடுத்தாலும்
அதிகார அமர்வுகளுக்கு புரியமுடியாது போய்விட்ட,
மர்மச் சமன்பாடு.



https://tamileelamarchive.com/




தமிழர்கள், சிங்களவர்கள் போன்று காலா காலமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு தேசம், ஒரு அரசு, மதம், மொழி, கலை, கலாச்சாரம் எல்லாம் அந்தமண்ணிலேயே இருந்திருக்கிறது. ஒரு அரசை அமைத்து அந்த மண்ணிலே வாழ்ந்தார்கள்.

ஏன் அவர்களுக்கு அந்த மண்ணிலே ஒரு பூரணமான வரலாறு எழுதப்படவில்லை

# தமிழர் வரலாறு இருட்டடிப்பு

## ஆதாரங்களைத் தேடி ஒரு பயணம்

இலங்கைத்தமிழர் வரலாற்று மூலங்கள் அனைத்துலகத்தேடல்கள்- ஆய்வு நூல்

தமிழர் தாயகத்தில் இருந்து அந்நியர் கொண்டு சென்ற வரலாற்றுத் தகவல்கள், ஆதாரங்கள் யாவற்றையும் திரட்டி இந்த நூலை கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் எழுதியிருக்கின்றார். ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ள இந்த ஆய்வு நூல் உலகின் பலநாடுகளிலுமுள்ள உயரிய பல் கலைக்கழகங்கள், ஆவணக் காப்பகங்கள், அரசநிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு எழுதப்பட்டதாகும். இலங்கைத் தமிழர் சம்பந்தமான பலதரப்பட்ட வரலாற்று மூலாதாரங்களை இனம் கண்டு வெளிப்படுத்தியுள்ள நூலாக இது விளங்குகிறது. ஆவணங்கள் பற்றிய விபரங்களையும் பல் வேறுபட்ட உதாரணங்களையும் உள்ளடக்கிய புலமைசார் வெளியீடாக இந்த நூல் வெளி வந்திருக்கிறது.

இவர் ஏற்கனவே இலங்கைத் தமிழர் தேசியவாதம் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றிய ஆய்வு எனும் நூலை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'இலங்கைத்தமிழர் வரலாற்று மூலங்கள் அனைத் துலகத் தேடல்கள்' என்ற நூல் பற்றி கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் புலிகளின் குரல் வானொலியில் 'நூலகம்' நிகழ்ச்சிக்கு வழங்கிய பகிர்வை நன்றியுடன் எழுத்துருவில் எரிமலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**இந்த ஆய்வு நூலை எழுதுவதற்கான ஆர்வம் உங்களுக்குள் எவ்வாறு பிறந்தது?**

இந்த நூல், இந்த ஆய்வு ஏற்படுவதற்கு அல்லது இந்த ஆய்வைச் செய்வதற்கு ஒரு நீண்ட கால இலட்சியப் பின்னணி எனக் கிருந்தது. இந்த ஆய்வு நூலை எழுதுவதற்கு அதுவே வழிவகுத்தது. முக்கியமாக நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே 1975ம் ஆண்டு தொடக்கம் 1976ம் ஆண்டு வரையிலான காலங்களிலே வரலாற்றுத் துறையில் வரலாற்றுக் கல்வியை ஒரு சிறப்புப் பாடமாக பயிலத் தொடங்கினேன். அப்பொழுது பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் தான் என்னுடைய முக்கிய குருவாகவும் இருந்தார்.

அப்பொழுது எங்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரிய வந்தது இது வரையில் இலங்கைத் தமிழர் பற்றிய ஒரு முழுமையான வரலாற்று நூல் எந்த ஒரு கல்விமானாலும் எழுதப்படவில்லை என்ற அந்த உண்மை.

https://tamileelamarchive.com/

அதாவது There is no comprehensive history of srilanka and tamil until 1975 - 1977 அப்பொழுது என்னுடைய கேள்விகள் எல்லாம் ஏன் இவ்வாறனதொரு தமிழர்பற்றிய பூரண மான வரலாறு கல்விமான்களால் எழுத முடியாமல் போனது என்பதாக இருந்தது. அந்தக் கேள்வி எனக்குள்ளே அடிக்கடி எழுந்து கொண்டிருந்தது. அப்பொழுது அங்கிருந்து வரலாற்றுக் கல்வியைக் கற்றபொழுது நாங்கள் வாசித்தவைகள் எல்லாமே அதாவது இலங்கை வரலாற்றைப் பற்றி படிக்கும் பொழுது சிங்களவர்களுடைய வரலாறாகத் தான் அனைத்தும் அங்கே காணப்பட்டன.

### தமிழர் பற்றிய வரலாறு பதியப்படாது போனமைக்கான காரணிகள் யாவை?

அந்த மண்ணிலே தமிழர்கள், சிங்களவர்கள் போன்று காலா காலமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு தேசம், ஒரு அரசு, மதம், மொழி, கலை, கலாச்சாரம் எல்லாம் அந்தமண்ணிலேயே இருந்திருக்கிறது. ஒரு அரசை அமைத்து அந்த மண்ணிலே வாழ்ந்தார்கள்.

ஏன் அவர்களுக்கு அந்த மண்ணிலே ஒரு பூரணமான வரலாறு எழுதப்படவில்லை இது குறித்துப் பேராசிரியர் இந்திரபாலா மற்றும் சில வரலாற்றுப் பேராசிரியர்களுடன் பேசுவதுண்டு. என்னிடம் சில அடிப்படைக் காரணங்கள் இருந்தது. அது என்னவென்றால் முதலிலே இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் எல்லாம் தெற்கிலே தான் தோற்றம் பெற்றிருந்தன. அப்பொழுது அங்கு பேராசிரியர்களாக இருந்தவர்களுக்கு பல்வேறுபட்ட தடைகள் இருந்திருக்கின்றன இதனால் அவர்களால் தமிழர் பற்றிய வரலாற்றைப் பூரணமாக எழுதுவதற்கு முடியவில்லை.

சமய, சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு, அரசியல், பொருளாதாரம் சம்பந்தமான சகல வரலாறுகளையும் தான் நான் இங்கு குறிப்பிடுகின்றேன். ஆனால் அன்றைய காலகட்டத்தில் இருந்த பேராசிரியர் அரசரட்ணம் தொடக்கம் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் இரகுபதி போன்றவர்கள் எல்லாம் இந்த வரலாற்றுத் துறையைச் சிறப்பாகச் செய்தவர்கள். அவர்கள் தங்களுடைய குறுகிய ஏரியாவுக்குள்ளேயே அந்த ஆய்வுகளைச் செய்தனர். ஒருவர் டச்சுக்காலத்தைப் பற்றியும், ஒருவர் யாழ்ப்பாணராச்சியத்தைப் பற்றியும் ஒருவர் பிரிட்டிஸ் காலத்தைப்பற்றியும் ஒரு சிறப்பு ஏரியாக்களை எடுத்துத்தான் அந்த ஆய்வுகளைச் செய்தார்கள். அல்லது அது சம்பந்தமான புத்தகங்கள் தான்அங்கே வெளி வந்தன. அதேபோன்று மானுடவியல் (Anthropologie), தொல்லியல் (Archéologie), சமூகவியல் (Sociologie), அரசியல் விஞ்ஞானம் (political study) அவை பற்றிய புத்தகங்கள் கூட தமிழர் வரலாறு பற்றி பேசவில்லை. பேராசிரியர் வில்சன், அரசியல் விஞ்ஞானத்தில் பிரபல்யமாக இருந்தவர் அவர் எழுதிய இலங்கையினுடைய வரலாறுகள் எல்லாம் ஆரம்ப காலத்தைப் பார்த்தால் கூடுதலாக இலங்கைக்கு பொதுவான அரசியல் விடயங்களைக் கதைக்கின்ற நூல்களாகத்தான் அவை இருந்தன. பின்னர் வந்த பேராசிரியர் சிவராசா, சிவன் கதிர்காமர் போன்றவர்களால் கூட ஒரு தொடர்ச்சியான அரசியல் வரலாற்றையோ, அல்லது மானுடவியல் பற்றியோ, சமூகவியல் பற்றியோ சமய தொடர்ச்சியான வளர்ச்சி பற்றியோ, கலை கலாச்சாரம் பண்பாடு பற்றியோ பூரணமான வரலாற்று நூலை எமது சமுதாயத்திற்கும் புதிய தலை முறைக்கும் கொடுக்க முடியாமல் போய் விட்டது.

### வரலாற்று ஆதாரங்களுடன் கூடிய நூலை ஏன் அவர்களால் எழுத முடியாது போனது?

அதற்கு அடிப்படைக் காரணம் நான் கண்டு பிடித்தவற்றிலே முக்கியமாக அகழ்வாராய்ச்சிகள் தமிழ் பிரதேசங்களில் வடக்கிலேயும் கிழக்கிலேயும் அனேகமாக நடைபெறவில்லை. அதற்கு அரசாங்கம் பல்வேறு தடைகளை அங்கே போட்டிருந்தது.

இரண்டாவது ஒரு ஆய்வைச் செய்வதற்கு - ஒரு ஆக்க இலக்கியம் என்பது ஒருவர் தன்னுடைய கற்பனையில் வருகிற விடயங்களை எழுதிக் கொண்டு செல்வது - அல்லது சிலர் புத்தகங்களை எழுதும் பொழுது இரண்டாம் தரத்தரவுகளை வெளியிட்ட நூல்களில் வரும் தரவுகளை வைத்துக் கொண்டு புத்தகங்கள் எழுதுகிறதன்மை. ஆய்வு நூலென்பது: கூடுதலாக மூலாதாரங்களை வரலாற்று ஆதாரங்களை ஆதாரங்களைக் கொண்டு - கச்சிதமான ஆவணங்களைக் கொண்டு - நம்பகத் தன்மையான ஆவணங்களைக் கொண்டு எழுதப்பட வேண்டியது. இலங்கைத் தமிழர் பற்றிய பூரணமான வரலாற்றை எழுத அங்கு





இலங்கைத்தமிழர் வரலாற்று மூலங்கள் அனைத்துலகத்தேடல்கள்- ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு - அவுஸ்திரேலியா

https://tamileelamarchive.com/




போதிய ஆவணங்கள் எமது கல்விமான்களுக்கு எமது மண்ணிலே கிடைக்கவில்லை. இது தான் முக்கியமான காரணம்.

### ஆவணங்கள் இல்லாத நிலையில் உங்களின் மன உணர்வு எவ்வாறு இருந்தது?

எனக்கு நீண்ட காலமாக இந்த ஆவணங்கள் இல்லாத ஒரு தன்மை பற்றிய கவலை இருந்து வந்தது. ஏன் தமிழர்கள் இந்த ஆவணங்களை சேகரித்து வைத்திருக்கவில்லை தமிழர் பற்றிய இந்த ஆவணங்களுக்கு என்ன நடந்தது. இவ்வாறான சிந்தனைகளே எனக்குள் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. தமிழர் தேசியவாதம் பற்றி கலாநிதிப் பட்டத்திற்காக சிட்னிப் பல்கலைக்கழகத்திலே ஆய்வுகளைச் செய்த பொழுது நான் எனது கண்களை அகல விரித்துப் பார்த்தேன். எந்த விதமான ஆவணங்களும் எனக்குக் கிடைக்கவில்லை சிட்னியிலோ சரி, இலங்கை, இந்தியாவிலோ சரி எனக்குக் கூடுதலான ஆவணங்கள் கிடைக்கவில்லை. ஒரு கட்டத்திலே கலாநிதிப்பட்டத்தை விட்டு விடுவோமோ என கூட யோசித்தேன் ஏற்கனவே அந்த கல்விமான்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் எனக்கும் ஏற்பட்டது.

நான் இந்த நிலையில் திரும்ப பேராசிரியர் அரசரட்ணத்துடன் கதைத்த பொழுது 'இல்லை, அவ் வாறில்லை. போர்த்துக்கல், இந்தியாவிலே கோவா, கொலண்ட், டச்சுக்காரர்கள் எங்களை ஆண்டிருக்கிறார்கள், பிரிட்டிசார் எங்களை ஆண்டிருக்கிறார்கள் பிரிட்டிஸ் லைபிரரி இங்கெல்லாம் நீர் போய்த் தேடினீர் என்றால் நிச்சயமாக இதற்கான ஆவணங்கள் உமக்கு கிடைக்கும்' அவ்வாறு என்னை ஊக்கப்படுத்தினார்.

சிட்னிப் பல்கலைக்கழகம் எனக்கு அதற்கான உதவிகளைச் செய்து தந்தது. அப்படித் தேடுகிற பொழுது நான் மலைத்து விட்டேன். தமிழ்த்தேசியவாதப் புத்தகத்தில் பார்த்தீர்களானால் எவ்வாறான மூலாதாரங்களைத் தேடி எடுத்து தேசியவாதத்தின் அடியூற்றுக்களைத் தமிழ் தேசியவாதம் எவ்வாறு உருவாகிறது என்பதையும் தமிழ்தேசியவாதம் எவ்வாறு வெளிவந்தது என்பதைக் காட்டியிருக்கின்றேன்.

அந்த ஆர்வமும் எழுச்சியும் இந்த நூலை ஆக்குவதற்கு உலகம் முழுவதும்- தேவையான இடங்களுக்கெல்லாம் சென்று தமிழர் பற்றிய ஆவணங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் டச்சுமொழியிலும், போர்த்துக்கேய மொழியிலும் தேட வேண்டும் என்றவொரு வெறி எனக்குள் ஏற்பட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

### இந்த நூலின் உருவாக்கத்தின் பின்னணியில் யார் யார் இருந்தார்கள்?

இதற்குப் பின்னணியிலே என்னுடைய பேராசிரியர் இந்திரபாலா என்னை எந்த நேரமும் ஊக்கப்படுத்தினார். அதே வேளையிலே தமிழ்த் தேசியவாதம் பற்றி எழுதும் போது சி.வை.தாமோதரம்பிள்ளையை என்னால் மறக்க முடியாது.

அவர் அப்பொழுது இந்தியாவிலே சென்னைப் பல்கலைக்கழகத்திலே கற்ற இலங்கைத்தமிழர். அவர் அங்கே தொழில் புரியும் பொழுது இந்தியாவிலே தமிழ் அறிஞர்கள் உ.வே.சாமிநாதஐயர், மறைமலையடிகள் போன்றவர்கள் முக்கியமான பழைய இலக்கியங்களைத் தொகுத்து எழுதி வெளியிட்டது போல அதற்கு மேலாக ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை போன்றவர்கள் நிறைய பழந்தமிழ் இலக்கியங்களை ஏட்டுச் சுவடிகள் மூலம் தேடி தமிழ் நாடு முழுக்கப் பெற்று அவைகளை நூல் வடிவிலே அச்சிட்டு கொண்டுவந்தார்கள். அப்பொழுது அருமையாக ஒரு இடத்தில் சொல்லியிருக்கின்றார் "தமிழ் மக்களே! உங்களுக்கு ஒரு தேசப் பற்று, தமிழ்பற்று, நாட்டுப்பற்று உங்களுக்கில்லையா? எங்களுடைய தமிழ்த்தாய் செத்துக் கொண்டிருக்கிறாள்? அதற்காக செய்ய வேண்டிய கடமைப்பாடுகள் நிறைய இருக்கின்றது. ஏன் நீங்கள் செய்கின்றீர்கள் இல்லை? இவ்வாறு செய்யாமல் விடுவதில் நீங்கள் பெருமைப்படுகிறீர்களா?" அவ் வாறானதொரு வசனத்தை அவருடைய நூலில் நான் கண்டு கொண்டேன். அப்பொழுதே எனக்குள் ஒரு ஆதங்கம் வந்தது. எவ்வாறாயினும் நான் இந்த முயற்சியில் இறங்கி எவ்வாறு சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள், ஆறுமுகநாவலர் அவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களையும், இதிகாசங்களையும், தேவார திருவாசகங்களையும் நூல்களாக கொணர்ந்தார்களோ அதே போன்று நானும் தமிழ் சம்பந்தமான வரலாற்று ஆவணங்களை உலகம் முழுவதும் தேடிச்சென்று நூலாக வெளியிட்டுள்ளேன்.

### இளம் தலை முறையினருக்கு நீங்கள் குறிப்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

குறிப்பாக எமது தமிழ் மக்களுக்கும் இளையதலைமுறையினருக்கும் இதை சொல்லி வைப்பதன் மூலம் ஒரு தொடர்ச்சியான பணியை என்னால் செய்ய முடியாது போனாலும் எதிர்காலத்தில் இளம் சமூதாயத்தினர் இந்த ஆவணங்களை எல்லாம் தேடி எடுத்து இலங்கையினுடைய பூரணமான வரலாறு எழுதப்படுவதற்கு உதவுவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் தான் நான் இந்த ஆய்வைச் செய்தேன். இந்த ஆய்வு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரே புத்தகத்தில் மிகவும் அழகாக, தரமாக, திறமாக அச்சிடப்பட்டு நூல் வடிவு பெற்றிருக்கிறது.

இந்த நூல் பல்வேறு இடங்களிலே குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளிலே சிலபேருக்கு தமிழில் வாசித்து விளங்குவது கஸ்டமாக இருக்கும் இலங்கையிலே உள்ளவர்களுக்கு ஆங்கில மொழியிலே கஸ்டமாக இருக்கும் அதனால் இரு மொழிகளிலும் கொண்டு வந்திருக்கிறேன். நிச்சயமாக தமிழ் மக்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்த ஆய்வு முயற்சி பல மாதக் கணக்காக என்னால் மேற்கொள்ளப்பட்டது. ஆயிரக் கணக்கான டொலர்களை செலவழித்திருக்கிறேன். பலகஸ்டங்களுக்கு மத்தியில் பணி ஆற்றியிருக்கிறேன். இந்த புனிதமான நோக்கம் எங்களுடைய தமிழ் சமூகம் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். தமிழ்த் தேசிய அடையாளம் நிறுவப்படவேண்டும். நாங்கள் ஒரு தேசிய அடையாளத்தை நிறுவுவதற்கு எங்களுக்கொரு வரலாறு முக்கியம். அதை எடுத்துக் காட்டுவதற்காக - அதை மக்கள் உணர்வதற்காக - அல்லது ஏதாவது அவர்கள் அது சம்பந்தமாக செய்யவேண்டும் என்பதற்காக.

இளைய தலைமுறை குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுபவர்கள் இது குறித்து சிந்திக்க வேண்டும். தனிய மருத்துவர், இன்ஜினியர், கணினி வல்லுனர் போன்ற துறைகளில் மட்டுமல்லாமல் இவ வாறான சமூகத்திற்கு பயன்படக்கூடிய கல்விகளையும் கற்று அந்த விதமான பிரச்சனைகளை இந்த மண்ணிலே உள்ள மக்களுக்கு அரசாங்கங்களுக்கு சொல்லி எவ்வாறான தீர்வைக் கொடுக்கலாம் என்பதை இளம் தலைமுறையினர் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும்.



https://tamileelamarchive.com/

# தேனீக்களின் காட்டுக்குள் ஒரு நீண்ட இரவு



இரவில், சிலவேளைகளில் சோம்பேறித்தனமாக நட்சத்திரங்கள் பிரகாசிக்க மறுக்கும் அச்சமயங்களில் சந்திரன் சோகமாக இருக்கும். அது மெதுமெதுவாக நெருங்கி, தெளிந்த குரலில், மரக்கிளையில் குந்தியிருக்கும் ஆந்தையிடம் ஒரு கதை கூறும்படி கேட்கிறது. உடனே ஆந்தையும் தனது நண்பன் சந்திரனுக்காக மகிழ்ச்சியுடன் கதை கூறுபவனாக மாறிவிட்டது.

கிட்டத்தட்ட இன்று இரவு போல.

கேளுங்கள்!

அது நடந்து நீண்ட காலமில்லை.

தேனீக்களின் காடு குழப்பமான சூழ்நிலையில் காணப்பட்டது. காரணம் பெரிய குரங்கு கலி. அது அவர்களை ஒரு முக்கியமான கூட்டத்துக்கு அழைத்திருந்தது.

அது இவ்வாறு பேசியது.

"குரங்குகளே! நண்பக் குரங்குகளே! பல திங்கள்கள் வரிசைக்கிரமமாக வந்து போகின்றன. எனக்கும் வயதாகி விட்டது. அதனால் நான் எனது பதவியை விட்டு விலக விரும்புகிறேன்" என்றது

"ஓ! காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது" என மற்றக் குரங்குகள் கத்தினார்கள்.

"ஆம்! தோழர்களே! நீண்ட காலமாக நான் உங்களை வழி நடத்தி வருகிறேன். என் மூளை குழம்புவதற்குள் நான் ஓய்வெடுக்க விரும்புகிறேன்."

"ஓ! உன்னுடைய முடிவு சரியானது என நினைக்கிறாயா? நாங்கள் எப்பொழுதும் போல் உன்னை ஆராதிக்கின்றோம். பெரிய குரங்கே! ஒரு போதும் நீ எங்களை படுகுழியில் தள்ளமாட்டாய் என்பதை அறிவோம்."

"குரங்குகளே! நண்பக் குரங்குகளே! என்னில் கோபப் படாதீர்கள் கௌரவமாக விலகிக் கொள்ளத் தெரிய வேண்டும்."

"ஓ! பெரிய கலியே! எங்களுக்கு விளங்குகிறது. உனது முடிவு பாராட்டுக்குரியது."

"நல்லது! எனக்குப் பின் யாரை நியமிக்கலாம் என்ற எனது அபிப்பிராயத்தைக் கூறவே நான் உங்களை இங்கு அழைத்துள்ளேன்."

"ஆ! யாரது பெரிய கலி!

எங்களுக்கு அவரைத் தெரியுமா?"

"என்னுடைய நன்மதிப்புக்குரியவர்."

"ஆ! பெரிய குரங்கே! தெளிவாகக் கூறு."

அது லூக்சி (Lucci),

இருக்காது!

ஒரு மூலையில் லார்சான் (Larsen) என்ற குட்டி உய்ஸ்ரிரி முணுமுணுத்தது. எங்கள் அன்புக் கலியின் மண்டை ஏற்கனவே கழண்டிற்று போல இருக்கு.

இது எப்படி முடியும்?

லூக்சி (Lucci) ? அது ஒரு ஓடில்லாத நத்தை! என்று மற்றக் குரங்குகள் கத்தினார்கள்.

அத்துடன் என் நண்பனும் கூட, அவன் நல்ல புத்திமான், நீதி தவறாமல் நடக்கக் கூடியவன் என ஆழம் கொடுத்தார் கலி.

பெரிய குரங்கே! எங்கள் மரியாதைக்குரியவரே! இப்போதைக்குக் கொஞ்சம் நித்திரை கொள்வது நல்லது என்று கூறிவிட்டு குரங்குக் கூட்டத்தை நோக்கி இந்தோ - மலேசியக் குரங்கு இசொப்பே (Issopé) சொன்னது.

நான் நினைக்கிறேன் எங்களுக்கும் ஒரு நல்ல தூக்கம் தேவைப்படுகின்றது. எங்களைப் போலவே எங்கள் மதிப்புக்குரிய கலியும் மென்மையான, செல்ல Luna வின் மரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். அவளுடைய ஆன்மா சாந்தியடையட்டும் அன்புக் . கலியே! அவளில்லாதது எங்களுக்கும் வெறுமையாகத்தான் இருக்கிறது.


பெரிய குரங்கின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. Luna கலியின் ஒரே மகள். அவரின் கண்மணி, அவரின்



தனது கதை எரிமலை சஞ்சிகையில் பிரசுரமாகுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்திருந்தார்.

மொழியாக்கம்: கௌரி

எட்னா மறிஸ்கா மேரே அபின்டா (Edna Marysca Merey Apinda)



https://tamileelamarchive.com/

சூரியன், வாழைப் பழத்தின் தித்திப்பு. அவர் அவளை உலகத்தில் உள்ள அனைத்தையும் விட ஆழமாக நேசித்தார். துரதிஸ்டவசமாக ஒரு சாயங்காலம், கோபமான காற்று தனது ஓட்டத்தின் போது அவளது அழகிய முகத்தில் விசிறியடித்து சென்று விட்டது.

அவள் தரையில் சுருண்டு கிடந்தாள். என்றென்றைக்கும் கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய ஆன்மா சென்று 21 திங்களுக்குப் பின்னும், தேனீக்களின் காடு அவளுக்காக அழுதது.

தோழர்களே! அன்புக் குரங்குத் தோழர்களே! எனது முடிவு தீர்க்கமாக சிந்தித்து எடுக்கப்பட்டது. நான் எனது நாற்காலியை லூசிக்கே விட்டுக் கொடுப்பதென்பதில் தீர்மானமாக உள்ளேன். நான் நாளை சூரிய உதயத்தின் போதே, அவனுக்கு இந்தச் செய்தியை அறிவிக்கச் செல்கிறேன்.

தோழர்களே! என்றபடி இசொப்பே குறுக்கிடுகின்றது. எங்கள் உள்ளங்களை ஆறப்போட ஒரு இரவு இருக்கின்றது. நாங்கள் அனைவரும் நித்திரை கொள்ளச்செல்வது நல்லது. நாம் நாளை காலை இதே இடத்தில் அமைதியான சூழ்நிலையில் சந்திப்போம். அனைவருக்கும் இனிய இரவாகட்டும்.

குரங்குகள் மௌனமாகக் கலைந்து சென்றது. பெரிய குரங்கு கலியும் தனது இருப்பிடத்தைச் சென்றடைந்தது. குரங்குகள் தூங்குவதற்காக நட்சத்திரங்கள் மென்மையாகத் தாலாட்டுப் பாடின.

அந்தக் கூட்டத்தில் ஒன்று மட்டும் தூங்காமல் இருந்தது. அது வூலியா என்ற சம்போன்சே குரங்கு, அந்தக் கூட்டத்திலேயே அதிபுத்திசாலி. அவனிடம் இப்படியான பைத்தியக்காரத்தனமெல்லாம் செல்லாது. அவனால் ஒரு குரங்குக் கூட்டத்தை வழிநடத்தக் கூடிய திறமையும் தைரியமும் நிறையவே இருக்கிறது. ஆகவே இன்று இரவு தூங்கவில்லையானால் அவனை மன்னிக்கவேண்டும். அவனுக்கு தூங்குவதை விட நேரம் மிக முக்கியமானதாக இருந்தது.

நான் அந்த லுக்சியைத் தேடி குளக்கரையோரம் ஒரு சுற்று சுற்றிவிட்டு வருகிறேன். அந்த லுக்சி தன் பெரும் புத்திசாலித்தனத்தை என்னிடம் நிரூபிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதை அவன் தெளிபடுத்தும் வரைக்கும் தூங்கமாட்டேன்.

கொப்பிலிருந்து கொப்பிற்குத் தாவியபடி வூலியா காட்டின் எல்லையை அடைந்தது. அந்த இடத்தில் இடி மின்னலுடன் கூடிய மழை தான் வந்ததுக்குச் சாட்சியாக சேற்றுக் குளத்தை விட்டுச் சென்றுள்ளது.

நான் அழகு லுக்சியைத் தேடுகிறேன். நான் மகா லுக்சியைத் தேடுகிறேன். பெரிய குரங்கு கலி அவனைப் பற்றிக் கதைக்கக் கேட்டிருக்கிறேன். நான் அவனைச் சந்திக்கவும் அவனது வீரத்தை பாராட்டவும் வந்திருக்கிறேன். லுக்சி எங்கிருப்பான் என்று உங்களுக்குத் தெரியுமா? வூலியா தான் மூச்சுவாங்கிக் கொள்வதற்காக சற்று நேரம் நின்றான். அந்த அற்பப் பூச்சியை விரும்பி வெளியே வரச் செய்யச் சற்றுப் புழுக வேண்டியிருந்தது. ஓஏஏ! மகா லுக்சியை எங்கே பார்க்க முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று வற்புறுத்தினான் வூலியா.

பேசாமல் அருகே வா என்று ஒரு குரல், செம்மிருட்டில், வாசமான புல்லிலிருந்து வந்தது. வூலியா அந்த மின்மினிப்பூச்சி லில்லி சொல்வதைக் கேட்பதற்காகக் கீழே குனிந்தான். அது லுக்சி மறைந்து வாழ்கிறான் என்பதை அறிவித்தது. நாளை லுக்சியின் உயிருக்கு ஆபத்து என்று உங்கள் ஒன்று கூடலின் எதிரொலி எங்களுக்கு ஓடி வந்து சொன்னது என்று கூறியது அந்த மின்மினிப்பூச்சி.

வூலியா நிமிர்ந்தபடி கைவிரல்களை மடக்கி இறுக்கியபடி, ஆச்சரியத்துடன் அது என்ன ஆபத்து என்றான்.

மின்மினிப்பூச்சி லில்லி தொடர்ந்தது. பெரிய குரங்கு கலி தனக்குப் பின் லுக்சி தான் பதவி வகிக்க வேண்டும் என்று உங்களுக்குக் கூறியதை எதிரொலி எங்களுக்குச் சொன்னது. நீ சொல்லு எந்தக் குரங்கு தான் (நுட்பமான அறிவு படைத்த நீங்கள்) ஒரு லிமாஸ் தம்மை ஆட்சி செய்வதை ஒத்துக் கொள்ளும் சொல்லு. லுக்சிக்குத் தெரியும் உங்களில் சிலருக்கு அதுட தோலை உரிச்சு உப்புக் கண்டம் போட ஆசை என்று. அதனாலதான் எங்கள் நண்பன் லுக்சி ஒழிந்து வாழ்கிறான். என்னால இவ்வளவு தான் சொல்ல முடியும் போய் வாரும். நீ என்னுடன் பண்பாக நடந்து கொண்டாய், அன்பான குரங்கே!

அன்பான மின்மினிப்பூச்சியே நீ நல்ல அழகாக இருக்கிறாய். உனக்கு இனிய இரவாகட்டும்! என்று கூறிவிட்டு வூலியா தன் பயணத்தைத் தொடர்ந்தது.

பிறகு வூலியா நத்தை ஸ்காரைக் கண்டது. லிமாஸான (ஓடில்லாத நத்தை) லுக்சியின் நீண்ட கால நண்பன்.

குரங்கே! உனக்கு மாலை வணக்கம் என்றது. இந்தச் சுற்றுப் புறத்துக்குள் உனக்கென்ன வேலை உன் காட்டுக்குள் வாழைப்பழங்கள் தீர்ந்து விட்டதா? என மஞ்சள் சிரிப்புடன் கேட்டது ஸ்கார்.

பகிடி விடுவதை விடு நண்பனே ஸ்கார் என்றது வூலியா. நான் முக்கிய காரணமாக வந்துள்ளேன்.

ஸ்கார் குரங்கை ஒரு சந்தேகப் பார்வை பார்த்தது. மன்னிக்கவேண்டும் என்னால் உனக்கு எந்த விதத்திலும் உதவ முடியாது. லுக்சியை எனக்குக் கிட்டத்திலும் தெரியாது, தூரத்திலும் தெரியாது. போய்வருகிறேன் என்று கூறிவிட்டு ஸ்கார் தனது ஓட்டுக்குள் புகுந்து கொண்டது.

வூலியா நத்தை ஸ்காரைத் தூக்கிக்

https://tamileelamarchive.com/

குலுக்கியது. ஓடி ஒழியாதே ! நத்தையும் லிமாசும் ஒரே குலம் என்று அனைவருக்கும் தெரியும். பயந்தாங்கொள்ளியே வெளியே வா ! கொஞ்சம் முதல் தான் நீ லுக்சி உன் நண்பன் என்று சொன்னாய்.

நீங்கள் இங்கு எங்காவது லுக்சியைக் கண்டால் அவன் தோலை உரிக்கக் காத்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என்னை எவ்வளவு சித்திரவதை செய்தாலும் அவன் இந்த வெள்ளைக் கல்லுக்குக் கீழ் தான் ஒழிந்திருக்கிறான் என்று சொல்ல மாட்டேன் என்றது ஸ்கார்.

வூலியா சிரித்தபடி ஸ்காரை அதன் ஓட்டுக்குள் கிடந்து நடுங்க விட்டுவிட்டு, அந்த மகத்தான வெள்ளைக் கல்லை எடுத்தது, லுக்சி சருகுக்குக் கீழ் ஒழிந்திருப்பதை உணர்ந்தது வாயால் சருகை ஊத அது பறந்து போனது.

ஹலோ ! லுக்சி, அனைத்தையும் எனக்குக் கூறு. வழக்கமாக நல்ல புத்திசாலியான எங்கள் பெரிய கலி என்றுமில்லாத முட்டாள்தனத்துடன் உனக்கு தனது பதவியைத் தர நினைக்கும் அளவிற்கு, அப்படி என்ன சிறப்பம்சம் உன்னிடம் உள்ளது எனக் கூறு.

லுக்சி தன்னைக் காத்துக் கொள்ள முயன்றது. நான் ஒன்றும் கேக்கேல்ல, எனக்கு நித்திரை வருகுது,

என்னை நிம்மதியா விடு பாப்பம் எனக் கூறியபடி நித்தரை கொள்ள முயற்சித்தது.

ஆனால் வூலியா அதன் உணர்கொம்பில் வாயால் ஊதி நித்திரையைக் குழப்பியது.

உன்னுடன் இப்படி பண்பற்று நடப்பதற்கு மன்னித்துவிடு; விடிவதற்குள் நான் அந்த உண்மையைத் தெரிந்து கொள்வேன் என்றெனக்கு சத்தியம் செய்துள்ளேன் என்றது குரங்கு.

என்ன இரகசியத்தைப் பற்றிக் கதைக்கிறாய்?

உன்னிடம் ஏதோ இருப்பதால் தான் எங்கள் பெரிய கலி மூளை பிசகிக் குரங்குக் கூட்டத்தை ஆளும் தகமை உனக்கு உள்ளது என்று கூறியிருக்கிறார். ம் ! சொல்லு லுக்சி நான் கேட்கிறேன்.

குரங்கே ! என் நட்புக் குரங்கே ! உங்கள் பெரிய கலி என்னைப் பார்க்க வந்திருந்தார், நாங்கள் நீண்ட கால நண்பர்கள். அவர் தான் இந்த எண்ணத்தைக் கூறினார், என்னால் அதை மறுக்கத் தெரியவில்லை. நீ இதை ஏற்றுத்தான் ஆக வேண்டும், இனிய இரவாகட்டும் என்றது லுக்சி.

குரங்கு அவனது தைரியத்தைப் பார்த்துத் திகைத்து நின்றது, இருந்தும் அதனால் இந்தத் தோல்வியை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அது மீண்டும் லுக்சியின் மீது ஊதியது.

லுக்சி இருமியபடி நான் கொஞ்சம் தூங்கலாமா என்று கேட்டது.

இல்லை ! என்றது வூலியா. பெரிய கலி உன்னிடம் அளவுக்கதிகமாக நம்பிக்கை வைக்கக் காரணம் என்ன என்று சொல்லு விடுகிறேன்.

லுக்சிக்குப் பயங்கரக் கோபம் வந்தது.

நீ என்னை ஒன்றும் பயப்படுத்த முடியாது, நீ கூறாவிட்டால் உன்னை நசித்து விடுவேன் என்றது குரங்கு.

இல்லை அப்படி நினைக்காதே ! உன்னைப்போல் அழகான பெரிய குரங்கு தன் கால்களை அசிங்கப்படுத்திக் கொள்ளவா வேண்டும் எனக் கூறியது லுக்சி.

லுக்சி நல்ல தந்திரம் நிறைந்தவன் என நினைத்தான் வூலியா. லுக்சி சொன்னது சரிதான், வூலியாவிற்குத் தன் கால்களை அசிங்கப் படுத்திக் கொள்ள மனமில்லைத்தான். சிறிது மௌனம் காத்த பின், குரங்குகள் கூட்டத்தை ஒருபோதும் உன்னால் ஆளமுடியாது என்பது உனக்குத் தெரியும் தானே? உன்னைப்போல் மெதுவாக ஊரும் பசபசப்பான அசிங்கம் பிடித்த ஜந்து தம்மை வழி நடத்த எந்தக் குரங்கு விரும்பும்.

அவன் சொன்னது கொஞ்சம் கூட தன்னைக் காயப்படுத்தி விட்டதாகக் காட்டிக் கொள்ளாமல் லுக்சி பேசியது. அன்பான குரங்கே எனக்கு அலுப்பாக இருக்கிறது. இனிய இரவு என்றது.

லுக்சி அன்பான லுக்சி நீ எங்கள் கலிக்கு ஏதாவது மாயமந்திரம் செய்தாயா?

இன்னும் வேறென்ன சொல்லப் போகிறாய்? எனக்கு வேறு வேலை இல்லை? இந்த மாதிரிச் செயல்களெல்லாம் நான் செய்வதில்லை என்பதைத் தெரிந்து கொள்.

அப்ப என்ன நடந்தது என்று சொல்லு வற்புறுத்தியது குரங்கு.

லுக்சி நடந்ததைக் கூறும்முன் ஒருமுறை செருமியது.

ஒருமுறை நான் உங்கள் பெரிய கலியுடன் பந்தயம் கட்டினேன். அவர் தோற்றுவிட்டார். சொன்ன வாக்கு மாற விரும்பாத பெரிய குரங்கு பேசியபடி தனது பதவியை விட்டுத் தருகிறார். ஏனெனில் அவருக்குத் தெரியும் நான் நீங்கள் நினைப்பதை விட அதிபுத்திசாலி என்று.

வூலியாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கலியைப் போல ஒரு குரங்கு தனது பதவியை விட அப்படி என்ன முக்கியமானதிற்காகப் பந்தயம் கட்டியிருப்பார். அது என்ன பந்தயம் ம் சொல்லு லுக்சி.

உங்களுடைய கலியிடம் ஒருமுறை நான் வீடு ஒன்று கட்டப்போவதாகச் சொன்னேன். அதற்கு அவர் நீ சரியான அரங்கல் இந்த ஜென்மத்தில் வீடு கட்டமாட்டாய் என்று நக்கலடித்தார்.

அதனால் என்ன என்று அவசரப்பட்டான் வூலியா.

மெதுவாகச் செல்பவன் தான் தவறாமல் தன் இலக்கை அடைகிறான் என்று நான் சொன்னேன். வீட்டையும் கட்டினேன். எனது பொறுமையையும் விடாமுயற்சியையும் வைராக்கியத்தையும் கண்டு பெரிய கலி திகைத்தார். இந்த மாதிரியான பண்புகள் இல்லாமல் தான், தன் குரங்குகள் கூட்டம் தடுமாறுகின்றது என்று நினைத்தார்.

நீ சும்மா உளறுகிறாய், பெரிய கலி ஒருபோதும் இப்படிப் பைத்தியக் காரத்தனமாக நடக்கமாட்டார். அவர் அனைத்து மிருகங்களையும் மதிப்பவர் என்றான் வூலியா.

ஆனால் அது தான் உண்மை. அது நடந்து நீண்ட காலமாகிவிட்டது. சந்தோசமாக இரு ! ஏனெனில் நாளை நான் தான் உங்கள் காட்டுக்கு ராஜா. இனிய இரவு என்றது லுக்சி.

இந்த இரவு தான் சம்போன்சே ஆன வூலியாவின் குறுகிய வாழ்வில் நீண்ட இரவு. தூக்கத்தில் லுக்சி ஏளனமாகச் சிரிப்பது கேட்டது. அந்தச் சிரிப்பு, ஒரு நத்தை தம்மை ஆளும் அளவிற்கு முட்டாள்களாக இருக்கிறார்களே இந்தக் குரங்குகள் என்று நக்கலடிப்பது போல் உணர்ந்தான் லுக்சியின் சிரிப்பு காதுகளைத் துளைப்பது போலிருந்தது. எங்கள் அப்பாவிக் குரங்கு வூலியா தன் பலம் எல்லாம் சேர்த்துக் கத்தியது. இல்லை................ இது ஒருபோதும் நடக்காது.

ம் பிறகு ! கதையின் முடிவைத் தெரிந்து கொள்ள அவசரப்படுத்தியது சந்திரன். ஆந்தை சிரித்தபடி சொன்னது · வூலியா கனவு தான் கண்டான் ஒரு கெட்ட கனவு என்றது. குரங்குகள் கூட்டத்துக்குத் தலைவனாக இந்த லிமாஸ் ஒரு போதும் வரமுடியாது. ஆனால் இது எங்கள் சம்போன்சேக்கு ஒரு நல்ல பாடம். அந்த இரவிற்குப் பின் வூலியா மற்ற மிருகங்களை மதிக்கப் பழகிக் கொண்டது. தான் பெரியவன் என்ற காரணத்தால் சிறியவர்களிடம் எடுத்ததெற்கெல்லாம் தன் பலத்தைக் காட்டாமல் இருக்கப் பழகிக் கொண்டான் வூலியா.

■

https://tamileelamarchive.com/



# சீனத்துக் கவிதைகள்...

## சுய ஓவியம்

யாங் ஷான்


ஓவியர்களே, என் ஓவியத்தை
வரையாதிருப்பீர்களாக
நான் நானாகவே உள்ளேன்.

நான் துயரம் உள்ள மனிதன்,
நான் மகிழ்வு நிறைந்த மனிதன்,
மகிழ்வின்றி நான் இல்லை.

மூடர்களால் நான்
இம்சிக்கப்பட்ட போதிலும்
எவரையும் நான்
அவமதித்ததேயில்லை
நான் வாழ்கிறேன்,
நான் பணிசெய்கிறேன்.

என்முகம் அவலட்சணமானது,
என் தோல் சுருக்கங்களில்
காலத்தின் அழகு பிரதிபலிக்கின்றது.

வசந்தத் தென்றலில்
புல் போல எனது கேசம்,
தயைகூர்ந்து என் விழிகளில் பாருங்கள்
நம்பிக்கைச் சுவாலைகள்
ஒளிர்வதைக் காணுங்கள்



## சந்திப்பு

சென் சுனாங்

மழையினால் ஒதுக்கிடம் தேடியபோது
நாம் வனத்திலே சந்தித்தோம்,
நீயோ உன் உற்சாகம் நிறைந்த
மனைவி சகிதம் நின்றபோதிலும்.

பத்துவருட மாயை
பாழடைந்தது ஒரு கணத்தில்;
பத்து வருடக் காத்திருப்பு
இழந்தது அதன் அர்த்தத்தை.

என் உதடுகளை அழுத்தி
மென்னகை செய்தேன்;
கண்ணிர் என் முகத்தில்
வழிந்திருக்க வேண்டும்.

உன் மனைவியின்
ஆச்சரியம் கண்டு
என் முகத்தைத் துடைத்து
“ஓ, இந்த மழை” என்றேன்.



https://tamileelamarchive.com/

## ஞாபகம்

யாங் ஷான்

அவன் நீ வேண்டாத வேளையில்,
உன்னிடம் வந்து உன்னைப் பற்றிக் கொள்கிறான் ;
சில சமயங்களில் உன்னைப்
புளகாங்கிதமாக்குகிறான் ;
சில சமயங்களில் புண்படச்செய்கிறான்

மனித வாழ்வின் தியாகங்கள் பற்றி
அவன் உனக்குக் கூறக்கூடும்;
முத்தாரங்களையும் மலர்க் கொத்துகளையும்
வீரர்களுக்கு அவன் வழங்குகிறான்.

அவன் முன்னிலையில் நீ நாணப்படாதிருப்பின்
இளமை என்றும் உன்னுடன் தங்கும்;
அவன் முன்னிலையில் நீ நெட்டுயிர்க்காவிடின்
ஆனந்தத்தின் மர்மத்தை அறிந்து கொள்வாய்.

நாளும் பொழுதும் அவனுக்கு
நாம் பிரியாவிடை பகர்கிறோம்
இன்றெனக் காண்பது
நாளை இறந்தகாலமாகிறது.
அர்ப்பணிக்கப்பட்ட உங்கள் பாதச் சுவடுகளை
விட்டுச் செல்லுங்கள்,
உங்கள் ஞாபகமாய்ப் பாடலிசைக்க
அவன் வந்துள்ளான்.

## விளக்கு

யாங் ஷான்

உதயவேளையில் சாளரம் அருகில்
ஓர் ஒளிர், விளக்கு

அதன் சுவாலைகள்
செம்முகில்களை சூடாக்க
இரவு கலைகிறது

தாழ்ந்த குரலில்
விளக்கிற்குக் கூறுகிறேன்;
நீயோ விலகுகின்றாய்
தற்போது எதிருள்ள வீதியை
எம்மால் காணமுடிகிறது

முகில் முறுவலுடன் கூறுகிறது:
தயைகூர்ந்து எனக்காக வருந்தாதிருப்பாய்
எனது வழ்வின் ஒளி
பகற் பொழுதினுள் ஏலவே கரைந்துவிட்டது.

## இரவில் இசைத்த மூங்கிற் புல்லாங்குழல்

ஷாங் ஷிமின்

சலசலத்துப் பாயும் நீரோடையின்
சங்கீத முணுமுணுப்பல்ல அது,
மூங்கிற் புல்லாங்குழலிலிருந்து பிறக்கும்
இனிய கீதம் அது.

வத்தகைப் பழ வயல்களில்
இரவுக்காவலாளியின் குடிலிலிருந்து
ஒலிக்கிறது அவ்வோசை.

அவ்வாலிபன் இன்னுமேன் உறங்கவில்லை
அவன் யாருக்காக புல்லாங்குழல் இசைக்கின்றான்?

சபலம் வேண்டாம்,
சபை ஒன்று அங்கே உண்டு

என் கூற்றில் நம்பிக்கையில்லை எனின்,
யூயிங்கைத் தேடிப் பாருங்கள்,
'நட்சத்திரங்களை எண்ணியபடி'
வாயிலில் அவள் அமர்ந்திருப்பது காணுங்கள்.

## முத்தம்

யாங் ஷான்

மதலை ஒன்றின் உரோசாக் கன்னங்கள் மீது
பதிந்துள்ள ஒரு அன்னையின்
மென்மையான முத்தத்தை
நான் நேசிக்கின்றேன்
புலரும் பொழுதினூடாகத் தோன்றும்
இனிய புன்னகை
மதலையின் மலரும் விழிகளுக்கு
ஒளியூட்டுகிறது.

கொடுங்காற்றோ புயலோ
இத்தூய்மையைக் கெடுத்துவிட முடியாது;
தன்னலங்கருதா இவ்வன்பை
கடுங்குளிரும் தடுத்துவிட முடியாது.

வாழ்வென்ற வெளிதனில்
உலாவும் வேளைகளில்
இதமான இம்முத்தத்தை யான்
பல தடவை சிந்திக்கின்றேன்
அறிமுகமற்ற தோழர்களே
யான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்
அம்முதல் முத்தம் போல
எம் வாழ்வு தூய்மையானதாக முடியுமா?

https://tamileelamarchive.com/

மணலாறு விஜயன்




## மௌனப் புதைகுழிகள்

# வீரமுனைப் படுகொலை

வரலாற்றுக்கு முந்திய நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்த வீரமுனை எனும் தமிழ்கிராமம் இன்று அந்த மக்களிடமிருந்து பறிக்கப் பட்டுவிட்டது. 1945ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டுவரை சிங்கள இராணு வத்தினராலும் முஸ்லீம்களாலும் தொடர் தாக்குதலுக்குள்ளாகி ஆக்கிரமித்து அழிக்கப்பட்டுவிட்டது. 1945ம் ஆண்டு முஸ்லீம் காடையர்கள் இவ்வழகிய கிராமத்தை இரத்தக் களறியாக்கினார்கள். வாள் வெட்டுக்கும், கத்தி வெட்டுக் கும் அஞ்சிய தமிழ்க்குடும்பங்கள் வீரச்சோலை வளதாப்பிட்டிய, மல்லிகைத் தீவு, மல்வத்தை போன்ற கிராமங்களில் வாழத்தலைப்பட்டனர்.

1945ம் ஆண்டிற்குப் பின்னர் ஏறக்குறைய முப்பத்தியாறு ஆண்டுகள் வீரமுனைக்கு வருவதும் தப்பி ஓடுவதுமாய் துன்பத்தையே சுமந்தனர். கொண்டவெட்டுவான் இரானுவ முகாமும் இக்கிராமத்தைச் சூழ இருந்த முஸ்லீம் கிராமங்களும் தமிழர்களை இங்கிருந்து அகற்றிவிடவேண்டுமென்ற திடமானமுடிவுடன் செயற்பட்டனர். 1990ம் ஆண்டு ஆனி மாதமும் ஆடி மாதமும் இனி மேல் அங்கே தமிழ் மக்கள் வாழவோ காலடிவைக்கவோ முடியாதென்ற நிலையை உருவாக்கியது. ஆனிமாதம் 20ம் திகதி வீரமுனை, வளத்தாப்பிட்டிய வீரஞ்சோலைக் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டன. கொண்ட வெட்டுவான் இராணுவமுகாமிலிருந்து வந்த இராணுவத்தினரும் அவர்களோடு இணைந்துவந்த முஸ்லீம் காடையர்களும் மக்களெல் லோரையும் வீரமுனைக் கோயிலடிக்கு செல்லுமாறு கட்டளையிட்டனர்.

ஒருசில நாட்களின் முன் கல்முனையில் தமிழர்கள் கொல்லப்பட்டதை யறிந்த மக்கள் அச்சத்துடன் ஆலயத்தில் ஒன்று கூடினர். ஆலயத்தில் வைத்தே கொல்வதற்குரியவர்களைத் தெரிவு செய்தார்கள். தட்டிக்கேட்க யாருமில்லை. முதற்கட்டமாக ஐம்பத்தியாறு ஆண்கள் தெரிவு செய்து எடுக்கப்பட்டனர். மரணக் குழிநோக்கி அவர்கள் தள்ளிக் கொல்லப்பட்டார்கள். கட்டிய மனைவி மாரும், பெற்ற தாய்மாரும் கதறி அழுதார்கள். கையெடுத்து கும்பிட்டார்கள். தாலிப்பிச்சைக் கேட்டுக் காலடியில் விழுந்தார்கள். கொலை வெறியோடு வந்தவர்கள் எக்காளமிட்டுச் சிரித்தார்கள். எங்கள் மக்களின் கண்ணீரும் வேண்டுதலும் அவர்களுக்கு கேளிக்கையாக மாறியது.

சம்மாந்துறை மலைக்காட்டிற்குள் தீ பற்றி எரிந்தது. முப்பத்தியேழு பேரையும் சுட்டுச்சுட்டு நெருப்புக்குள் தூக்கி வீசினார்கள். இராணுவத்தினரின் இச்செயலினை சுற்றிநின்ற முஸ்லீம் காடையர் கைதட்டி மகிழ்ந்தார்கள். எமது மக்களின் வாழ்வும் வளமும் பற்றி எரிந்தது. வாய்விட்டுச் சொல்ல முடியாத எங்களுறவுகளுக்காக குரல் கொடுக்க யாரும் இருக்கவில்லை.

காலையில் கைதுசெய்து சென்றவர்களை சுட்டுப்பொசுக்கியபோதும் இராணுவத்தினரின் கொலைப்பசி மாறவில்லை. ஒரு வாரம் கூட மறைய வில்லை. 29ம் திகதி மீண்டும் கைது. எச்சஞ்சொச்சமாயிருந்த ஆண்களில் ஐம்பத்தியாறுபேரைத் துப்பாக்கிமுனையில் தள்ளிச்சென்றார்கள். கொண்டைவெட்டு வானில் பெரு நெருப்பெரிந்தது. சுட்டுச்சுட்டு நெருப்புக்குள் எறியப்பட்டார்கள். சொல் லியழ வார்த்தைகளின்றி கையிற் தூக்கிய பொருட்களோடு காரைத்தீவிற்குத் தப்பி யோடினார்கள். காரை தீவுப் பாடசாலை அகதிமுகாமாகியது. சொந்த மண்ணிலேயே எமது மக்கள் அகதியாக்கப்பட்டார்கள். அகதி வாழ்வோடு விட்டிருந்தால் கூடப் பறவாயில்லை. அகதிமுகாமையும் கொலை முகாமாக சிங்கள இராணுவத்தினர் மாற்றி னார்கள்.

தமிழ் மாணவர்களின் கல்விக்கூடம் கொலைக்கூடமாக்கப்பட்டது. ஆட்டுப்பண் ணைகளில் இறைச்சிக்குத் தெரிவாகிய கிடாய்போல அகதிமுகாமில் வைத்துக் கொலை செய்வதற்குரிய ஆண்களைத் தெரிந்தெடுத்தார்கள். இம்முறை காரைத்தீவு விசேட அதிரடிப் படையினர் தங்கள் கைவரி சையினைக் காட்டினார்கள். ஒரு மாதங்கூட மறையவில்லை ஆடிமாதம் 4ம் திகதி காரைதீவு அகதிமுகாமில் அழுகுரல் ஓங்கி ஒலித்தது. முதற் தெரிவில் பன்னிரெண்டு ஆண்கள் கைது செய்யப்பட்டனர். ஓரிருநாள் கழித்து படை முகாமுக்குச் சென்ற தாய் மாருக்கு படையினர் கொடுத்த பதில் விசித் திரமானது. 'உங்கட ஆக்கள நாங்க கொண்டு வரல்ல ஆக்கள் இனம் தெரி யாதவர்களால் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று பதிவு செய்துவிட்டு கச்சேரியில காசு எடுங்க'.

பாடசாலையிலிருந்த அகதிமுகாமுக் குள் மீண்டும் 10ம் திகதி விசேட அதிரடிப் படையினர் புகுந்தனர். பதினொரு ஆண்கள் பிடிக்கப்பட்டனர். எஞ்சியிருந்த ஆண்கள் இவ்வளவுதான். எச்சசொச்சமின்றி எல்லோ ரையுமே கொண்டுபோய் சுட்டுவிட்டு எரித் தார்கள். வீரமுனைக்கிராமத்து மக்கள் எங் கிருந்தாலும் அவர்களைக்கொன்றொழித்து விடுவதென்று சிங்களப்படையினர் முடி வெடுத்து விட்டனர். 1990ம் ஆண்டு ஆடி மாதம் கணவன்மாரைப் பறி கொடுத்த

https://tamileelamarchive.com/

துயரோடு காரைதீவு அகதிமுகாமிலிருந்து தமது கிராமத்துக்கு திரும்பினார்கள். யாரை ப்பறிகொடுக்கக் கூடாதென்று காரைதீவுக்கு ஓடினார்களோ அவர்களைக் காரைதீவில் பறிகொடுத்துவிட்டதால் இனிமேல் எது நடந்தால் என்ன என்ற விரக்தியோடு திரும்பி னார்கள். வரும் வழியில் மல்வத்தை இரா ணுவ முகாமிலிருந்த ராணுவத்தினர் தமது கொலைப்பசியையும் தீர்க்க விரும்பினர். நடந்துவந்தவர்களில் எட்டுப்பேரைப் பிடித் திழுத்துச் சென்றனர். பசிதீரும் வரை மாறி மாறி குதறினார்கள். கடைசி மூச்சு அடங்கும் வரை மிருகத்தனமாக பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்தினார்கள். பிணமாகிப் போனதும் கிண்டிப் புதைத்தார்கள்.

26ம் திகதி கொண்ட வெட்டுவான் படை முகாமிலிருந்து வந்த படையினர் மல்வத்தை வீரமுனை கலைதிபுரம் புதுநகர் கிராமங் களிலிருந்து எட்டுப்பேரை கைது செய்து சென்றார்கள். இன்றுவரை அவர்களின் கதை யில்லை மரண அத்தாட்சிக்கு இராணு வத்தினர் கிராமசேவகர்களுக்கு அனுமதி வழங்கிய போதுதான் முடிந்துபோன இவர் களின் கதையும் தெரியவந்தது.

ஆனி மாதம் ஆரம்பித்த இன அழிப்பு ஆடி மாதமும் தொடர்ந்து. ஆவணிமாதத் தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஆவணி மாதம் 8ம் திகதி சிங்களப் படையினருடன் இனைந்து வந்த சிங்கள ஊர்காவட்படை யினரும் முஸ்லீம் ஊர்காவற்படையினரும எங்களாலும் தமிழர்களை கொல்ல முடியு மென்பதைக் காட்டினார்கள். ஓடி ஒழிந்து வாழ்ந்த ஆண்களில் எட்டுப்பேரினைக் கைதுசெய்து கண்டதுண்டமாக வெட்டிக் கிணற்றில் போட்டார்கள். வீரமுனையிலோ வளத்தாப்பிட்டியிலோ அல்லது மல்வத்தை யிலோ இனிமேல் வாழமுடியாது எனக் கருதிய எமது மக்கள் மண்டூருக்குச் சென்று வாழவிரும்பி கையிற்தூக்கிய பொருட் களோடு நடந்தார்கள். 11ம் திகதி சவளைக் கடை இராணுவ முகாமில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். வீதியில் முகாமுக்கு முன்னால் வைத்தே பதினெட்டுப்பேரை வெட்டிக்கொன்றார்கள். தப்பி ஓடிய மக்கள் மீண்டும் தங்கள் கிராமத்துக்கே வந்து சேர்ந் தனர். சவளைக்கடை இராணுவத்தினரும் தமிழர்களைக் கொல்வதில் தாங்களும் சளைத்தவர்களல்ல என்பதைக் காட்டினார் கள்.

புதைகுழிகளைத் தோண்டட்டும். அதற்கு பின்னர் சிறு வயதில் நாங்கள் ஆயு தம் தூக்க வேண்டிவந்ததற்கான தீர்ப்பை சட்டப் புத்தகத்தில் தேடட்டும். என அந்த போராளி நீதிக்கான போரின் பக்கமொன்றை புரட்டி வைத்தான்.

அனாதைகளாய் ஆதரவின்றி ஓடிவந்த மக்களை கொண்டவெட்டுவான் படையினர் விட்டு வைக்கவில்லை 12ம் திகதியே இக் கிராமங்களுக்குள் புகுந்தார்கள். முஸ்லீம் காடையர்களும் துணைக்கு வந்தனர். வீடு கள் தீயிடப்பட்டன. சொத்துக்கள் சூறை யாடப்பட்டன எரியும் நெருப்பில் உயிருட னேயே எமது உறவுகள் தூக்கி வீசப்பட் டனர். தப்பி ஓடியவர்கள் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகினர். இருபத்தைந்துபேர் இக் கொடிய கொலைவலைக்குள் சிக்கி மடிந்த னர்.

காயங்களோடு அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முப்பது பேரைக் கூட இராணுவத்தினர் விடவில்லை. வைத்தியசாலையை 12ம் திகதி சுற்றி வளைத்து காயமுற்று படுக்கையிலிருந்த அத்தனை பேரையும் தூக்கி ஏற்றிச் சென்று கொன்றனர். நாட்கணக்கில் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் தொடர்ச்சியாக நடந்து முடிந்த வீரமுனைக் கிராமமக்களின் துயரக் கதைக்கு நீதி யார் தருவது ஓடி ஓடி தப்பி கொண்ட பதினைந்துக்கு மேற்பட்ட இளை ஞர்கள் தர்மயுத்தத்திற்காய் களம்புகுந்தனர். களத்தில் போராடிக்கொண்டிருக்கும் மருத் துவப்போராளி கிருஸ்ணபிள்ளை நித்தியா னந்தன் தன் மனதில் உறைந்துகிடந்த பிறந்த மண்ணின் கறைபடிந்த நாட்களை பகிர்ந்து கொண்டார். 'இளம் வயதில் நாங் கள் ஏன் துப்பாக்கி ஏந்தினோம் என்பது மனித உரிமை அமைப்புகளுக்கு விளங் காது. விளக்கவும் முடியாது. அவர்களுக்கு தெரிவது சிங்களவர் உயிரே ஒழிய தமிழர் உயிர்களல்ல. இவர்கள் முதலில் இந்தக் கொலைகளை ஆராயட்டும் பதினொரு ஆண்டுகளாய் போர்க்களம் கண்டு நிற்கும் அந்த இளைஞனிடம் தனது கிராமத்தை மீட்கமுடியுமென்ற நம்பிக்கை பிரகாசமாய்த் தெரிந்தது.





https://tamileelamarchive.com/

சித்திரா-சுதாகரன்

# கிருஷ்ணார்ப்பணம்

புகையிரதம் தடதடத்து ஓடிக்கொண்டிருந்தது. பரிசில் ஓடுகின்ற புகையிரதங்கள் அலுங்காமல் குலுங்காமல் ஓடினாலும், பரிசைத் தாண்டி 'மோ' என்ற ஊருக்கு ஓடும் இந்த வெள்ளி நிறப் புகையிரதம், எங்கள் ஊர் றெயின்கள் மாதிரித்தான் தடதடத்துக்கொண்டு ஓடும். புகையிரதத்தைவிட என் மனது வேகமாயப் படபடத்து ஓடிக்கொண்டிருந்தது. துக்கமா, சந்தோசமா, எதிர்பார்ப்பா, ஏமாற்றமா? என்னவென்று விளங்காத ஒரு மனநிலையில் எனது மண்டைக்குள்ளும் ஒரு றெயின் ஓடிக்கொண்டிருந்தது.

'மச்சான் வந்து சேந்திற்றன்.'



என்றுதான் மொகனிடமிருந்து ரெலிபோன் வருமென எதிர்பார்த்திருந்த எனக்கு, 'திரும்பி வந்திற்றன் 'மோ' வில அக்கா வீட்டில நிக்கிறன் நாளைக்கு வாவன் நான் பட்ட சீர்கேட்டச் சொல்லுறன்.' என்று அவன் இரவு ரெலிபோனில் சொல்லும்போதே மண்டைக்குள் றெயின் இஞ்சின் ஸ்ராட் பண்ணியிற்றுது.

பரிசுக்கு வந்து விசாவுக்கலைஞ்சு, வேலைக்கலைஞ்சு, றூமுக்கலைஞ்சு எல்லா அலைச்சலும் முடிஞ்சு எனக்கெண்டொரு 'ஒரு அறை அப்பாட்மென்ற் ' எடுத்து செற்றிலான பிறகுதான் நிம்மதியாய் மூச்சு விட முடிஞ்சுது. உலகின் நாகரீக நகரத்தையும், அதன் அழகையும் ரசிக்க முடிஞ்சுது. எண்டாலும் என்ர உழைப்புக்கும், எனக்கிருக்கிற பொறுப்புக்கும், என்ர செலவுகளுக்கும் ஒத்து வருவதாயில்லை. எனவே என்ர றூமில இன்னொரு ஆளையும் சமறிக்கு இருத்திறதுதான் சரியாய் வரும் எண்ட முடிவுக்கு வந்தன். ஆனாலும் சிநேகமாய், கலகலப்பாய் என்னோட ஒத்துப்பொற மாதிரி பாட்னர் அமைய வேணுமே என்ற கவலையும் எழுந்தது. அப்பதான் லாச்சப்பல் கடைவீதியில் என் நண்பனோடு நண்பனின் உறவினனாய் மோகன் அறிமுகமானான்.

ஒரு 'பிளேன்ரீ' குடிக்கிற நேரத்தில சிநேகமாய் கலகலப்பாய் எனக்குப் பிடித்தவன் ஆனான். 'தம்பி ஆராவது நல்ல பெடியன் இருந்தால் சொல்லும் என்ர றூமுக்கு ஒரு ஆள் தேவைப் படுகுது.' 'அண்ண நானும் றூம் தேடிக் கொண்டுதான் இருக்கிறன்.' அடுத்த கிழமையே மோகன் என்ர றூமில ஐக்கியமானான். அவனுக்கு விசா இல்ல. எங்கேயோ களவாய் நாலு மணிநேர வேலைசெய்தான். றூமுக்கு வந்ததும் அவன் செய்த முதல் வேலை, தேவையான எல்லாச்சாமான்களும் (நெருப்புப் பெட்டியில இருந்து கொம்பியூட்டர்வரை)வாங்கிப்போட்டு ஸ்ரோர் றூமாய் வச்சிருந்த என்ர அப்பாட்மென்ரை அழகாக அடுக்கி 'இருவர் வாழும் இல்லம் ' ஆக்கினான்.

வேலை முடிஞ்சு நேர வீட்ட வர விசராயிருக்கும் முந்தி, இப்ப என்ர வீட்டில இருக்க ஆசையாய் இருக்கும். மெல்ல மெல்ல கடைக்கு, மாக்கெற்றுக்குப் போறது, வீட்டுச்சாமான் வாங்கிறதிலயிருந்து ரெலிபோன்பில் கரண்ட்பில் கட்டிறதுவரை அவற்ற கவனத்துக்கு வந்திற்றுது. இருநூறு ஈறோ

https://tamileelamarchive.com/

தாறதாய் சமறிக்கு வந்தவரிட்ட இப்ப நான் அறுநூறு ஈறோ குடுத்து சமறிக்கு இருக்குமாப்போல நிலமை மாறியிற்றுது. எண்டாலும் வீடு பற்றிய சுமையைக் குறையச் செய்திருந்தான்.
அவனையொரு நல்ல நிர்வாகியாகக் கண்டு கொண்டேன். அஞ்சரைக்கு வேலைக்கு இறங்க நாலரைக்கு எலாம் வைப்பான். ஆனால் ஒருநாளும் அவன்ர எலாம் அடிச்சதில்லை. அதுக்கு முதலே எழும்பி எலாம் நிப்பாட்டியிருப்பான் கேட்டால், 'எலாம் ஒரு பாதுகாப்புக்குத்தான். கறைக்ரா ஆறுமணித்தியாலம் நித்திரை கொண்டால் எலாம் இல்லாமலே எழும்பலாம் ' என்பான். நான் இரவிரவாய் ரீவி பாத்திற்று அஞ்சுமணிக்கு எலாம் வச்சிற்றுப் படுத்தால் அது அலறியடிச்சாலும் தலையில தட்டியிற்றுத் திரும்பிப் படுத்திருவன். அஞ்சரைக்கு அவன் இறங்கேக்க தலைமாட்டில ரீ வச்சிற்று என்ர தலையில தட்டியிற்றுப் போவான். அடிச்சுப் பிடிச்சு எழும்பி ஆறு மணி றெயின் பிடிக்க ஓடுவன்.
அப்பயெல்லாம் ஊரில அஞ்சு மணிக்கு ரியூசனுக்குப் போற அண்ணர் தலையில தட்டியெழுப்பியிற்றுப் போறது ஞாபகம் வரும். சனி ஞாயிறு என்ர சமையல் மிச்ச நாள் அவற்ற பொறுப்பு. எனக்கு கோழிக்குழம்பும் கீரைக்கறியும்தான் தெரிஞ்ச சமையல். ஆனால் அவன் விதவிதமாய்ச் சமைப்பான். அதுவும் வயித்தில பிரச்சினையெண்டால் மல்லிரசம், வாய்வுப்பிரச்சினையெண்டால் உள்ளிக்குழம்பு எண்டு அம்மாமார் மாதிரிச் சமைப்பான்.
'எப்பிடியெடாப்பா?' 'இன்றெஸ்ற் இருந்தால் எல்லாம் செய்யலாம். எங்கிட அம்மா இப்பிடித்தான் எல்லாம் பாத்துப் பாத்துச் செய்வா. அவவுக்கு இதையெல்லாத்தையும் திருப்பிச் செய்யவேணும் எண்டு எனக்காசை ஆனால் இப்ப ஏலாது. சரி அம்பிட்ட ஆளுக்குச் செய்வம் எண்டுதான்.'

கனநாளைக்குப் பிறகு என்னை லாச்சப்பலில் கண்ட வேறொரு நண்பன் கேட்டான். 'என்னடாப்பா மனுசி வந்திற்றுப்போல காப்புக்கைச் சாப்பாடாக்கும் உடம்பெல்லாம் மினுமினுக்குது.' எனக்கு உடுப்புத்தோய்க்கிறது அயன்பண்ணிறதெண்டால் சரியான பஞ்சி. மெசினில உடுப்புத் தோச்சாலும் வேலைக்குப் போடிற வெள்ளச் சேட்டுகளைக் கையாலதான் தோய்க்கவேணும்.
ஞாயிற்றுக்கிழமைகளில நான் தோச்சு அயன் பண்ணினாலும், ஆத்திர அவசரத்துக்கு அவன் குளிக்கும்போதோ அயன்பண்ணும்போதோ என்ர ரெண்டு உருப்படிய அவனுக்குத் தெரியாமல் தள்ளி விடுவன். அவன் கண்டும் காணாத மாதிரி ஒரு புன்முறுவல் செய்வான். அம்மம்மா குளிக்கும்போதோ தங்கச்சி அயன்பண்ணும்போதொ என்ர பள்ளிக்கூட யூனிபோமைத் தள்ளி விடுவது தானாய் ஞாபகத்துக்கு வரும். இப்பிடி இழந்து போன சொந்தங்களை ஞாபகப்படுத்தும் 'பல இன் வண் ' ஆய் அவனிருக்க உண்மையிலேயே என் வாழ்க்கை நிறைவாய் இருந்தது. இது நிரந்தரமற்றது ஒரு நாள் பிரிய வேண்டியதுதான் உண்மையென்பது எனக்குத் தோன்றவில்லை. ஆனால் பிரிவு வந்தது. விசா இல்லாதவனுக்கு கனடாவில் இருக்கிற மச்சாளைக் கலியாணம் பேச, இவன் களவாய்ப் புறப்பட்டான். மகிழ்ச்சியாய் மனசார வாழ்த்தி வழியனுப்பியிற்று வந்தன். வந்தபிறகுதான் பிரிவு தெரிஞ்சுது. மெல்ல மெல்ல வீடு ஸ்ரோர்றூமாய் மாறத்தொடங்கிச்சுது. வீடு அவனுக்காய்த் தவிச்சுது. நாளுக்குப் பன்ரெண்டு மணிநேரம் வேலைசெய்யிற என்னால வீட்டை அவனைப்போல் கவனிக்க முடியேல்ல. அவனைப்போல கடைகடையாய் ஏறியிறங்கிச் சாமான்வாங்காமல் அம்பிட்ட கடையில் சாமான்வாங்க செலவு கூடிச்சுது. பில்லுகள் கட்டாமல் பைனுகள்வந்தது. ஒழுங்கான சாப்பாட்டுக்கு நாக்கு ஏங்க லாச்சப்பலிலேயே சாப்பாடு என்றாகிவிட்டது. எலாமுக்கு சரியாய் எழும்பாமல் வேலைக்கு லேற்றாய்ப்போய் பேச்சு வேண்டவேண்டியிருந்தது. எல்லாத்தையும்விட அவன்ர பகிடியளும் கலகலப்பும் இல்லாமல் எனக்குத் தனிமை விளங்கியது. வாழ்க்கை கசக்கத் தொடங்கியது. அவன் இல்லை வரமாட்டான். இனி எனக்கு எல்லாம் நான்தான் அவனுக்கும் எனக்குமான உறவு இனி ரெலிபோனில் மட்டும்தான். சிலவேளை பலவருடங்கள் கடந்தபிறகு ரெண்டு கிழமை ஓய்வில் விருந்தாளியாய்த்தான் வரலாம். என்ற உண்மையை நான் விளங்கிக்கொள்ள வும் என்மனம் ஏற்றுக் கொள்ளவும் சில மாதங்கள் தேவைப்பட்டது. அவை மிக வேதனையான சோதனையான நாட்கள். செத்தவீட்டார் சோகத்திலிருந்து மீள்வது போல மெல்ல மீண்டு வந்தேன் . இப்ப சமறிக்கு புது ஆள். அம்பது வயது ஐயா. சொந்தக்காரனும் வருத்தக்காரனும்கூட. அவற்ற குறட்டைக்குள்ளால நித்திரை கொள்ள வேணும் வீடு துப்பரவில்லாட்டி அவருக்குப் பிடியாது . ஏசுவார். ஆனால் துப்பரவாக்க மாட்டார். இப்ப நான் வீட்ட நீற்றாய் வச்சிருக்கப் பழகியிற்றன். 'ஒரு ரெசம் குடிச்சா நல்லா இருக்கும். வாய் நமநமக்குது அரச்ச மீன்குழம்பு சாப்பிட்டால் அந்த மாதிரியிருக்கும்.' மோகனிட்டப் பழகினதை ஐயாவிட்டப் பிரயோகிப்பன். இப்பிடியே வாழ்க்கை சீருக்கு வந்தது.

ஆனால் கனடாவுக்கு வெளிக்கிட்ட மோகன் இன்னும் போய் சேர இல்லை. ஒரு வருசத்துக்கு மேலாய் ஏதோ ஒரு நாட்டில நிக்கிறான். என்ற தகவல் மட்டும் 'மோ' வில இருக்கிற அக்காவின் மூலம் எனக்குக் கிடைச்சிருந்தது. ஒண்டரை வருசத்துக்குப் பிறகு இரவுதான் அவன்ர போன் வந்தது. சுகவீனமெனப் பொய் சொல்லி லீவெடுத்து 'மோ' வுக்கு வெளிக்கிட்டன். அவன்ர மனுசியோட, ரெண்டு பிள்ளையளோடதான் அவனைப்பாக்கத் தயார்ப்படுத்தியிருந்த என்ர மனதுக்கு பயணத் தோல்வியோட வந்தவனைப் பாக்கப்போறது பெருங் கஸ்ரமாய்த்தான் இருந்தது. இனி இல்லை வரமாட்டான் எண்டு அழுது ஆறித்தேறியிருந்த எனக்கு அவனின் வருகை ஏற்றுக்கொள்ள முடியாததாய் இருந்தது. செத்த ஆள்த்திரும்பி வந்த மாதிரியான உணர்வுதான் எனக்குள்ள ஓடிக்கொண்டிருந்தது. அப்ப மண்டைக்க றெயின்ஓடாமல் என்ன செய்யும். அக்காவீட்டு மணியை அழுத்த அவன்தான் வந்து கதவு திறந்தான். மெலிஞ்சு கறுத்து விநோதமான ரைப்பில தாடியெல்லாம் வச்சு, ஒரு பெரிய சோக வெள்ளத்தில மூழ்கியெழும்பி வந்தது ஆளைப் பாக்கவேதெரிஞ்சுது. வழமைமாதிரி இல்லாமல் அமைதியாய் இருந்தான். முன்னெப்போதும் எற்படாத ஒரு மௌனச் சூழல் நிலவியது. அவன் மௌனத்தைக் கலைத்தான்.
'என்னடாப்பா 'கிருஷ்ணார்ப்பணம் ' எண்டு தலை முழுகிற்றியோ?' அவன் கேட்டது எனக்கு விளங்கயில்ல. மெல்லிய புன்முறுவலுடன் தொடர்ந்தான். 'இப்பயும் இந்தியாவில இருக்கிற ஐயங்கார்கள் ஆராவது இறந்ததாய்க் கேள்விப் பட்டு அவைக்கு கிரியை செய்து கிருஷ்ணார்ப்பணம் எண்டு தர்ப்பணம் பண்ணினாப்பிறகு, சில வேளை அந்தாள் உயிரோட திரும்பி வந்தாலும் அது புருசனாயிருந்தாலென்ன பிள்ளையாயிருந்தாலென்ன திரும்ப வீட்டுக்குள்ள சேர்க்க மாட்டினமாம் அதமாதிரி நீயும்....' அடக்கமாட்டாமல் அவனக் கட்டிப்பிடிச்சு அழுதன். என்ர மனதில இருந்தத அப்பிடியே விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல நண்பன் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருந்தான் அவன். ■

https://tamileelamarchive.com/

எ.ஜோய்

# உயிர்ப்புள்ள தேசம்



அலையில் கரையும்
உப்பின் நெடியாய்
என்னில் கரைந்து
என்னைத் தொலைத்த
என் சகியே
ஒன்றாய்க் கலந்து
இருவர் ஒருவராகி
உயிராய் வாழ்ந்தோம்
வா
ஒன்றாய் இணைந்தே
கண்ணீர் கோர்ப்போம்.

எரியும் எம் தேசத்தில்
தணல் எடுத்து
மரத்துப் போன
எம் கூடுகளுக்கு
சிதை மூட்டுவோம்.

விழிகளில் காய்ந்து போன
கண்ணீரின் உப்பெடுத்து
காயங்களில் பூசி
வலி செய்வோம்.

பல முறை சந்தித்தோம்
ஒரு முறையே பேசினோம்
பொன் முடிச்சு
மூன்றாய் விழ
முடிந்து வைத்தோம்
இல்லற அன்பினில்
எம் வாழ்வை

சுதந்திரம் என்ற வார்த்தை
உச்சரிக்கப்பட்ட போது
அச்சமுற்று
கள்வரைப் போல்
புலம் பெயர்ந்தோம்.

இரவு உறங்கிப்போகையிலும்
நாம் விழிகளில்
கனவு சுமந்தோம்.

பாதை தெரியாத பயணத்தில்
கனவாகிப் போன கனவுகளில்
எம் பிள்ளைகளை
திசை தெரியாது
சிதற விட்டோம்.

சிதறிய குட்டிகள் எம்
பன்பாட்டுக் கலாச்சார
வேர் பிடுங்கி
அந்நிய மண்ணெல்லாம்
புதைத்தார்கள்.

என் சகியே
திக்குத்தெரியாது
திசைகளற்று
தட்டுத்தடுமாறும்
நம் பிள்ளைகளுக்காகவும் சொல்லிவிடு
நமக்காகவும் ஒரு தேசம்
உயிர்ப்புடன் இயங்குகிறது.

https://tamileelamarchive.com/

# எரிமலை
# ERIMALAI

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை




www.erimalai.info

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு


- Tel: 01 43 58 11 42
- Fax: (33) 1 43 58 11 91
- e.mail: info@erimalai.info
- ERIMALAI,
  C/O T.C.C France,
  341, Rue Des Pyrenees,
  75020 Paris, FRANCE.

எரிமலை
ERIMALAI

https://tamileelamarchive.com/




ஏப்ரல் 2006